உதயன்
விலை ரூபா 20.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 16 திங்கட்கிழமை (01.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 248



04 72 ஆவது வருடத்தில் இலங்கை வங்கி



14 குகா ஏன் இலக்கு வைக்கப்பட்டார்



17 தேர்தல் மூலம் அரசுக்கு உறைப்பான செய்தி



25 இந்தியா முன்னிலை

இலங்கை அரசு மீது இந்திய மத்திய அரசு

# பொருளாதாரத் தடை; ஜெயலலிதா விடாப்பிடி

## நாடாளுமன்றின் மழைக்காலக் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் சர்ச்சையைக் கிளப்பும்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 1

**இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை தமிழக முதல்வர் ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்தி உள்ளார். இன்று தொடங்கும் இந்திய நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் இந்த விவகாரத்தைத் தமது கட்சியின் உறுப்பினர்கள் எழுப்புவார்கள் என்றும் அவர் அறிவித்துள்ளார். "இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றோம். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எமது உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்புவார்கள்" என்றார் ஜெயலலிதா.**

இன்று தொடங்கும் இந்திய நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் சர்ச்சையைக் கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அ.தி.மு.க. தவிர இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய மார்க்சிஸ்ட் கட்சி ஆகியனவும் பாரதிய ஜனதாக் கட்சியும் இந்த விவகாரத்தை வைத்து மத்திய அரசுக்கு இந்தக் கூட்டத் தொடரில் நெருக்கடி கொடுப்பதற்குத் தீர்மானித்துள்ளன.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் மற்றும் அடக்குமுறைகள் குறித்து இந்தியாவில் கடந்த சில வாரங்களாக பெரும் எழுச்சி நிலை உருவாகி வருகின்றது. கொழும்பு அரசு மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் இந்த நிலையை ஏற்படுத்தி உள்ளன.

அகில இந்தியக்

பக் 28




இந்திய மார்க்ஸியக் கட்சி சென்னையில் சனியன்று நடத்திய ஈழத் தமிழர் ஆதரவுக் கூட்டத்தில் சுரேஷ் எம்.பியுடன் உரையாடுகின்றார் பிரகாஷ் காரத்.

## குகநாதன் மீதான தாக்குதலை கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 01

*உதயன்* பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதலைக் கண்டித்து நாளை ஐந்து ஊடக அமைப்புகள் ஒன்றிணைந்து கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டம் நாளை செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு லிப்டன் சுற்றுவட்டத்தில் இடம்பெறும்.

குகநாதன் மீதான தாக்குதலை சகல உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக அமைப்புகளும் கண்டித்துள்ளன.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை தமிழ்ப் பத்திரிகையாளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை ஊடக ஊழியர் தொழிற் சங்க சம்மேளனம் ஆகிய உள்ளூர் ஊடக அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

பக் 28

## விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஓக. 1

*உதயன்* பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மீது காடைத்தனமான தாக்குதலை நடத்தியவர் தொடர்பில் தீவிர நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பான அறிக்கையை தனக்கு உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார் என்று ஜனாதிபதி மாளிகை ஊடகப் பிரிவின் பணிப்பாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்தார்.

பணி முடித்து தனது வீடு திரும்பிக் கொண்டிருந்த குகநாதன் கடந்த வெள்ளிக் கிழமை இரவு இரு ஆயுததாரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்தார். பின்னந்தலையில் காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். நேற்று அவரது உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.(உ)

## இலங்கைப் பொருள்களை எதிர்த்து சென்னையில் கையெழுத்து வேட்டை

சென்னை, ஓக.1

இலங்கை உற்பத்திப் பொருள்களை ...காதீர்கள்- நிராகரியுங்கள் எனக் கோரி சென்னையில் இளைஞர் பட்டாளம் கையெழுத்து வேட்டையில் குதித்தது.

தமிழ் ஆர்வம் கொண்ட அமைப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவே இந்தக் கையெழுத்து இயக்கத்தை நேற்று சென்னையில் மெரினா கடற்கரையில் ஆரம்பித்தது.

இறுதி யுத்தத்தில் நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதையும் மனித உரிமைச் சட்டத்தின் படி இலங்கை ஓர் இனப்படுகொலை நாடு என்பதையும் பிரசாரப்படுத்தியே அங்கு கூடியிருந்த மக்களிடம் கையெழுத்துக்களைப் பெற்றனர்.

மெரினா கடற்கரையில் திரண்டிருந்த மக்கள் இந்தப் பரப்புரைக்கு ஆதரவு தெரிவித்து ஆர்வமுடன் கையெழுத்திட்டனர். (ஒ-வ)

## அரசு போரின் வெற்றி மமதையில் இருக்கிறது நிரந்தரத் தீர்வை முன்வைக்க அது தயாரில்லை

சென்னை, ஓக. 01

இலங்கை அரசு யுத்தத்தை வெற்றி கொண்ட மமதையில் இருக்கிறதே தவிர, தமிழ் மக்களின் மனங்களை வென்று அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு அது தயாரில்லை.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு மாநாடு கடந்த சனியன்று சென்னை பெரியார் திடலில் இடம்பெற்றது.

'இலங்கை தமிழர்களுக்கு சமஉரிமை மற்றும் அரசியல் தீர்வு' என்னும் தலைப்பில் இந்தச் சிறப்பு மாநாடு நடத்தப்பட்டது.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் உட்படப் பலர் இந்தச் சிறப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினர். சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு:-

அல்லலுறும் எமது மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் எமக்கு ஆதரவாக நடை

பக் 27

## நல்லிணக்கக்குழுவின் அறிக்கையை ஐ.நாவிடம் சமர்ப்பிக்க வலியுறுத்து

கொழும்பு, ஓக.01

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்ந்துவரும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபைக்கு சமர்ப்பிக்குமாறு இலங்கை அரசிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை கொழும்பில் உள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பக் 28

## சமல் தலைமையில் எம்.பிக்கள் குழு இந்தியா புறப்பாடு

கொழும்பு, ஓக.01

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்று இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றது.

பக் 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# ரணில் அவசரமாக நாடு திரும்புகிறார்

கொழும்பு, ஓக.01

பொதுநலவாய நாடாளுமன்ற கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக லண்டன் சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைத்துவ பிரச்சினையைத் தொடர்ந்து தனது பயணத்தை இடையில் முடித்துக்கொண்டு இன்று நாடு திரும்புகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க, ஓகஸ்ட் 3 ஆம் திகதி இலங்கைக்கு திரும்புவதற்கு திட்டமிட்டிருந்தார். எனினும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைத்துவ பிரச்சினையைத் தொடர்ந்து அவர் நாளை (இன்று) திங்கட்கிழமை நாடு திரும்புகிறார் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

# சந்தேகநபர்களைக் கைதுசெய்யவேண்டும்

## செய்தி ஆசிரியர் மீதான தாக்குதல் குறித்து விக்கிரமபாகு கருணாரட்ன அறிக்கை

கொழும்பு, ஓக.01

யாழ்.குடாநாட்டில் பாரபட்சமின்றித் துணிகரமாகச் செய்திகளை வெளியிடும் 'உதயன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஜி.குகநாதன் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள கண்மூடித்தனமான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

-இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

'உதயன்' பத்திரிகை பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் துணிகரமாக செய்திகளை வெளியிட்டு வருகின்றது. அவ்வாறானதொரு ஊடகத்தை முடக்குவதற்கான முயற்சியே செய்தி ஆசிரியர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமாகும். இதனைப் புதிய இடதுசாரி முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

'உதயன்' செய்தி ஆசிரியர் ஜி.குகநாதன் இதற்கு முன்னரும் இலக்கு வைக்கப்பட்டார். அதிர்ஷ்டவசமாக அவர் உயிர் தப்பினார். இந்நிலையிலேயே கடந்த வெள்ளிக்கிழமை அவர் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு 'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் அங்கிருந்த ஊழியர்களைச் சுட்டுக்கொன்றனர். எனவே இந்த விடயத்தில் பொலிஸர் தொடர்ந்தும் மௌனம் காக்காது சந்தேகநபர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முடிவடைந்த கையோடு இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் அரசியல் உள்ளது என்பது தெட்டத்தெளிவாகப் புலப்படுகின்றது. அரச தரப்பினரே இந்தக் கோழைத்தனமான தாக்குதலை நடத்தியிருப்பர் என நான் நினைக்கிறேன்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# உயர்தரப் பரீட்சைச் செயற்பாட்டில் ஈடுபடும் அலுவலருக்கு கூட்டம்

அச்சுவேலி, ஓக.1

ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சை தொடர்பான கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் 4ஆம் திகதி கோப்பாயிலும் நடைபெறவுள்ளன என்று பரீட்சை ஆணையாளர் ஆறுமுகம் சிவலிங்கம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

யாழ். மாவட்டம் இரண்டு பரீட்சை வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் 1 வலயத்தில் தீவக கல்வி வலயம், தென்மராட்சி கல்வி வலயம், யாழ். கல்வி வலயத்தில் நல்லூர் கல்விக் கோட்டம், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

யாழ்ப்பாணம் 2 பரீட்சை வலயம் வடமராட்சி கல்வி வலயம், வலிகாமம் கல்வி வலயம், யாழ் கல்வி வலயத்தில் கோப்பாய் கல்விக் கோட்டம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

யாழ்ப்பாணம் 1 ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் 3 ஆம் திகதி புதன்கிழமையும் யாழ்ப்பாணம் 2ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் 4ஆம் திகதி வியாழக்கிழமையும் அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-11)

# கோழைத்தனமான தாக்குதல் ரவூப் ஹக்கீம் அறிக்கை

அம்பாறை, ஓக.1

சிரேஷ்ட ஊடகவியலாளரும், உதயன் நாளிதழின் செய்தி ஆசிரியருமான ஞா. குகநாதன் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான இழி செயல்களையும், கோழைத்தனத்தையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கின்றது.

- இவ்வாறு நீதி அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கில் ஊடக நிறுவனங்களும், ஊடகவியலாளர்களும் தாக்குதல்களுக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்து வருவது வன்மையான கண்டனத்துக்குரியதாகும்.

செய்தி ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றிக்கொண்டு சுதந்திரமாக மக்களுக்காக எழுதிவரும் குகநாதன் நான் நேரில் நன்கு அறிந்த சிரேஷ்ட ஊடகவியளாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

இதழியல்துறையோடு தம்மை முழுமையாக ஈடுபடுத்தி அர்ப்பண சிந்தையோடு செயலாற்றும் குகநாதன் போன்ற ஊடகவியலாளர்களை, அச்சுறுத்திப் பணிய வைக்க எத்தனிப்பதும், அத்தகையோர் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களைத் தொடுப்பதும், இலங்கை போன்ற நாடுகளில் ஊடக சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் கேள்விக்குறியாக்கியிருக்கின்றது.

இவ்வாறான இழி செயல்களையும், கோழைத்தனத்தையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிக வன்மையாகக் கண்டிக்கிறது என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-30)



# சந்தியடிச் சோமு

## தலையையும் வாலையும் ஒரே நேரத்தில ஆட்டுறவைக்கு பதவிகள் காத்திருக்கு!

நேற்றுக் கள்ளுக்கு கொஞ்சம் தூரமா சைக்கிள் உளக்கிப் போனன். வீட்டோட வச்சு அறிஞ்ச தெரிஞ்சவைக்கு விக்கிற பெடியிண்ட வளவுக்க போயிருந்தா, நல்ல கணகணப்பு பாருங்கோ. பழைய கள நட்புகளையும் சந்திச்சதால நல்ல பேச்சுப் பந்தல். வழமைக்கு மாறா கொஞ்சம் உசாராக் கதை பறைஞ்சம்.

தேர்தல் முடிஞ்ச கைதானே! போதாக்குறைக்கு ஏதோ எல்லாம் பேசிற காலம் கனிஞ்ச மாதிரி ஒரு உணர்வு பீறிட்டுது பாருங்கோ. அதுதான் கண்டது கடியதெல்லாம் பேசிப்போட்டம். எங்கட கதையளக் கேட்டுக்கொண்டு ஒரு கூட்டம் சுத்திவர இருந்து கதை குடுத்துது. மறுத்தான் போட்டாக்களும் ஆமாப் போட்டாக்களுமா கன்னை பிரிஞ்சு கடும் ஆரவாரம்.

இதுகளைக் கேட்டுக்கொண்டு பிளாவில வாத்துக் கொண்டிருந்த பொன்னுத்துரைக்கு எங்களில கொஞ்சம் கடுகடுப்பு. என்னடா என்ன நடந்தது ஏன் கடுகடுப்பா நிக்கிறாய்? எண்டு நான் கதையக் குடுக்க அவன் சொன்னான், "உனக்குத் தெரியாதண்ணை, உந்தத் தேர்தலுக்குப் பிறகு ஊர் பொறுப்பாளர்மார் கொதிப்பில நிக்கினம். எல்லாரையும் கவனிச்சுக் கொள்ளுறம் பொறுங்கோ வெண்டு வெருட்டிப்போட்டு போயிருக்கிறாங்கள். என்னென்ன சண்டப் பிரசண்டம் செய்யப்போறாங்களோ தெரியாது? அதுக்குள்ள நீங்கள் வேற இஞ்ச கண்டதையும் பறையிறியள், உந்தக் கதையள யாரும் போய்ச் சொன்னா காணும் என்ர தலையைச் சீவிப் போடுவாங்கள்" எண்டான்.

அதைக்கேட்ட, சுருட்டுக்காரச் சுந்தரம் "ஓம்! ஓம்! வலு கவனமாத்தான் இருக்கவேணும். தபால்ல வாக்களிச்சாக்கள் எல்லாரின்ட வாக்குக்ளையும் எடுத்து ஒரு விண்ணானம் முன்னாள் வடக்கு படைப் பொறுப்பாளரும் இன்னாள் ஆளுநருக்கும் கொடுத்திருக்காம். அவர் அதை வைச்சு ஒவ்வொருத்தரா பழிவாங்கல் நடவடிக்கை எடுக்க தொடங்கிட்டாராம். கல்விக்குப் பொறுப்பான வரை தூக்கினது அதின்ர ஒரு நடவடிக்கைதானாம் எண்டு கேள்விப்பட்டன்" எண்டார்.

"அதென்னண்டு? வோட்டிங் ஷீட்டில பேர் போட்டே அனுப்பிறவை? பிறகென்னன்டு அதை வச்சு ஆருக்கு ஆர் வோட்டுப் போட்டவை எண்டு கண்டு பிடிக்கிறது? உதெல்லாம் விசர்க் கதை. இவங்கள் ஒருத்தருக்கு ஒருத்தர் காலை வாரி விடுறத்துக்காக மற்றவையள பெரிசுகளிட்ட காட்டிக் குடுக்கிறவங்கள். கல்வி அதிகாரிக்கும் அதுதான் நடந்தது" என்டான் தம்பி சுஜீவன். அவன் கள்ளடிக்காட்டிக்கும் இந்த மாதிரிச் சமாக்களுக்கு வந்திடுவான். ஆளுக்கு அரசியலில போகவேணும் எண்டு ஆசை. அதுதான் பழசுகளின்ர கூட்டணியில் ஆளைக் காணக் கிடைக்கும். எண்டாலும் என்ர சினேகிதன் வேதநாயகத்தின்ர மகன்தான். அந்தாள் போய்ச் சேர்ந்திட்டுது. இவன் காச்சட்டை போடாமல் திரிஞ்ச காலத்தில இருந்து எனக்குத் தெரியும்.

பின்ன நான் கேட்டன், "அப்பச் சரி கல்வி அதிகாரிக்கு என்ன நடந்தது எண்டு சொல்லன்" எண்டு.

"எலக்ஸன் டைமில ஒருமாசமா அவர் நாட்டில இல்லை. வெளியால போட்டார். எலக்ஸனுக்கு இரண்டு மூண்டு நாள் முன்னம்தான் வந்தவர். இஞ்ச நடந்த களபுலாக்கள் தெரியாமல் இருந்ததால, எலக்ஸனுக்கு ரெண்டு நாளுக்கு முன்னம் நடந்த மீட்டிங்குக்கு இவர் போகேல்ல. ஸ்டாவ் எல்லாரையும் மீட்டிங்குக்குப் போங்கோ எண்டு சொல்லிப் போட்டு, ஆள் காரைநகரில சொந்தக் கோயிலைப் பாக்கப் போட்டு. இதுதான் தருணம் எண்டு ஆளுநரிட்ட போட்டுக் குடுத்திட்டாங்கள். நீங்கள் இஞ்ச வச்ச மீட்டிங்குக்கு வராம காரைநகருக்குப் போய் பச்சக் கட்சிக்கு ஆதரவாப் பிரச்சாரம் செய்யிறார் எண்டு சொல்லி ஆளுநருக்குக் கடுப்பேத்திப் போட்டாங்கள். பின்ன அவருக்குச் சன்னதம் வந்திட்டுது. அந்தாள் பாவம், கோயிலில சாமியைப் பாக்க போய் ஆசாமிகளின்ர வேலையால வில்லங்கத்தில மாட்டி நிக்குது" எண்டு முழு விவரமும் சொன்னான் சுஜீவன்.

"ஜனநாயகம் எண்ட போர்வையில இராணுவ ஆட்சியை நடத்தப் போடுற தெருக்கூத்துக்களுக்கு ஒருத்தரைப் பொறுப்பாப் போட்டதில, தனக்குத் தெரிஞ்ச சின்னத்தனங்களை எல்லாம் செய்து ஜனநாயகத்தை சந்தி சிரிக்க வைக்கிறார் ஆளுநர். தான் நினைச்சதுகள் நடக்கேல்லை எண்டா உடன அவற்ற தாரக மந்திரம் இடம்மாற்று எண்டது தானாம். முதலொருக்கா கலாசாரத்துக்கு பொறுப்பான சீதேவிக்கு ஒத்துழைக்காத கலாசார உத்தியோகத்தர்மாரை இடம்மாற்று எண்டும் துள்ளினவராம். அவற்ற ஆட்சிப் பக்குவம் இவ்வளவுதான் பாருங்கோ!" எண்டார் சிவக்கொழுந்து வாத்தியார்.

நரி திராட்சைப்பழத்துக்கு எட்டி எட்டிப் பாத்து உந்தப்பழம் புளிக்கும் எண்ட கதையத்தான் இப்ப எங்கட ஆளும் தரப்புக்காரர் பெரிசில இருந்து சின்னன் வரை சொல்லியினம் பாருங்கோ. அதில முக்கியமானது றோட்டுக்கு லைற்றுப் பூட்டுற வேலைக்காகத்தான் எல்லாருமாச் சேந்து இஞ்ச வந்திருந்து இந்த முக்கு முக்கினாங்கள் எண்டு சொன்னதுதான் 'ஹைலைட்'. இது அங்க வந்திருந்த வேலும் மயிலுமிண்ட வியாக்கியானிப்பு.

"அதொண்டுமில்லை பி.பி. கூடினதால வந்த பிதற்றலாயிருக்கும். விளக்கம் கேட்டால் அமைச்சர்மார் விழல் கதைப்பினம் அதைக்கேட்டு எங்களுக்கு பி.பி. ஏறும். அதால ஒண்டும் கேக்காமல் இருப்பதே சிறந்தது" எண்டார் வடக்கன் வீரகத்தியர்.

"அது சரி! அதிகாரத்தில எல்லா இடங்களுக்கும் புதுசா ஆக்களை நியமிக்கப் போகினமாம். ஆளுநருக்கும் தியட்டர்காரருக்கும் 'யேஸ் மாஸ்ரர்' போடுறவைக்கு சிபாரிசு செய்யப்படுமாம். உண்மையோ?" எண்டார் பரஞ்சோதியர்.

"உது வழமையான சடங்குதானே தலையையும் வாலையும் ஒரே நேரத்தில தியட்டரில நின்று ஆட்டுறவைக்கு கௌரவப் பதவிகள், அதிகாரமற்ற பதவிகள், சின்னச்சின்ன பொறுப்புகள் வழங்கிறது சம்பிரதாயமா வந்திட்டுது. எல்லாத்தையும் பாழாக்கிறதுக்கு எப்பவோ தொடங்கிட்டாங்கள்" எண்டார் முருகமூத்தியர்.

"காலம் எப்பவும் ஒரே மாதிரி நெடுக இருக்காது. எல்லாம் கவுண்டு கொட்டுண்ணும். இருந்து பாருங்கோ!" எண்டபடி எழுந்தார் பரஞ்சோதியர்.

"வேற என்ன செய்யிறது..? இருந்தாப் பாப்பம்!" எண்டு சொல்லிப் போட்டு நானும் எழும்பி வந்திட்டன்.

*(நேற்றையதினம் வந்திருக்க வேண்டிய இந்தப் பத்தி தவிர்க்க முடியாத காரணத்தால் இன்றைதினம் வெளியாகிறது.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் செய்தி ஆசிரியர் மீது கொலை முயற்சி; பல்வேறு தரப்பினர் வெளியிட்ட கண்டனங்கள்

## கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுவதை தெளிவாகக் காட்டுகிறது இந்தத் தாக்குதல்

### இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் கடமை முடிந்து செல்லும்போது இனம்தெரியாத நபர்களால் அவரது வீட்டுக்கு அருகில் வைத்து தாக்கப் பட்டமை கருத்து மற்றும் பேச்சு சுதந் திரம் தொடந்து மறுக்கப்பட்டு வருகின்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை தமிழ் ஊடகவியலாளா் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக் கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டு ஆறு நாள்களுக்குள் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை பல சந்தேகங்களை தோற்றுவித்துள்ளதாகவும் ஒன்றியத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யுத்தத்துக்கு பின்னரான காலகட்டங்களில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஊடக சுதந்திரம், ஊடக ஜனநாயகம் மலர்ந்து விட்டது என்று அரசு கூறுகின்றது.

ஆனால் ஊடகவியலாளா்கள் மீது அச்சறுத்தல் கொலை மிரட்டல் மற்றும் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

ஊடகவியலாளர்கள் மீதான எந்த ஒரு தாக்குதல்கள் தொடர்பாகவும் இதுவரை பொலிஸார் உரிய விசாரணை நடத்தவில்லை. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் நிறுத்தப்படவும் இல்லை.

சில சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் அவர்களிடம் நேர்மையான முறையில் பொலிஸார் விசாரணை நடத்தவில்லை.

உதயன் செய்தியாளர் செ.கவிதரன் கடந்த மே மாதம் 28ஆம் திகதி இனம் தெரியாத குழுவினால் தாக்கப்பட்டிருந்தார். ஆனால் குற்றவாளிகள் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தமிழ் ஊடகத்துறை எவ்வாறான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி இருந்ததோ அவ்வாறான பிரச்சினைகள் யுத்தம் முடிவடைந்த பின்னரும் தொடர்கின்றன. உண்மை நிலைமைகளை அல்லது மக்களின் பிரச்சினைகளை வெளியே கொண்டு வருவது ஊடகங்களின் கடமை.

அது ஊடகங்களின் ஜனநாயக உரிமை. அதனை கட்டுப்படுத்த எந்த ஒரு ஜனநாயக அரசுகளுக்கும்கூட உரிமை இல்லாத நிலையில் படைகளின் உதவியுடன் செயற்படுவதாக கூறப்படும் ஆயுதக்குழுக்கள் எவ்வாறு சட்டத்தை கையில் எடுக்க முடியும்.

ஊடகத்துறை அமைச்சின் மீது தமிழ் ஊடக வியலாளர்கள் நம்பிக்கை வைக்க வேண்டுமானால், அரசு கூறுகின்ற ஊடக ஜனநாயகம் உண்மையானால் குகநாதன் மீதான தாக்குதலுடன் தொடர்புள்ள நபர்கள் அல்லது குழுக்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஒன்றியம் வலியுறுத்துகின்றது-என்றார்.

## தோல்வியைப் பொறுக்க முடியாதோரின் கோழைத்தனமான செயல்

### வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்

ஊடகத்துறையில் தனித்துவமாகவும் - பிரத்தியேகமாவும் செயற்பட்டு தமிழின விடிவிற்காக அயராது உழைத்தவர் உதயன் சிரேஷ்ட செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன்.

ஊடகத்துறையினரை தொடர்ந்து அழித்து வருகின்ற கும்பல் இந் நாட்டில் அதிகரித்துவிட்டது. இதனாலேயே உதயன் ஊடகத் துறையை செய்தி ஆசிரியர் குகநாதன் நேற்று முன்தினம் தாக்கப்பட்டுள்ளார்.

உதயன் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்ட செய்தியை கேட்ட சர்வதேசம் இன்று கவலை அடைந்துள்ளது. இவ்வாறு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, உதயன் பத்திரிகை ஊடகவியலாளர்களும், ஆசிரியர் பீடத்தினரும் இவ்வருடத்தில் பல தடவைகள் தாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான தாக்குதல் சம்பங்களை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த வன்தாக்குதல் மிலேச்சத்தனமானது. தமிழ் தேசியம் வளர வேண்டும். தமிழ் தேசியத்திற்கு ஊடாக மெய்யான தேசம் உருவாக வேண்டும் என்பதனை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக முழுமையான செயற்பட்ட குகநாதன் தாக்கப்பட்டுள்ளார்.

தோல்விகளை பொறுக்கமுடியாத வர்களே இவ்வாறான கோழைத்தனமான செயல்களை செய்வார்கள் என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊடகத்துக்கு எதிரான பயங்கரவாதம் குகநாதனையும் விட்டு வைக்கவில்லை

### சிவராம் ஞாபகார்த்த மன்றம் கண்டனம்

மூத்த பத்திரிகையாளர் குகநாதன் குண்டர்களின் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதை சிவராம் ஞாபகார்த்த மன்றம் வன்மையாக கண்டிக்கின்றது.

ஜனநாயகச் சூழல் உருவாகியுள்ளது என்று அரசு கூறிவரும் இவ்வேளையில் ஊடகங்களுக்கெதிரான பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

நீண்ட கால போர்ச் சூழலில் சிக்கியிருந்த இலங்கை ஊடகத்துறை தற்போது சுதந்திரமாக செயற்பட வாய்ப்புக்கள் கிடைத்திருப்பதாக அவ்வப்போது அரச தரப்பு தெரிவித்தும் வருகின்றது.

எனினும் ஊடகத்துக்கு எதிரான பயரங்கரவாதத்துக்கு துணை போகின்றவர்களையும், சம்பந்தப்பட்டவர்களையும் சட்டத்துக்கு முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று சொல்லுமளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன, இதற்கிடையில் ஊடகத்துக்கு எதிரான பயங்கரவாதத்துக்கு எதிராக குரல் கொடுப்பவர்களையும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு அவர்களும் முடக்கப்பட்டுள்ளனர்.

தவிரவும், ஞானசுந்தரம் குகநாதன் போர்ச் சூழ்நிலைகளின் மத்தியில் ஊடகத் துறையில் பணியாற்றியுள்ளார், பல வரலாற்றுக் காலங்களையும், பல வரலாற்று நிகழ்வுகளையும் கண்டும் அனுபவித்தும், சகித்தும், சாதித்தும், எதிர்த்தும், எழுதியும் உள்ளார். பல அரசியல் தலைவர்களிடம் மரியாதைக்குரியவராகவும், செல்வாக்குள்ளவராகவும் இருக்கின்றார். இவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஊடகத்துறைக்கு மட்டுமல்ல வரலாறுகளை நேசிப்பவர்களையும் ஜனநாயகத்தை மதிப்பவர்களையும் அச் சுறுத்துவதாகவே அமைந்துள்ளது.

பல தொடர்ச்சியான தாக்குதல் முயற்சிகள் ஞானசுந்தரம் குகநாதன் மீது மேற்கொள்ளப் பட்டபோது தொய்வதீனமாக தப்பிப்பிழைத்த அவர் தொடர்ந்தும் குடாநாட்டை விட்டுவெளியேறாது தற்துணிவுடன் வாழ்ந்து வந்தார். இந்த நிலையில் துரதிஷ்டவசமாக கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார் என்ற செய்தி எம்மை கவலைக்குள்ளாக்கியுள்ளது.

என்று அந்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

## மூத்த பத்திரிகையாளர் மீது கொலை முயற்சி நடத்தியோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்

### விஜயகலா எம்.பி வலியுறுத்து

உதயன் பத்திரிகையின் பிரதம செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டமை ஊடக சுதந்திரத்தை நசுக்குகின்ற செயலாகும். இத்தகைய செயற்பாட்டினை வன்மையாக கண்டிக்கின்றேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உதயன் பத்திரிகையின் பிரதம செய்தி ஆசிரியர் குகநாதன் தாக்கப்பட்டமையைக் கண்டித்து பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் அறிக்கையொன்றினை விடுத்துள்ளார். அந்த கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

குடாநாட்டில் உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் குகநாதன் தாக்கப்பட்டமை ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். உதயன் பத்திரிகையின் ஊடகவியலாளர்கள், ஊழியர்கள் பல தடவை தாக்கப்பட்டுள்ளனர். உதயன் பத்திரிகை நிறு வனமும் தாக்குதலுக்குள்ளாகியிருந்தது. உதயன் பத்திரிகை நிறுவனத்தின் மீதான தாக்குதலின் போது இரு ஊழியர்கள் பலியாகியுமிருந்தனர்.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்து விட்ட நிலையில் குடாநாட்டில் தொடர்ந்தும் பத்திரிகை யாளர்கள் அச்சுறுத்தப்பட்டும் தாக்குதலுக்குள்ளாகியும் வருகின்றனர். இத்தகைய செயற்பாடானது குடாநாட்டில் இன்னமும் சகஜ நிலை ஏற்படவில்லை அங்கு ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனம் தொடருகின்றது என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

குகநாதன் மீது தாக்குதல் நடத்திய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் தாக்குதலுக்கான சூத்திரதாரிகளும் இனங்காணப்பட வேண்டும்.

பத்திரிகையாளர் குகநாதன் மீதான தாக்கு தலானது அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. எனவே தாக்குதல் சூத்திர தாரிகளை கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

இந்த பொறுப்பிலிருந்து அரசு தவறுமானால் இலங்கையின் ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை மீண்டும் சர்வதேசத்துக்கு நிரூபணமாகும். எனவே எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல்கள் நடைபெறாத வண்ணம் அரசாங்கம் பத்திரிகையாளர்களுக்கும் பத்திரிகை நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றுள்ளது. (ம)

## ஓர் இனத்தின் உண்மைகளை கருவறுப்பதற்கான தாக்குதல்

### கண்டிக்கிறார் சிறிதரன் எம்.பி

உதயன் ஊடக நிறுவனத் தின் செய்தி ஆசிரியர் திரு.குகநாதன் அவர்கள் மிக மோசமாக தாக்கப்பட்டமை குறித்து கவலை அடைவதுடன் மோசமானதும் ஊடகப் பண்பாடரற்றதுமான இத்தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போருக்கு முன்பும் பின்பு மாக தமிழ்ஊடகங்கள் காலத் துக்கு காலம் தாக்குதலை எதிர் கொண்டே வருகின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணத்தின் உதயன் பல கொலைகளையும் எரியுட்டல்களையும் எச்சரிக்கைகளையும் தடை உத்தரவுகளையும் தாங்கி பயணிக்கும் அதன் வரலாற்றை உலகறியும் அதன் தொடர்ச்சியாக குகநா தன் மீதான தாக்குதல் போருக் குப் பிந்திய ஜனநாயகம் ஊடகப் பன்முகம் அஞ்சாமை நடுநிலைமை போன்ற ஊடக கோட்பாடுகளை தகர்த்து விடுவதற்கான வன்முறையாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

இதன் முலம் ஒரு இனத் தினுடைய சமுகத்தினுடைய உண்மைகளை கருவறுத்து விடலாமென அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் இத்தாக்குதலின் பின்னரும் உதயனின் ஊடகப் பயணம் வலிமையுடன் தொடருமென்பதே அசைக்க முடியாத உண்மை. எப்படி இருந்த போதும் இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடு படுகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறு கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் போருக்குப் பிந்திய இலங்கையில் ஊடகப் பயங்கரவாதம் நிலவுவதையே வெளிப் படுத்தும்- என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72 ஆவது வருடத்தில் தடம்பதிக்கும் இலங்கை வங்கி



1939 ஓகஸ்ட் முதலாம் திகதி ஸ்தாபிக்கப்பட்டதும் வங்கித்துறையில் ஈடிணை யில்லாத பல்வேறு சாதனைகளை மேற்கொண்டு உயர்தரமானதும் அர்ப்பணிப்பானது மானவங்கிச்சேவைகளை மக்களுக்கு வழங்கி 'தேசத்தின் வங்கியாளர்' என்ற பெயர் பெற்றதுமான இலங்கை வங்கி இன்று அதன் 72 ஆவது வருடாந்த ஸ்தாபக தினத்தை விமரிசையாகக் கொண்டாடுகிறது.

இலங்கை வங்கி அரசு ஆதரவுடன் ஸ்தாபிக்கப்பட்டதன் அடிப்படையானதும் தேசத்தினதும் மக்களினதும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மேம்பாடுகள் சம்பந்தப்பட்டதுமான சிறப்பான காரணிகள் பலவுள்ளன. இந்த வகையில் நாடளாவிய ரீதியில் விவசாயம், கைத்தொழில், கடற்றொழில், வர்த்தகம், நிதித்துறை, கல்வி, சேமிப்புத் துறை, வெளிநாட்டு நிதி, வர்த்தக மற்றும் கல்வித் தொடர்புகள் ஆகிய துறைகளில் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மேற்படி துறைகளுடன் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் நிதி உதவிகளையும் ஆதரவையும் வழங்கு வதன் மூலம் தேசத்தின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரங்களை உன்னத நிலைக்கு உயர்த்துவதே இலங்கை வங்கியின் ஸ்தாபித குறிக்கோளும் இலக்குமாகும்.

இந்த வகையில் தேசத்தினதும் மக்களினதும் பொருளாதார அபிவிருத்திக்காக இலங்கை வங்கி 1939 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு நிதி உதவித் திட்டங்கள், சலுகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்துள்ளது.

அதேவேளை நகரங்கள், புறநகர்ப் பிரதேசங்கள், கிராமங்கள், சிறுகிராமங்கள் என நாடளாவியரீதியில் தேசத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பரவலாக இலங்கை வங்கி அதன் வங் கிச் சேவைகளை விஸ்தரித்துச் சிறப்பாக வழங்கி வருகிறது.

1939 ஓகஸ்டில் அரச சார்பு வங்கியாக உருவாக்கப்பட்ட இலங்கை வங்கி 1961 ஜூலையில் முற்றிலும் அரச வங்கியாக மாற்றப்பட்டு அரசு டைமையான பின்னர் தேசத்தினதும் மக்களினதும் பொருளாதார அபிவிருத்திக்காக அரசு வகுக்கும் திட்டங்களுக்கான இலங்கை வங்கியின் பங்களிப்புகள் வெகுவாக அதிகரித்து வந்துள்ளன. இந்த வகையில் அந்நியச் செலாவணியை மீதப்படுத்துவதும் அதிகரிப்பதுமான கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அவற்றைப் பெரிய அளவிலும், சிறிய அளவிலும் மேற்கொள்ளும் தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் வழங்கல்களை இலங்கை வங்கி கடந்த காலங்களில் வெகுவாக அதிகரித்துள்ளது. அத்துடன் அரசின் ஏனைய அபிவிருத்தித்திட்டங்களிலும் இலங்கைவங்கியின் நிதிப் பங்களிப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கைத்தொழில் வர்த்தகத்துறைகளில் இலங்கை வங்கியின்கூடுதல் பங்களிப்பு நாடளாவிய ரீதியில் பொருளாதாரம், தொழில் வாய்ப்புகள், வாழ்க்கைத் தரம் ஆகியன அபிவிருத்தியடைவதற்கு வழிகாட்டியுள்ளன. மேலும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் சம்பந்தப்பட்ட உள்ளூர் கைத்தொழில்களுக்கான நிதி உதவிகள் மூலம் இலங்கையில் முதலீடு செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தொகையும் அதிகரித்துள்ளது.

அடுத்து மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் பல்வேறு சேமிப்புத் திட்டங்கள், சலுகைகள் மூலமும் இலங்கை வங்கி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் முன்னணியிலுள்ளது. இந்தவகையில் இலங்கையில் முதன்முதலில் சிறுவருக்கான சேமிப்புத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தது இலங்கை வங்கியே ஆகும். இவ்வாறு அனைத்து வயதுத் தரப்பினருக்கும் இலங்கை வங்கி அறிமுகப்படுத்திய சேமிப்புத் திட்டங்களே இன்று மக்களின் முதற்தரமான சேமிப்புத் தெரிவுகளாக முன்னணியில் விளங்குகின்றன.

இதன் தொடர்ச்சியாக இன்று நடைபெறும் 72 ஆவது வருடாந்த ஸ்தாபித தினத்தையொட்டி இந்தத்தினத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கும் அவர்களின் பெயரில் ஆரம்பிக்கப்படும் 'ரன் கெகுளு' கணக்குகளுக்கான விஷேட பரிசுகளை இலங்கை வங்கி வழங்குகிறது.

இலங்கை வங்கி தற்போது ரூ. 750 பில்லியனுக்கு மேற்பட்ட வங்கிச் சொத்துகளையும் 9 மில்லியனுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களையும் உடையதாக இலங்கையில் மிகப்பெரிய வர்த்தக வங்கியாக முன்னணியில் விளங்குகிறது. இலங்கை வங்கி தற்போது நாடெங்கும் 306 வங்கிக் கிளைகளையும் 231 விஸ்தரிப்பு வங்கி அலுவலகங்களையும் 384 ATM தன்னியக்க இயந்திர நிலையங்களையும் உடையதாக நாடளாவிய பரந்த வங்கிச் சேவைகளை வழங்கி வருகிறது.

மேலும் சென்னை, மாலைதீவு, லண்டன் ஆகிய நகரங்களில் செயற்படும் இலங்கை வங்கியின் சர்வதேச வங்கிச் சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

## தவறி விட்டது

அராலி தெற்கு எனும் முகவரியுடைய கந்தையா அழகுராணி என்பவரின் தேசிய அடையாள அட்டை (537850577 X) மற்றும் ச.அழகுராணியின் தற்காலிக அடையாள அட்டை (2089642) என்பன முழங்காவிலுக்கும் பூநகரிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0214917606 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## உத்தியோகபூர்வ முடிவுகள்

சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 630
திகதி 30/07/2011

சுப்பர் இலக்கம்: 09
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 14 29 40 60

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,683,512.00 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 09 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 255 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 454 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 12,591 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 7,259 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 181,089 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 28,892 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,163,080.00

[illegible]

அடுத்த புதன்கிழமை ரூ. 11,010,960,00

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk



கோப்பாய் மத்தி நாவலடி
திருவருள்மிகு
ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள்
தேவஸ்தான இரதோற்சவம்

01.08.2011 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 7.30 மணிக்கு வசந்தமண்டப பூசையும், 9.00 மணிக்கு இரதோற்சவ பவனியும் இடம்பெறும். அம்பாளின் அருள்பெற அனைவரும் வரவும்.
மகேஸ்வர பூசையும் உண்டு.

உற்சவ கால குரு:
சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள் (ஊரெழு)
நித்திய குரு:
பிரம்மஸ்ரீ சி.சிவசரவணபவ சிவமோகன சர்மா (கோப்பாய்)

விளம்பர அனுசரணை
மாஸ்டர் வீடியோ அன் போட்டோ
உரிமையாளர் லோ.கிரேதாகரன் (கோப்பாய் மத்தி)



CCNA
புதிய வகுப்புக்கள் விரைவில்
100% Exam pass Guarantee
* Hands on Experience with Real Cisco Routers & Switches
* Past Exam Questions will be discussing along with every related modules
IDM
CISCO CCNA
Jaffna Branch # 216 Navalar Road, Jaffna, Sri Lanka
T: 021 222 9901 | info@idmjaffna.com | www.idmjaffna.com



கணினி மற்றும் வர்த்தக துறையில் பட்டதாரியாகுங்கள்!
North Lanka I I T
#113, Luxan Plaza, Navalar Road, Jaffna. Phone:- 021 5677774
மிகக் குறைந்த கட்டணத்தில் அரச அங்கீகாரமுடைய
British பல்கலைக்கழக சான்றிதழைப் பெறுங்கள்!
1. B.Sc. in Comp.Sc.
2. B.Com. with Comp. Application
வங்கிக் கடன் வசதிகள், வேலைவாய்ப்பிற்கான ஆலோசனைகள் நேரில்!
காலம்:— 01 வருடம் | தகமை:— HND/HNDA or Advanced Diploma
காலம்:— 02 — 03 வருடங்கள் | தகமை:— O/L or A/L
New Batch ஆரம்பம்!




ஸ்ரீ சாயிபாபா ஜோதிடம்
ஜோதிடர் - ராம் தேவ் சுவாமி
தொ.பே : 077 9755542

இந்தியாவிலிந்து வருகைதந்துள்ள சாய்ராம் குருக்களின் சிஷ்யன் ராம்தேவ் சுவாமி கைரேகை, ஜாதகம், முத்துக்கள் மூலம் நல்ல முறையில் சாத்திரம் கூறுவார்.
சந்திக்கும் நேரம் : காலை 8 மணி - பி.ப. 6 மணி வரை.
தொடர்பு -இல: 63, பெரியகடை வீதி, (சிவகணேசன் ரெக்ஸ் பாதையில்) யாழ்ப்பாணம்.



கொக்குவில் மேற்கு பிடாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா

காலை 7.00 மணி வசந்த மண்டபப் பூசை
மு.ப 10.00 மணி தேர்ப்பவனி
மாலை 3.30 பச்சை சாத்தும் வைபவம்
ந.பகல் 12.00 மணியளவில் ஆலயமணி மண்டபத்தில் விசேட நாதஸ்வர இசைக்கச்சேரி
தவில்
எஸ்.சுதாகரன், கே.என்.ராமநாதன் குழுவினர்
முருகையா, தென்னிந்திய புகழ் பிரசன்னா, நந்தன்
நாதஸ்வரம்
வழக்கம்பரை சிவகுமார், கே.என்.ராமநாதன் புதல்வர்கள், தாவடியூர் குகன்.
- தேர்த்திருவிழா உபயகாரர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 'டிமார்ச்சி' என்ற புதிய வலைவீச்சு

அமெரிக்கா - அந்நாட்டு அரசு - எமது நாட்டு அரசாங்கத்துக்கு மற்றொரு அரசியல் ''டோஸ்'' கொடுத்திருக்கின்றது. அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில், இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அமெரிக்கா, 'டிமார்ச்சி' வழங்கி இருக்கின்றது.

''டிமார்ச்சி'' என்ற பிரெஞ்சு வார்த்தையின் அர்த்தம்: ஒரு குறிப்பிட்ட விடயத்தில் ஓர் அரசினுடைய உத்தியோகபூர்வ நிலைப்பாடு, கருத்துக்கள், விருப்பங்கள் எவை என்று தெரிவிக்குமாறுகோரும் ராஜதந்திர நிலைப்பாடாகும்.

அமெரிக்காவின் ''டிமார்ச்சி'' கடந்த ஜூன் மாதத்திலேயே, கொழும்பில் உள்ள அந்நாட்டின் தூதரகத்தினால், வெளிநாட்டு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இலங்கை அரசாங்கம் இன்னும் அதற்குப் பதில் அளிக்கவில்லை.

இந்த மாதத்திலேனும் பதில் வழங்கப்படுமா என்றால், இல்லை என்றே தோன்றுகின்றது. அமெரிக்க அரசின் கோரிக்கையை, எமது நாட்டு அரசு நிராகரிக்கும் என்பது முடிவாகிவிட்டதாக நம்பிக்கையாக அறியப்படுகின்றது.

அதற்கான காரணங்களும் கசிந்துள்ளன. அமெரிக்காவின் மேற்குறிப்பிட்ட கோரிக்கைக்கு இணங்கினால், இந்நாட்டின் - அரசின் - மனித உரிமைகளைப் பேணும் ஏற்பாடுகள் குறித்து அந்த நாடு தொடர்ந்து அவதானிக்கவும் கண்காணிக்கவும் வாய்ப்பளிப்பதாகிவிடும் என்பதே அவற்றில் பிரதானமானது.

அத்தகைய ஒரு வாய்ப்பை அமெரிக்காவுக்கு வழங்கினால் - இல்லை இல்லை - மாட்டிக்கொண்டால், இலங்கைக்கு எதிராக - அதன் வேறுபல செயற்பாடுகள் தொடர்பாகவும் அனைத்துலக மட்டத்தில் சிக்கிக்கொள்ள நேரிடும் என்று அரசு அஞ்சுவதாகச் சொல்லப்படுகின்றது.

அமெரிக்க அரசு புதிதாக வழங்கியுள்ள 'டோஸ்', இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் - போர்க்குற்றங்கள் - குறித்து அடுத்த மாதத்தில் - செப்ரெம்பரில் - ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் விவாதிப்பதை தாமதிக்கச்செய்யுமா என்பது குறித்தும் உருப்படியான, உறுதி செய்யப்பட்ட தகவல்கள் எதுவும் இல்லை.

இலங்கை அரசு நியமித்துள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைக் காலம் முடிவுற்று, அதன் அறிக்கை நவம்பர் மாதத்திலேயே - இன்னும் மூன்று மாதங்களிலேயே - உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அது வெளியான பின்னரே, இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் விவாதத்துக்கு எடுப்பதற்கு வசதியாக, அமெரிக்கா தனது செல்வாக்கைச் செலுத்தக் கூடும் எனவும் விடயம் அறிந்த வட்டாரங்கள் ஊகம் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும்-

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் விசாரணை நடத்தாவிடில், அமெரிக்காவின் நிதி உதவிகள் நிறுத்தப்படும் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தில், ஆளும் கட்சியான ஜனநாயகக் கட்சியினால் வெளிவிவகாரக் குழுவில் தீர்மானம் இயற்றப்பட்ட போதிலும், அது நாடாளுமன்றத்தில் சட்ட ஏற்பாடுகளுடன் நிறைவேற்றப்படவில்லை. எனினும் அதற்கான பணிகள் துரிதகதியில் நடைபெறுவதாகப் பொறுப்பு வாய்ந்தவர்களால் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும்-

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்ற பொறியில் இருந்து இலங்கை அரசு மீண்டெழுவது என்பது இலகுவான விவகாரம் அல்ல என்பதனை அரசாங்கம் ஆழமாகவும் அகலமாகவும் உணர்ந்துள்ளது.

அதன் வெளிப்பாடுகளில் ஒன்றுதான், அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அந்நாட்டின் வெளியுறவுச் செயலாளரும் முன்னாள் இலங்கைத் தூதுவருமான நிருபமா ராவ் கொழும்புக்கு அழைக்கப்பட்டு, ஜனாதிபதியால் உபசரிக்கப்பட்ட விசேஷம்.

அமெரிக்காவுக்குப் போகிறீர்கள். அந்த நாடு எம்மீது போடும் அழுத்தங்களைக் குறைக்க உதவுங்கள் என்று எமது ஜனாதிபதி அவரிடம் பவ்வியமான வேண்டுகோளை விடுத்திருப்பாரோ என்னவோ....!

ஆனால், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கை கட்டாயம் பரிசீலிக்க வேண்டும் என்று நிருபமா ராவ் இந்திய ஊடகம் ஒன்றுக்கு கொழும்புக்கு வருவதற்கு முன்னர் வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார்.

சனல்-4 காணொளியின் பிரகாரம், போரின் இறுதிநாள்களில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளன என்று ஊகிக்க வேண்டி உள்ளது. அவை போர் வலயச் சம்பவங்களாகும். சில விடயங்கள் குறித்து இந்தியா தொடர்ந்தும் இலங்கையுடன் பேச்சுக்களை நடத்தும். -

இலங்கையின் அயல்நாடு என்பதால் இந்தியா அதனுடன் நேரடியாகப் பேச வேண்டியுள்ளது. போரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை நோக்கும்போதும் காயப்பட்டவர்கள், இடம் பெயர்ந்தவர்களைக் கணக்கிடும்போதும் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப்போர் ஓர் சோகச் சம்பவம்தான்.-

இலங்கையுடன் எமது நாட்டு அரசு தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தும். மூன்றாம் தரப்பினரின் தலையீட்டை நிறுத்தவேண்டும் - என்றும் கொழும்புக்கு வருவதற்கு முன்னர் தமது செவ்வியில் நிருபமா குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இங்கு ஜனாதிபதிக்கு வாக்குறுதி எதனையும் அளித்தாரா என்பது பற்றி இப்பத்தி எழுதப்படும்வரை தகவல் எதுவும் இல்லை.

எது எவ்வாறாயினும், அமெரிக்காவுடன் எதிர்க்கோணத்தில் நின்று இந்தியா பேசுவதற்கு வாய்ப்பில்லை. எதற்கும் போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் மீறப்பட்டமை என்ற வகையில் சிக்கியுள்ள எமது நாட்டு அரசு, அதிலிருந்து விடுபடுவதோ, அதனை அறுத்துக் கொண்டு வெளியே வருவதோ, எள்ளளவும் இலகுவல்ல என்பதனை எந்தக் கட்டத்தில் உணரப்போகிறது என்பது இப்போதைக்குத் தென்படவில்லை. எதற்கும் காலம் தனது தகுந்த பதிலைச் சொல்லும்.

# பிரேமா குழுவின் முயற்சி மீண்டும் ஐ.தே.கவில் படுதோல்வியில் முடிவு

நேற்று 31-07-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடைந்தமைக்கான இரண்டு காரணங்களை அந்தக் கட்சியின் முக்கியஸ்தரும் ஊடக தொடர்பாளருமான மங்கள சமரவீர கடந்தவாரம் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் வாசஸ்தலத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது விளக்கிக்கூறினார்.

ஒரு காரணம் ராஜபக்ஷ நிர்வாகம் நடத்திய தேர்தலை மக்கள் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டனர். ஜனாதிபதியும்கூட அதிகாரங்களை தவறாக பயன்படுத்தியிருந்தார். ஜனாதிபதி அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டுவிட்டதால் மக்கள் தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தின் மீது வைத்திருந்த சிறிது நம்பிக்கையும் தொலைந்து போய்விட்டது என்று சமரவீர கூறினார்.

இரண்டாவதாக அவர் கூறிய காரணம் கட்சிக்குள்ளேயே உருவாகியுள்ள பிரச்சினைகள் என்றார் அவர். சிலர் அனுரா-ஸ்ரீமா மோதல்கள் போன்று கட்சிக்குள் பிரச்சினைகளை உருவாக்கப்பார்க்கிறார்கள் என்றார். உள்வீட்டு பிரச்சினைகள் பகிரங்கமாக அரசைக் குற்றஞ்சாட்டுவதற்குப் பதிலாக சில கட்சியைக் குற்றஞ்சாட்டுகிறார்கள். அரச ஊழல்களை எடுத்து விளக்குவதற்குப் பதிலாக கட்சிப் பிரச்சினைகளைப் பேசுவதற்கு கருத்தரங்குகள் வைக்கப்படுகின்றன. அக்குரஸ்ஸவிலும் இது தான் நடந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி பதவியிலிருந்தபோது ஐ.தே.க. வெற்றி பெற்றிருந்தது. இந்த முறை 5 ஆயிரம் வாக்குகளுக்கு மேல் நம்மால் பெற்றுகொள்ள முடியவில்லை. கட்சித் தலைமையைக் குற்றஞ்சாட்டிக்கொண்டிருப்பதை விடுத்து நாம் சரியாக பணியாற்றினோமா என்ற வகையில் நம்மை நாமே உள்நோக்கிப்பார்த்துக்கொள்ள வேண்டும். தரப்பட்டிருந்த பணிப்புரைக்கு ஏற்றவகையில் நாம் செயற்பட்டோமா, கட்சியை சீரமைப்புச் செய்திருக்கிறோமா, பெண்கள் அணிகள் மறு சீரமைக்கப்பட்டு விட்டனவா, இளைஞர் அமைப்புகள் அபிவிருத்திசெய்யப்பட்டு விட்டனவா இவைகளைத் தான் நாம் முதலில் கவனிக்கவேண்டும். வாக்காளர்கள் அளித்துள்ள செய்தி தெளிவாகவுள்ளது. நாம் ஒன்றுபட வேண்டும்.

ஆள்களின் மீது விரல்களை நீட்டிக்காட்டாதீர்கள் ஐ.தே. கட்சி திறமைசாலிகளைக் கொண்டதோர் கட்சி. எமக்கு நல்ல வளங்கள் உண்டு. எம் மதியில் ஊழல் அரசியல்வாதிகள் கிடையாது. நாம் ஒன்றுபட வேண்டும்'' என்று சமரவீர தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்கவும் ஐ.தே.கவின் ஏனைய தலைவர்களை நோக்கி விரலை நீட்டவுமாக சமரவீர தெரிவித்த கருத்துக்கள் தற்போது புதிய கூட்டு பிரதித் தலைவராக இருப்பவரான சஜித் பிரேமதாச குழுவினரைப் பொறுத்தவரை முள்ளுப் பற்றையில் சீலையைப் போட்ட மாதிரியாகிவிட்டது. அவர்கள் சமர வீரவின் கருத்துகள் வெளியான கையோடு பிரேமதாசவின் இல்லத்தில் கூடினார்கள். ஐ.தே.கவில் தலைமை மாற்றம் ஒன்றின் தேவை குறித்து அவர்கள் விவாதித்தார்கள். சமரவீரவின் குற்றச்சாட்டுகளை அவர்கள் கண்டித்தனர். தேர்தல் தோல்விக்கு தங்களை காரணம் காட்ட முற்படுகிறார்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளும்படியாக கரு ஜயசூரியாவைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

இந்த ஏற்பாட்டின் மீது வியாழக்கிழமை காலையில் அமரசேகர மாவத்தையிலுள்ள ஜயசூரியாவின் வாசஸ்தலத்தில் பிரேமதாசவும் அவரது சகாக்களும் வந்து சேர்ந்தார்கள். றோசி சேனநாயக்க, ரஞ்சித் மத்தும பண்டார, அசோக்கா அபேசிங்க, ருக்மன் சேனநாயக்க, ஷிரால் லக்திலக்க, தலதா அத்துகோரலே, ரஞ்சித் அத்த பத்து, சுஜீவசேனசிங்க மற்றும் உபுல் ஜயசூரிய ஆகியவர்களும் கலந்து கொண்ட முக்கியஸ்தவர்களாவர்.

சிற்றுண்டிகள், தேநீருக்கு மத்தியில் 45 நிமிடநேரம் ஆலோசனைகள் நடைபெற்றன. வந்திருந்தவர்களின் சார்பில் பிரேமதாசாதான் கரு ஜயசூரியாவுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தவர்.

ஜயசூரிய கட்சித் தலைமையைப் பொறுப்பேற்கவேண்டும். அவரால் தான் கட்சியின் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்று கூறிய பிரேமதாஸ, கட்சித் தலைவர் அரசுடன் இணக்கமாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டினார். உள்ளூராட்சி தேர்

## ரணிலுக்கு கட்சியில் இனி எதிர்ப்பாளர் இல்லை?

தலில் அரசுக்கு ஏற்பட்ட தோல்விக்கு கட்சி தலைவரை அவர் குற்றஞ்சாட்டினார்.

கருஜெயசூரிய வந்திருந்தவர்களின் வரவேற்பு ஆரவாரங்களுக்கிடையில் கட்சியின் தீர்மானப்படி நடந்துகொள்ள நான் தயாராய் இருக்கிறேன் என்று குறிப்பிட்டார். இதன் மூலம் கட்சியின் தலைமையை ஏற்றுக்கொள்ள அவர் தம் விருப்பத்தை தெரிவித்துவிட்டார்.

விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து எவ்வாறு நீக்குவதற்கு தமது குழு தீர்மானித்திருக் கிறது என்பதை பிரேமதாச விளக்கிக் கூறவில்லை. தலைமைப் பதவி தொடர்பாக வாக்கெடுப்பு ஒன்று நடைபெறும் சமயத்தில் என்ன நடக்கும் என்பதை இப்போது கூறமுடியாது.

பத்திரிகையாளர் சந்திப்பில் பிரேமதாச மகிழ்ச்சியுடன் கூறினார். தமது கோரிக்கையின் பேரில் ஜயசூரிய தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ள சம்மதித்துவிட்டார் என்பதாக.

பிரேமதசாவின் பத்திரிகையாளர் சந்திப்பு மற்றும் அதற்குப் பின்னரான விடயங்களை மகாராஜா தொலைக்காட்சி மற்றும் வானொலி வலையமைப்புகள் முற்றாக இருட்டடிப்பு செய்துவிட்டன. முன்பு பிரேமதாசாவுக்கு முழுமையாக ஆதரவளித்துவந்த இந்த ஊடகங்கள் ஜயசூரிய சம்பந்தமான விடயங்களை முழுதுமாக இருட்டடிப்பு செய்திருந்தன. பிரேமதாச முதலில் எதிர்த்தரப்பு ஊடகமான அததெரன தொலைக்காட்சி அலைவரிசையுடன் தொடர்பு வைத்துக்கொண்டமைக்கு எதிர்ப்பு தெரிவிப் பதற்காக இவ்வாறு இருட்டடிப்பு செய்யப்பட்டதாக தெரியவந்தது. அடுத்தநாள் வெள்ளிக்கிழமையன்று மகாராஜா தொலைக்காட்சி மங்கள சமரவீரவை பெரிதும் குற்றஞ்சாட்டும் வகையிலான காட்சிகளை வெளியிட்டிருந்தார்.

### தலைமைப் பதவி தனியார் சொத்து அல்ல

ஐ.தே.க. தொடர்பாடல் துறை தலைவரான மங்கள சமரவீராவுக்கு பல கையடக்க தொலைபேசி அழைப்புகள் வந்துகொண்டிருந்தன. அவைகளைக் கவனித்த பிறகு பத்திரிகையாளர் ஒருவரின் அழைப்புக்கு அவர் பதில் அளித்தபோது: தலைமைப் பதவியானது தனியாருக்கு சொந்தமான ஒரு சொத்து அல்ல எவரும் நினைத்த மாத்திரத்தில் எடுத்து இன்னொருவருக்கு வழங்கி விடுவதற்கு என்று கூறினார்.

செய்திகளில் உண்மையிருக்கிறதா என்று கட்சி உறுப்பினர் ஒருவர் கேட்டபோது கரு இப்படியானதொரு பெரிய பிழையை செய்வார் என்று நான் நினைக்கவில்லை. பல காரணங்களுக்காக அவர் தலையை ஆட்டியிருக்க முடியும் அதை அவர்கள் ஒப்புக் கொண்டு விட்டார் என்று அர்த்தம் கொண்டிருக்கலாம் என்று சமரவீர பகிடியாக குறிப்பிட்டார். அவர் உடனடியாகவே ஜயசூரியாவுக்கு ரெலிபோன் செய்தார், அவர் மரணச் சடங்கு ஒன்றுக்குச் சென்றிருப்பதாக தகவல் வந்தது.

வியாழக்கிழமை மாலையில் பிரேமதாசா கூறியவைகளுக்கு மேலும் வலுசேர்க்கும் கருத்துக்கள் வெளியாகியிருந்தன. எனது குழு இன்றைய தினத்திலிருந்து தலைமைப்பதவியை ஏற்று செயற்படும்படி கேட்டுக்

**தமிழில்: கோகுலன்**

கொண்டது - அதனை நானே அவருக்குத் தெரிவித்தேன். அதற்கு அவர் சாதகமான பதிலளித்தார் என்று பிரேமதாச கூறியிருந்தார்.

ஆனால் என்ன நடந்தது என்பதை விளக்கி ஜயசூரியாவே விளக்கம் அளித்திருந்தார். அவர் விடுத்திருந்த ஓர் அறிக்கையில் எனக்கு முன் வைக்கப்படும் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ள நான் சம்மதமாய் இருக்கிறேன் எனக்கு அவர்கள் தரும் ஆதரவை ஏற்று கட்சியை ஐக்கியப்படுத்தவும் முன்நோக்கி எடுத்துசெல்லவும் எனக்குள்ள எல்லாவித சக்தியை

(26 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று வலுவுடையோருக்கு செயற்கை அவயவங்கள்

## மக்கள் வங்கியின் ஓய்வூதியர் சங்கம் நேற்று வழங்கியது



யாழ்ப்பாணம், ஓக. 1

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட மக்கள் வங்கியின் ஓய்வூதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாற்று வலுவுடையோருக்கு செயற்கை அவயவங்கள் வழங்கும் நிகழ்வும் மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய அலுவலக பிரதான மண்டபத்தில் நடைபெற்றன.

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு களில் மக்கள் வங்கியின் வட மாகாண முகாமையாளர் ஆனந்தராஜா மற்றும் ஜெய்பூர் நிறுவனத்தின் தலைவர் வைத்திய நிபுணர் திருமதி கணேச மூர்த்தி மற்றும் மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளர் கள் ஊழியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் அனுமதியுடன் முச்சக்கரவண்டிகள், ஊன்றுகோல்கள் என்பன வழங்கப்பட்டன.அதனைத் தொடர்ந்து ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் வரவேற்புநடனம் சிறப்பு உரையாடல் நிகழ்வும் கருத்துப் பகிர்வும் இடம்பெற்றன. (ம-313)

# அடிப்படை வசதிகள் இன்றி மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்கள்

வலி.வடக்கு ஓக. 1

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மீள்குடியமர்வு இடம்பெற்ற போதிலும் சில கிராம அலுவலர் பிரிவுகளில் அடிப் படை வசதிகள் செய்யப்படாத நிலமை காணப்படுகிறது.

அண்மையில் அவசர அவசரமாக மீள்குடியமர அனுமதிக் கப்பட்டது.

மக்கள் உடன் மீள் குடியமர முடியாத நிலையிலுள்ள நிலையில் வேறு பிரதேசங்களில் தொடர்ந்தும் உள்ளனர்.

இந்த நிலையில் இவர்களுக்குத் தொடர்ந்தும் நிவாரணம் வழங்க அனுமதிக்குமாறு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஏனைய யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட ஜே/225 கொல்லங்கலட்டி, ஜே/226 நகுலேஸ்வரம்,ஜே/228 தெல்லிப்பழை,ஜே/230 தந்தை செல்வாபுரம்,ஜே/231 மாவிட்டபுரம், ஜே/232 மாவிட்டபுரம் தெற்கு ஆகிய பகுதிகளில் அடிப்படைவசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

தமக்கு உரிய வசதிகள் அற்ற நிலையில் தாம் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வாழ்ந்த இடங்களிலேயே தங்கியிருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-86)

# நல்லூர் உற்சவ வீதித்தடை

யாழ்ப்பாணம், ஓக. 1

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு பருத்தித்துறை வீதி, கோயில் வீதி, நல்லூர் செட்டித்தெரு குறுக்கு வீதி ஆகியன மூன்றாம் திகதி புதன்கிழமை காலை முதல் வீதித்தடை அமுல்படுத்தப்படவுள்ளதாக ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

# இணுவில் - மருதனார்மடம் வீதி அகலிப்புப் பணிகள் நிறுத்தம்

வலி.வடக்கு, ஓக.1

இணுவில் - மருதனார்மடத்துக்கு இடையே காங்கேசன்துறை வீதியில் இடம்பெற்ற வீதி அகலிப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்களுக்காக யாழ். குடாநாட்டில் தங்கியிருந்த அமைச்சர்களின் வாகனப் பயணத்துக்காக இந்தப் பணி நிறுத்தப்பட்டது.

கடந்த பல மாதங்களாக குறிப்பிட்ட பகுதியில் வீதி அகலிக்கும் பணி காரணமாக கிழக்குப்புற வீதியில் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படாது தடை செய்யப்பட்டும் இருந்தது.

அமைச்சர்களின் வாகன அணிப் பயணத்துக்காக குறிப்பிட்ட வீதி திறந்து விடப்பட்டது. இந்த நிலையில் தற்போது அந்த வீதி சேதம் அடைந்தும் காணப்படுகின்றது.

இந்த வீதியின் மேற்குப் பக்கத்தால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை உள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட ஒரு பகுதி வீதியும் சேதம் அடைந்து காணப்படுகிறது.

வாகனங்கள் செல்லும் போது வீதியில் எழும் தூசியால் பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் பெரும் துன்பங்களுக்கும் ஆளாகி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (ம-86)

சமூக நலனுக்காக....



கையளிப்பு: மட்டுவில் தெற்கு அ.மி.த.க வித்தியாலயத்தின் பழைய மாணவன் இராமுப்பிள்ளை நந்தகுமார் வித்தியாலயத்துக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கத்திடம் நந்தகுமார் குடும்பத்தினர் கதிரைகளில் ஒருதொகுதியைக் கையளித்தனர்.

# ‘யாழ். இலக்கியக் குவியம்’ அமைப்பு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஓக.1

றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இளம் இலக்கியத் துறையினரை ஒன்றிணைக்கும் நோக்குடன் யாழ்.இலக்கியக் குவியம் என்னும் அமைப்பு நாவலர் வீதியில் அமைந்துள்ள உதயன் விருந்தினர் விடுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் புதிய அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்-எஸ்.சோதிதாஸ், செயலாளர் யோ.நித்தியா, பொருளாளர்-சைலஜன் அரியாலைப் பகுதி இணைப்பாளர் ஐ.குமாரதாசன், வடமராட்சி இணைப்பாளர் துவாரகன், தீவக இணைப்பாளர் -ஜெயபாலன்.

வானொலி ஊடகத்துறை இணைப்பாளர் சு.முகுந்தன், ந.மணிவண்ணன்,தொடர்பாடல் இணைப்பாளர் நெடுந்தீவு முகிலன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் இலக்கியக் குவியத்தின் நோக்கம் அதன் செயற்பாடுகள் பற்றியும் இளம் சந்ததியினரிடையே காணப்படும் இலக்கிய தார்ப்பரியங்கள் போன்ற உரைகளும் இடம்பெற்றன. (ம-311)

# சுன்னாகம் பஸ் தரிப்பிடத்தில் கழிவு நீர் தேங்கி துர்நாற்றம்

வலி.வடக்கு, ஓக.1

சுன்னாகம் பஸ்தரிப்பிடச் சுற்றாடலில் துர்நாற்றம் வீசுவதால் பொது மக்கள் பலத்த சிரமங்களுக்கும் உள்ளாகின்றனர்.

சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியில் காணப்படும் கழிவு நீர் செல்லும் வாய்க்காலில் தேங்கும் கழிவு நீரால் இந்த துர்நாற்றம் வீசுவதாகக் கூறப்படுகிறது.

மீன் சந்தையில் இருந்துவரும் கழிவு நீரும் ஏனைய இடங்களில் கழிவு நீரும் சில இடங்களில் தேங்கி நிற்பதாகக் கூறப்படுகிறது.

நாளாந்தம் ஆயிரக்கணக்கான பொது மக்கள் இங்கு தரித்துச் செல்வதுடன் வர்த்தக நிலையங்கள் பலவும் காணப்படுகின்றன. பிரதேச சபையின் இந்த கழிவு வாய்க்காலை உரிய முறையில் துப்புரவு செய்ய வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-86)

# வணிகர் கழக வாழ்வாதார உதவி இதுவரை 120 குடும்பங்களுக்கு

வலி.வடக்கு ஓக.1

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தால் முன்னெடுக்கப்படவுள்ள வாழ்வாதார உதவித்திட்டத்தின்கீழ் இதுவரை சுமார் 120 குடும்பங்களுக்கு கோழி வளர்ப்புக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று வணிகர் சங்கத் தலைவர் ஆர். ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இன்னும் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவு, வேலணைப் பிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் அடுத்துவரும் வாரங்களில் இதனை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பயனாளிகளைத் தெரிவு செய்வதில் பிரதேச செயலாளர்கள் உதவி அரச அதிபர்கள் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களே செயல்பட்டு தெரிவு செய்கின்றனர்.

இந்தத் திட்டத்துக்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இரண்டரை லட்சம் ரூபா முதல் மூன்று லட்சம் ரூபா வரை முதலீடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

இத் திட்டத்துக்கு வேண்டிய நிதி உதவிகள் தனிப்பட்ட முறையில் வழங்குவதாகவும் அவர் மேலும் கூறினார். (ம-86)

# இரு கிராமிய வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

வரணி, ஓக.01

வரணிப் பிரதேசத்தில் இரண்டு கிராமிய வீதிகள் புனரமைக்க சாவகச்சேரி பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மாசேரிப் பிரிவினுள் மணிக்காவில் சந்தி, நாவலடி பிள்ளையார் வீதியும் வரணி வடக்குப் பிரதேசத்தில் தம்பான் பிரதேச வீதியும் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த வீதிகள் புனரமைப்புக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் தலா ஒரு லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார். (ம-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளில்

# வாக்காளரைப் பதிவு செய்வதற்கென வாக்கெடுப்பு மாவட்ட விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 1

மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்களில் வாக்காளர்களை மீளப்பதிவதற்கான அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வாக்கெடுப்பு மாவட்டங்களை அந்தந்த கிராம சேவகர்கள் பிரதேச செயலரின் அனுமதியுடன் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி அறிவித்துள்ளார்.

2011 வாக்காளர் இடாப்பு மீளாய்வு செய்யும் நடவடிக்கைகளில் அந்தந்த பிரிவு கிராம அலுவலர்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ளவர்கள் வாக்கொடுப்பு மாவட்டம் ஒன்றில் முற்றாக மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்களின் விவரங்கள் மட்டும் பீசி படிவத்தில் பூரணப்படுத்தி ஒப்படைப்பதுடன் இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமராதவர்கள் தற்போது வசிக்கும் பிரதேசத்திலேயே தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை, மீள்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் இந்தப் பிரதேசம் வாக்கெடுப்பு மாவட்டம் ஒன்றில் முற்றாகவோ பகுதியாகவோ மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசம் என்பதால் இவர்களிடமிருந்து படிவங்கள் எதுவும் பெறப்பட வேண்டியதில்லை.

அத்துடன் இந்தப் பிரதேச வாக்காளர்களின் விவரங்கள் தேர்தல் ஆணையாளரின் அனுமதியுடன் முன்னைய ஆண்டு பதிவுகள் மீளப்பதியப்பட வேண்டும். அத்துடன் கிராம அலுவலர்கள், நீக்கப்பட வேண்டியவர்களின் விவரங்களை 'ஏ' நிரலிலும் புதிதாக 18 வயது பூர்த்தி செய்தவர்களின் விவரங்களை 'பி' நிரலிலும் பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும்.

இதேவேளை, 2010 ஆம் ஆண்டு பதிவு இல்லாமல் 2011 ஆம் ஆண்டு வாக்காளராக பதிவதற்கு தகுதி பெற்றவர்களது விவரங்களை தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் உரிய கோரிக்கை காலத்துக்குள் விண்ணப்பத்துக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-313)

## சிறார்களுக்கு சிறந்த ஊக்குவிப்பு...




உடுவில் மகளிர் கல்லூரியில் பொன்விழா ஆண்டில் மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் சிசு உதான பொன்விழா அலகு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

மாணவி ஒருவரிடம் ஆரம்ப வைப்பை ஏற்பதையும், அருகில் கிளை முகாமையாளர் சு.இராசமனோகரன், பாடசாலை அதிபர் சிராணி மில்ஸ், வங்கி உத்தியோகத்தர் சி.சுஜன், ஆசிரியர், மாணவர்கள் உள்ளனர்.

# சங்கிலியனின் வாளேந்திய கை மீண்டும் மாற்றம் செய்யப்படுகிறது

யாழ்ப்பாணம், ஒக 1

யாழ்.மாநகர சபையால் எதிர்வரும் 3 ஆம் திகதி மீண்டும் திறந்து வைக்கப்படவுள்ள சங்கிலிய மன்னனின் உருவச் சிலையில் மாற்றம் செய்யப்படவுள்ளது.

வைக்கப்படவிருந்த சங்கிலியன் சிலையின் மாதிரி உருவில் அவனது வலது கரம் தாங்கியிருந்த வாள் முன்னர் இருந்த நிலையில் இருந்து கீழிறங்கி இருந்தது. விமர்சனங்கள் எழுந்ததையடுத்து தோளுக்கு மேல் வாள் உயர்த்தப்பட்டது. ஆனால், அவ்வாறான நிலை சரணடைவுக்கு உரியதாக இருக்கிறது என புலமையாளர்கள் சுட்டிக்காட்டியதையடுத்து இப்போது அதில் திருத்தம் செய்யப்படவுள்ளதெனத் தெரியவருகிறது. அதற்காக சிலை பீடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. (ம-7)

# கட்டுப்பாடற்ற ஒலிபெருக்கி பாவனையால் நெருக்கடிக்கு உள்ளாகும் அளவெட்டி மக்கள்

யாழ்ப்பாணம், ஒக.1

தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள அளவெட்டிக் கிராமத்தில் கட்டுப்பாடற்ற ஒலிபெருக்கிப் பாவனையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைவதாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் 100 மீற்றர் இடைவெளிகளில் வெளிநாட்டில் உள்ளவர்களின் நிதியுதவியுடன் இந்துக் கோயில்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆலயங்களில் ஒலிபெருக்கிகள் நேரகாலம் இன்றி அளவுக்கதிகமான சத்தத்துடன் பயன் படுத்தப்படுகின்றன.

வெளிநாட்டில் உள்ளோரின் பிறந்த தினம், விசேட தினங்கள் என்பவற்றில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இதன்போது உரத்த சத்தத்துடன் ஒலிபெருக்கிகளும் பாடிய வண்ணம் உள்ளன.

இவ்வாறு இந்து ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் இத்தகைய செயற்பாடுகளால் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் உட்பட தொழில் புரிபவர்களும் நிம்மதியாக உறங்க முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-313)

# இலங்கை வங்கியின் 72 ஆவது ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், ஒக.1

இலங்கை வங்கியின் 72 ஆவது நிறைவு தினவிழா சங்கானைக் கிளையில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கானைக் கிளையின் முகாமையாளர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வங்கியின் வாடிக்கையாளர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

நாடளாவிய ரீதியில் கணினி வலைப் பின்னல் இணைப்புடன் கூடிய இலகுவான சேவையை மக்களுக்கு வழங்கும் இலங்கை வங்கி தற்போது பிரதேசங்கள் தோறும் அமையப் பெற்றுள்ள வங்கிக் கிளைகளை விரிவாக்கல் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-313-28)

# கேபிள் இணைப்புகள் வழங்குவதில் தாமதம்

வடமராட்சி ஒக. 1

தொண்டமானாறுப் பகுதிக்கான கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் வடமராட்சி கிழக்குத் தவிர்ந்த வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு பிரதேசங்களில் கேபிள் தொலைபேசி இணைப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி மேற்குப் பிரதேசத்திலும் தொலைபேசி இணைப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ள போதிலும் வடமராட்சி மேற்குப் பிரதேசத்தில் இருக்கும் தொண்டமானாறுப் பகுதிக்கு கேபிள் தொலைபேசி இணைப்பு இன்னும் விஸ்தரிக்கப்படவில்லை.

தொண்டமானாறுப் பகுதியில் கேபிள் தொலை பேசி இணைப்பு வழங்குவ தற்கென சில இடங்களில் தொலைபேசி இணைப்புக்கான தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

சில இடங்களில் தூண்களை நடுவதற்கான குழிகள் வெட்டப்பட்ட நிலையிலும் பல மாதங்களாக இருந்து வருகின்றன.

கேபிள் தொலைபேசி இணைப்புகளைப் பெற இந்தப் பகுதி மக்கள் ஆர்வமாக உள்ள போதிலும் இந்தப் பகுதிக்கு இணைப்பு வழங்குவதற்கான வேலைகளைச் செய்து முடிப்பதில் சம்பந்தப்பட்ட தரப்பு தாமதம் காட்டுவதாகக் கூறப்படு கிறது.

(ம-236)

# மீள்குடியமர்த்துவதில் தாமதம் தொடர்பாகக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக.1

மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகள் மற்றும் மீளக் குடியமர்த்துவதிலுள்ள தாமதங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலகத்தில் விரைவில் இடம்பெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள், கிராம அலுவலர்கள் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இதன் போது பிரதேச செயலக பிரிவு ரீதியாக இதுவரை மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளின் நிலைமை குறித்து ஆராயப்படவுள்ளது.

கண்ணிவெடி அகற்றப்பட்டதன் பின்னரும் மீளக் குடியமர்த்தும் பணி தாமதமாகியுள்ள பகுதிகள் குறித்தும், அதனை விரைவுபடுத்துவதற்கான வழிவகைகள் குறித்தும் இதன் போது கவனத்தில் கொள்ளப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடனான கலந்துரையாட்லும் இடம்பெற வுள்ளது என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ம-14)

# கண்டெடுக்கப்பட்ட அ. அட்டைகள்

யாழ்ப்பாணம் ஒக. 1

யாழ்.போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டைகள், மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் என்பன கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நீர்வேலி தெற்கு முகவரியை உடைய பி.சுரேஸ்குமார் என்பவரது மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், பதிவு அட்டை, செலிங்கோ இன்சுரன்ஸ் என்பனவும், பளை கோயில் வயலைச் சேர்ந்த சேதுப்பிள்ளை பொன்னையா (326924172v), குடத்தனை கிழக்கைச் சேர்ந்த கணபதி பாலசங்கர்(691213226v), துவாளி வீதி, இமையானன், உடுப்பிட்டியைச் சேர்ந்த கிட்டிணர் சதாசிவம் (072789), கருங்காலி காரைநகரைச் சேர்ந்த மொகிதன் வாவா கபித் (542192992v), பளையைச் சேர்ந்த பொன்னையா தெய்வேந்திரம் (510860454v), மானிப்பாயைச் சேர்ந்த இந்துமதி சண்முகரத்தினம் (526055284v), வயாவிளான் மத்தி, வயாவிளானைச் சேர்ந்த இந்துமதி சண்முகரத்தினம் (0907014128), திருகோணமலையைச் சேர்ந்த வடிவேலு ரஞ்சிதா (936331866v) ஆகியோரின் அடையாள அட்டைகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓசியன் லேடி கப்பலில் ஈழத் தமிழர்களை அழைத்துச் சென்ற 4 தமிழர்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம்,ஒக.1

இலங்கைத் தமிழர்கள் 72 பேரை ஓசியன் லேடி கப்பலில் கடத்திச் சென்றதாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்த நான்கு தமிழர்கள் நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பிரிட்டனில், கொலம்பியாவில் உள்ள நீதிமன்றம் நேற்று முன்தினம் இவர்களுக்குப் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

39 வயதான கமல்ராஜ் கந்தசாமி, 33 வயதான விக்னராஜா தேவராஜா ஆகியோர் 5000 டொலர் பிணையிலும், 33 வயதான பிரான்ஸிஸ் அந்தோனி முத்து அல்போன்சு, 33 வயதான 2000 டொலர் பிணையிலும், 32 வயதான ஜெயசந்திரன் கனகராஜ் 100 டொலர் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன், டொரண்டோவில் குறித்த நால்வரும் தற்போது வசித்துவரும் விலாசத்திலேயே தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும் கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபையின் நியமனங்களுக்கு ஏற்ப. கடவுச்சீட்டு, விசா மற்றும் பயண ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடாது என்ற நிபந்தனைகளையும் விதித்துள்ளது.

அடுத்த வழக்கு விசாரணை எதிர் வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (வ)



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் மங்கள விளக்கேற்றுகின்றார். அருகில் வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன். (வ)

# ஆஸியால் பிடிக்கப்பட்ட 54 அகதிகளும் மலேசியாவிடம் விரைவில் கையளிப்பு

## ஆஸி. உள்நாட்டு அமைச்சு அறிக்கை

ஆஸ்திரேலிய கடற் படையினரால் கடந்த 24 ஆம் திகதி இடைமறித்துப் பிடிக்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் 54 பேர் விரைவில் மலேசியாவிடம் கையளிக்கப்பட உள்ளனர் என்று ஆஸியின் உள்நாட்டு அமைச்சு அறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஆஸ்திரேலியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையில் கடந்த 25 ஆம் திகதி அகதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

புதிதாக மலேசியாவுக்குச் செல்கின்ற 800 அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்கள்கொண்ட முதலாவது குழுவை மலேசியாவிடம் கையளிக்கப்படும் என்பது மேற்படி ஒப்பந்தத்தின் சிறப்பு நோக்கமாகும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் முதலில் வந்த சட்ட விரோத பயணிகள் குழு இதுவே ஆகும்.

இந்தக் குழுவினர் விரைவில் மலேசியாவிடம் கையளிக்கப்படுவார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# ராணுவத்திலிருந்து நீக்கப்பட்டவர்களே சனல் - 4 இற்கு சாட்சியமளித்துள்ளனர்

## திவயின தகவல்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தில் ராணுவத்தினர் போர்க் குற்றச் செயல்க்ளில் ஈடுபட்டுள்ளதாக ராணுவத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள் தான் சனல்- 4 ஊடகத்துக்கு சாட்சியங்களை வழங்கியுள்ளதாக திவயின சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகை வெளியிட்ட செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

துர்நடத்தை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்ட இரண்டு முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்களே சனல் 4 இற்குத் தகவல்களை வழங்கியுள்ளனர். இலங்கை இராணுவத்தினர் போர்க் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக மேற்படி இரண்டு முன்னாள் ராணுவச் சிப்பாய்களும், சனல்4 ஊடகத்துக்குத் தகவல்களை வழங்கியுள்ளனர்.

புதுமாத்தளன் பிரதேசத்தில் ராணுவ சிப்பாய்களை அழைத்து பொது மக்களைத் தாக்குமாறு உத்தரவிட்டதாக குறிப்பிடப்படும் தகவல்களில் உண்மையில்லை என மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சனல் - 4 காணொளி தொடர்பில் நேரில் கண்ட சாட்சிகள் கிடையா என்று தமது வாதத்தை முறியடிக்கும் நோக்கில் இவ்வாறான 'சாட்சியங்களை சனல் - 4 முன்வைத்து வருவதாக சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார் என்று அந்தச் செய்தி கூறுகிறது. (வ)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
திருமதி சித்திவிநாயகவடிவேல் விமலா

தோற்றம்
20.03.1949

மறைவு
12.08.2010

திதி: 02.08.2011

பூமியில் ஆயிரம் உறவிருந்தாலும்
தாயே உன்னைப் போல் ஈடாகுமா?
கட்டிய கணவர் மகனுடன்
உன் உறவுகளும் நாம்
கலங்கி அழுகின்றோம் உன் நினைவால்

கடந்த 12.08.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சித்திவிநாயகவடிவேல் விமலா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நாளை (02.08.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு அனைவரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)



நிரந்தர வதிவிடம்:
களுவாக்கட்டை, வித்தகபுரம், தெல்லிப்பழை.
நிகழ்வு இடம்பெறும் இடம்
(தற்காலிக வதிவிடம்)
வல்லியானந்தம் வீதி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

நீங்கா நினைவுகளுடன்,
க. சித்திவிநாயகவடிவேல் (கணவர்)
சி.காந்தரூபன் (மகன் - ஜேர்மனி)

72 வருட சேவை பூரிப்பில்...
வாடிக்கையாளர்களுக்கு
விரிவான சேவையை
வழங்கும் நோக்குடன்...

இலங்கை வங்கி
பரந்தன்
விரிவாக்கற் காரியாலயம்

A-9 வீதி, பரந்தன் சந்தி,
பரந்தன்

என்ற முகவரியில் 2011 ஆகஸ்ட் மாதம் 01ம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியளம் கேட்டீர்களா?

### பத்திரிகையாளர் மீதான வன்முறைக்கரம்; அதிகாரத்தில் உள்ளவர்களால் தடுக்க முடியாததா?

கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாதவர்களின், பேனாவுக்குப் பேனாவால் பதிலளிக்கத் தெரியாதவர்களின் கொலைக் கரங்கள் மீண்டுமொரு பத்திரிகையாளன் மீது வன்முறைக் கரம் பதித்துள்ளது. ஊடகவியலாளரின் உயிரை எடுப்பதன் மூலம் கருத்துக்களை உறைநிலைப்படுத்தலாம் என நினைக்கிறார்களோ என்னவோ காலத்துக்குக் காலம் பத்திரிகையாளர்கள் குறி வைக்கப்படுகிறார்கள்.

உலகெங்கும் பத்திரிகையாளர்கள் தம்மை ஒறுத்து, மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவதற்காகப் பாடுபடுகிறார்கள். அவர்களை நோக்கி வசைபாடல்களும், வன் முறைகளுமே பிரயோகிக்கப்படுகின்றன. எல்லா யுத்தங்களின் போதும் உண்மையே முதலில் சாகடிக்கப்படுகிறது என்று சொல்வார்கள். எனவே, உண்மையைக் கொல்வதற்காக உண்மையை வெளிக் கொண்டு வருபவர்கள் கொல்லப்படுகிறார்கள்.

சில நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் மறுக்கப்படுவதும், பத்திரிகையாளர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதும் அதிகமாகும். அத்தகைய கறுப்பு நாடுகளில் இலங்கை முன்னிலை வகிக்கிறது. மிகக் குறைந்த ஊதியத்துடனும், உயரிய ஆபத்துக்களுடனும் இலங்கையில் பத்திரிகையாளர்கள் கடமையாற்றுகின்றனர். அவர்களது வாழ் வாதாரம் மிகத் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில் 17 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அறிக்கையொன்று கூறுகிறது. ஆனால் பலரது பெயர்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. ரிச்சட் டீ சொய்ஸா, றோகண குமார, லசந்த விக்கிரமதுங்க எனப் பல சிங்கள ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். போத்தல ஜயந்த முதலான பலர் தாக்கப்பட்டுள்ளனர். சுதந்திர ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய உட்பட நூற்றுக் கணக்கானோர் அச்சுறுத்தல்களால் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தமிழ்ச் சூழலில் எண்ணிக்கை அதிகம்.பல தரப்புக்களாலும் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். சரியாகப் பத்து வருடங் களுக்கு முன்னர் ஜூன் மாதம் 23 ஆம் திகதி நகரின் பிரதான இராணுவ முகாம்களில் ஒன் றின் முன்னால், ஆயுதக் கும்பல் ஒன்றினால் உதயன் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியில் அவர் கடும் காயமுற்று வெளிநாடு சென்று இரண் டரை வருட கால மருத்துவ சிகிச்சை பெற்றுத் திரும்பினார்.

ஞாபகத்துக்கு எட்டியவரை டி.பி.சிவராம், நடேசன், நிமலராஜன், தினமுரசு அற்புதராஜா, பாலநடராஜ ஐயர், செழியன் பேரின்பநாயகம், சுகிர்தராஜன், ரஜிவர்மன், பு.சத்தியமூர்த்தி, தேவராஜன் என இப்பட்டியல் நீளும். வன்னி யுத்தத்தில் போராட்டத் தரப்புச் செய்திகளை வெளியிட்ட பல செய்தியாளர்கள் கொல்லப்பட்டும், காணாமல் போயும் உள்ளமை குறிப்பிடத்தக் கது. உதயனின் ஆசிரியராக இருந்த வித்தியா தரன், திசநாயகம், ஜசிதரன் உள்ளிட்ட பல தமிழ் ஊடகவியலாளர்கள் சிறைவாசம் அனுபவித் தனர். பலர் அரசியல் தஞ்சம் கோரி வெளிநாடு களில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஊடகங்கள் ஜனநாயகத்தின் காவல் நாய்கள் எனப் போற்றப்படுகின்றன. சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் கொள்கை அறிக்கையில் உண்மையை மதிப்பதும், உண்மையை அறிவதில் மக்களுக்குரிய உரிமையை மதிப்ப தும் ஊடகவியலாளர்களின் முதன்மையான கடமை என வலியுறுத்தப்பட்டுள்ளது. அதைச் சிரமேற் கொண்டு பத்திரிகையாளர்கள் செயற்படும் போது அவர்களுக்கு வன்முறை "பரிசளிக்க"ப்படு கிறது. உண்மை மிக நுண்ணிய துவாரங்கள் வழியாகக் கூடக் கசியும் என்பார்கள். ஆனால் உண்மை பத்திரிகையாளர்களால்தான் கசிய விடப்படுவதாக அதிகாரத் தரப்புக்கள் பலவும் தமக்குள் கணக்குப் போடுகின்றன. எனவே, உண்மையினை நிலை நாட்டும் அவர்களது இலட்சியத்தைப் புதைப்பதற் காக அவர்கள் குறி வைக்கப்படுகிறார்கள். நீண்ட காலமாக குறி வைக் கப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஞா.குக நாதன் அவர் கள் இம்முறை இலக்கு வைக்கப்பட்டு உள்ளார்.

ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காக உண்மையையும், உண்மையைக் காவுகிற பத் திரிகையாளர்களையும் அழிக்கப் போவது தொடர்வதைத்தான் இவர் மீதான கொலை வெறித் தாக்குதல் புலப்படுத்துகிறது. தொடர்ந்தும் ஜனநாயகத்தின் பேரால் இதை ஆமோதிப்போமா? காலத்துக்குக் காலம் அரச அதிகாரத்தில் உள்ளவர்கள் இவற்றைக் கண்டும் காணா தது போல கண்மூடி மௌனிகளாகவே இருப் பார்களா? அல்லது உரிய நடவடிக்கை எடுக்க முயல்வார்களா?

விழிச்சான் குஞ்சு.

# சனல் - 4 வீடியோ வெளியிட்ட சாட்சியங்கள் அனைத்துமே மிகவும் நம்பகரமானவை

## அதன் ஊடகவியலாளர் ஜொனதன் கூறுகிறார்

'சனல் 4' இறுதியாக வெளியிட்ட காணொளியில் தோன்றிய சாட்சியாளர்கள் நம்பகமான தகவல்களையே வழங்கியுள்ளதாக 'சனல்4' ஊடகத்தின் ஊடகவியலாளர் ஜொனதன் மில்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் பத்திரிகைக்கு மின்னஞ்சல் மூலம் வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு தரப்பினரின் குற்றச்சாட்டுக்களை எவ்வித உறுதிப்படுத்தலுமின்றி வெறுமனே ஒளிபரப்புச் செய்வதில்லை. சாட்சியாளர்கள் தொடர்பில் தாமும் தமது செய்தி ஆசிரியர்களும் பூரண திருப்தி கொண்டுள்ளனர். சாட்சியாளர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளப்பட்டது என்பதனை கூற முடியாது, அவ்வாறு கூறினால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும்.

சாட்சியாளர்களின் குரல்கள் ஒளிபரப்புச் செய்யப்படவில்லை எனவும் பின்னணி பேசியவர்களே அவர்களது சாட்சியங்களுக்கு குரல் கொடுத்துள்ளனர்.

எல்லா வழிகளையும் பயன்படுத்தி போராட்டத்தை முடிவுறுத்துமாறு சவேந்திர சில்வா 58 படையணிக்கு கட்டளையிட்டதாக சாட்சியாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தவுக்கு அமைய சவேந்திர சில்வா விசேட கூட்டமொன்றை கூட்டி படையினருக்கு இந்த அறிவிப்பனை விடுத்ததாக சாட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



இதேவேளை, 'சனல்- 4' ஊடகத்துக்கு எதிராக பிரிட்டன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும், ஊடகங்களின் சுதந்திரத்தில் தலையீடு செய்யப் போவதில்லை எனப் பிரிட்டன் தூதரகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இரகசியம், பரம இரகசியம்...



இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் , நேற்று முன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது. (ச)

# இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 1000 பஸ்கள் கொள்வனவு செய்யப்படும்

## அமைச்சர் குமார வெல்கம தகவல்

கொழும்பு, ஓக.1

இலங்கை போக்குவரத்து சபைக்கு மேலும் 1000 பஸ்களைக் கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு பஸ் டிப்போவிற்கு 40 பஸ்கள் வீதம் வழங்கப்படவுள்ளன என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தனியார் மற்றும் அரச போக்குவரத்துசபை பஸ்களுக்கான சரியான நேரம் கணிக்கப்பட்டால் பஸ்களின் எண்ணிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மிகவிரைவில் ரயில்கள் பலவும் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# அனுமதியின்றிய கட்டடங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படமாட்டாது

கொழும்பு, ஓக. 1

அபாய நிலையிலுள்ள வலயங்களில் அனுமதியின்றிக் கட்டப்படும் வீடுகளின் கட்டடங்கள் சரிந்தால் அவற்றுக்கு நட்டஈடு வழங்கப்படமாட்டாதென அரசு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரசின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகக் கூடிய பிரதேசங்களில் அனுமதியின்றிக் கட்டப்படும் எந்தவொரு வீடோ அல்லது ஏனைய கட்டடங்களோ அதிக மழையின் காரணமாக சரியுமானால் அவற்றுக்கு நட்ட ஈடு வழங்கப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்கும், ஏனைய கட்டடங்களும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தினதும் சம்பந்தப்பட்ட மாகாண சபைகளினதும் முன் அனுமதியைப் பெறவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## போராளிகளில் ஒரு தொகுதியினர் அடுத்த மாதம் பெற்றோரிடம்



புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் ஒரு தொகுதியினர் அடுத்த மாதம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 2960 பேருக்கு தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு நிலையங்களில் இந்த புனர்வாழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

புனர்வாழ்வளிக்கப்படுவோரில் 20 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட முன்னாள் போராளிகளே அதிகம் அடங்குகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## 1000 ரூபா லஞ்சம் பெற்ற கான்ஸ்டபிளுக்கு சிறைத்தண்டனை

போக்குவரத்து விதிகளை மீறிய சாரதியொருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கென அவரிடம் ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆஜர் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு இரண்டு வருட சிறைத் தண்டனையும் 2 ஆயிரம் ரூபா அபராதத்தையும் விதித்து கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி தீர்ப்பளித்துள்ளார்.

அபராதத் தொகை செலுத்தத் தவறினால் மேலும் மூன்று மாதங்கள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டும் எனவும் அவர் தீர்ப்பளித்துள்ளார்.

தங்காலை, கொயம்பொக்கே பிரதேசவாசியும் கதிர்காமம் பொலிஸ் வலயத்தில் பணிபுரிந்தவருமான கான்ஸ்டபிள் ஒருவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது. (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா விவசாயக் கண்காட்சியில் ஐந்து தினங்களும் கலை நிகழ்ச்சிகள்

வவுனியா, ஓகஸ்.1

வவுனியாவில் இன்று முதலாம் திகதி தொடக்கம் ஐந்து தினங்கள் நடைபெறவுள்ள தேசிய விவசாயிகள் வாரம் மற்றும் கமத்தொழில் கண்காட்சியில் தினம்தோறும் பிற்பகல் 4 மணிமுதல் மாபெரும் கலாசார காண்பியம் நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

விவசாய அமைச்சின்கீழ் இயங்கும் ஹதபிம அதிகார சபை, வவுனியா மாவட்டச் செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வுகள் வவுனியா தாண்டிக்குளம் அரச விதை உற்பத்திப் பண்ணையில் அதற்கென விசேடமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள விவசாய மேடையில் நடைபெறவுள்ளன.

வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகள், கலை மன்றங்கள், கலாசார மத்திய நிலையங்கள் ஒருங்கிணைந்து இந்த மாபெரும் கலாசார காண்பியம் நிகழ்வை வழங்கவுள்ளன என வவுனியா மாவட்ட அரச அதிபரும், மாவட்ட செயலாளருமான திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

கலாசார காண்பியம் இன்றைய நிகழ்வில் வவுனியா ஈரப்பெரியகுளம் பரக்கும்பா வித்தியாலயம், சிறிசுமண மகா வித்தியாலயம், இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா இந்துக் கல்லூரி, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, முஸ்லிம் மகா வித்தியாலயம், மடுகந்த மகா வித்தியாலயம், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், பரதசேஸ்திர கலாமன்றம் ஆகியன பங்கு பற்றும்.

**வவுனியாவில் இன்று முதலாம் திகதி தொடக்கம் ஐந்து தினங்கள் நடைபெறவுள்ள தேசிய விவசாயிகள் வாரம் மற்றும் கமத்தொழில் கண்காட்சியில் தினமும் மாலை 4 மணிக்கு மாபெரும் கலாசார காண்பியம் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளை பாடசாலைகள், கலை மன்றங்கள், கலாசார மத்திய நிலையங்கள் ஒருங்கிணைந்து வழங்கவுள்ளன.**

நாளை இரண்டாம் நாள் நிகழ்வில் வவுனியா ஈரப்பெரியகுளம் பரக்கும்பா வித்தியாலயம், நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி, நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் ஆகியன பங்கு பற்றும்.

மூன்றாம் நாள் நிகழ்வில் வவுனியா ஈரப்பெரியகுளம் பரக்கும்பா வித்தியாலயம், பூந்தோட்டம் மகா வித்தியாலயம், சூடுவெந்தபுலவு அல்இக்பால் வித்தியாலயம், நிருத்திய நாட்டிய சுருதி கலாலயம், சிதம்பரஸ்வர கலாலயம், பூவரசங்குளம் நிருத்திய நிகேதன கலாலயம் ஆகியன பங்கு பற்றும்.

நான்காம் நாள் நிகழ்வில் வவுனியா ஈரப்பெரியகுளம் பரக்கும்பா வித்தியாலயம், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், முஸ்லிம் மகா வித்தியாலயம், விபுலானந்தா மகா வித்தியாலயம் ஆகியனவும்.

ஐந்தாம் நாள் நிகழ்வில் வவுனியா ஈரப்பெரியகுளம் பரக்கும்பா வித்தியாலயம், திருமறைக் கலாமன்றம், மாமடுவ மகா வித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகியனவும் பங்கு பற்றும்.

இந்த ஐந்துநாள் விவசாயக் கண்காட்சி மற்றும் கலாசார காண்பியம் நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் அழைப்பின் பேரில் முதலாம் நாள் நிகழ்வில் பிரதம மந்திரி தி.மு. ஜயரத்னவும், இரண்டாம் நாள் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், மூன்றாம் நாள் நிகழ்வில் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியூதீனும், நான்காம் நாள் நிகழ்வில் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும், ஐந்தாம் நாள் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்வர்.

வவுனியா மாவட்ட அரச அதிபரும், மாவட்ட செயலாளருமான திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், ஹதபிம அதிகார சபையின் தலைவர் நந்தசேன ஹேரத், வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் என். திருஞானசம்பந்தர், ஹதபிம அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் டீ.எம்.ஆர்.பி. திசாநாயக்க, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.ரி.எஸ். டபிள்யூ.குமார ஆகியோரின் வழிப்படுத்தலில் வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், வவுனியா தெற்கு கலாசார உத்தியோகத்தர் டபிள்யூ.எச். எம். செனிவிரட்ண ஆகியோர் கலாசார காண்பியம் நிகழ்வுகளுக்கான சகல ஒழுங்குகளைச் செய்துள்ளனர். (க)

## இரு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

கிளிநொச்சி, ஓகஸ்.1

வன்னி மாவட்டங்களில் இரு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக ப.அரியரத்தினம் கடமையாற்றி வருகின்றார். வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகத் திருமதி.செ.சு.செபஸ்தியன் கடமையாற்றி வருகின்றார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் கிளிநொச்சி அலுவலகத்திலும், வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான அலுவலகம் வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்திலும் இயங்கி வருகின்றன. (க-421)

## ஆடி அமாவாசை விரதம்

முல்லைத்தீவு, ஓகஸ்.1

புதுக்குடியிருப்பு கெருடமடுப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற ஆடி அமாவாசை விரத பூசைகளில் சுமார் 10 ஆயிரம் மக்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடப்பெயர்வுகளுக்குப் பின்னர் தற்போது மக்கள் மீள் குடியமர்ந்த நிலையில் இந்த ஆண்டு ஏராளமான மக்கள் இந்தப் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டனர். (க)

72 வருட சேவை பூர்ப்பில்...
வாடிக்கையாவர்களுக்கு விரிவான சேவையை வழங்கும் நோக்குடன்...
இலங்கை வங்கி
உரும்பிராய்
விரிவாக்கற் காரியாலயம்
பலாலி வீதி,
உரும்பிராய
என்ற முகவரியில் 2011 ஓகஸ்ட் மாதம் 01ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## வாழ்வாய் நீ சரித்திரமாய்

### சகாதேவன் நிலக்ஷன் (நிலா)




ஈரிரண்டாண்டுகள் எப்படித்தான் சென்றதோ
நிலா....
பிஞ்சு மழலையாய் கொஞ்சி மகிழ்ந்ததும்
கொஞ்சு தமிழிலே கல்வி பயின்றதும்
அஞ்சி ஒடுங்காமல் பண்புடன் வாழ்ந்ததும்
நெஞ்சம் பொய்க்காமல் செய்திகள் தந்ததும்

அது ஒரு பொற்காலம்......
மந்த புத்தியுடைய மதியிலிகள் சிலர்
வஞ்ச மனத்துடன்
உன் வாழ்வினை முடித்தமை
பழங் கதையல்ல...... கனவல்ல...... நிஜம்தான்
நாம் வீதைபோட்டு வளர்த்த வீருட்சம் நீ –
நம்
கண்முன்னே வேரோடு சாய்க்கப்பட்டதும்
எம்நெஞ்சில் மூண்ட தீ
இன்னும் அணையவில்லை।
இன்னும் எம் சுவாசம் அனலையே கக்கிறது

வேரோடு சாய்ந்த மரம் வீழுதுகளால்
வாழலையா?
சிந்தனைச் செல்வனே
நீ தமிழினிற்காய் செய்தவைகள்
தமிழுள்ளவரை உன்னை வாழவைக்கும்
சரித்திரமாய்
அந்த பெருமையிலும் முந்தய நினைவிலும்
நாம் நமையே தேற்றிக்கொண்டு.
உன் நினைவில் வாழ்ந்திருப்போம்.

டடா, அம்மா, அண்ணா

47, புகையிரதநிலைய வீதி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு இதய சுத்தியுடன் சேவையாற்றவுள்ளோம்

## கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார்



கிளிநொச்சி, ஒக.1

நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு இதய சுத்தியுடன் சேவையாற்ற தாங்கள் முன்வந்திருப்பதாக மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட சமூகத்தைக் கட்டியெழுப்பவும் அவர்களுக்கான சட்டம் ஒழுங்குகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் பொலிஸ் அதிகாரிகளாகிய எங்களிடம்தான் உள்ளது.

சிறுவர்கள் எதிர்காலத்தின் தூண்கள். அவர்களது எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும். தற்போது நாகரிக வளர்ச்சிகளால் சிறுவர் கலாசாரங்கள் சிதைந்து வருகின்றன. சிறுவர்கள், பெண்களுக்கான சட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அதனைக் கொண்டு சிறுவர்களையும் பெண்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களிடம் உள்ளது.

உங்களின் வீடுகளிலும் சமூகத்திலும் ஏற்படும் பிரச்சினைகளையும் எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அதனை நாங்கள் கவனத்தில் எடுத்துச் செயற்படுவோம்.

ஒவ்வொருவரும் சட்டத்தை மதித்து வாழப்பழகிக் கொள்ள வேண்டும். தற்போது கசிப்பு உற்பத்தி வேகமாக வளர்ந்துள்ளது. அதனைப் படிப்படியாகக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்டவிரோத மதுபாவனை, முறையற்ற பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றால் சிறார்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு வருகின்றது. சரியான முறையில் தகவல்கள் கிடைக்குமாயின் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரி மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று கடந்த 26 ஆம் திகதி பாடசாலை அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பொலிஸ் பொறுப்பதிகாரி சாலிய சில்வாவினால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# செயற்படாத நிலையில் காணப்படும் ஊரியான் கிராம அபிவிருத்திச் சங்கம்

கிளிநொச்சி, ஒக.1

கிளிநொச்சி, கண்டாவளை ஊரியான் கிராமத்தில் செயற்பட்டுவரும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் முன்மாதிரியாக செயற்படுவது போன்று கிராம அபிவிருத்திச் சங்கம் செயற்படுவதில்லையென இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாத காலப்பகுதியில் இங்கு மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டனர். மே மாதம் 15 ஆம் திகதி மேற்படி கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கமும் அதனையடுத்து மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் தெரிவு செய்யப்பட்டன. இந்த நிலையில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒரு முன் மாதிரியான கிராம மட்ட அமைப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

அத்துடன் பல்வேறு வகையான கடன் திட்டங்களையும் வாழ்வாதாரத்திட்டங்களையும் அதனோடு இணைந்த பொது வேலைத்திட்டங்களையும் கடந்த ஒரு வருடமாக முன்னெடுத்து வருகின்றது.

ஆனால் இந்தப் பகுதியில் செயற்பட்டுவரும் கிராம அபிவிருத்திச் சங்கம் இவ்வாறு செயற்படுவதிலையெனப் பலரும் குறை கூறுகின்றனர்.

இங்குள்ள முன்பள்ளி மண்டபத்துக்கான் சிரமதானப் பணிகளோ அல்லது புனரமைப்பு பணிகளோ முன்னெடுக்கப்படவில்லை.

இது இவ்வாறிருக்க ஊரியான் பிரதேசத்தில் உள்ள மக்கள் தமக்குத் தேவையான மணலைப் பெற்றுக் கொள்வதாயின் அயல் கிராமங்களாகிய கண்டாவளைக் கிராமத்துக்கோ அல்லது முரசுமோட்டைக் கிராமத்துக்கோ சென்று பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுத் தமக்கான மணலைப் பெறுகின்றனர்.

கிராம அபிவிருத்திச் சங்கம் சரியான முறையில் செயற்பட்டுக் கிராம மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமெனக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# தனிநாயகம் அடிகளாரின் நினைவுப் பேருரை மன்னாரில்

மன்னார், ஒக. 1


மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் 'கலையருவி' ஏற்பாடு செய்துள்ள உலகத் தமிழ் அறிஞர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவுப் பேருரை 2011 நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட் திரு. தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் கௌரவ விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது நினைவுப் பேருரைகள், நடன நிகழ்வுகள் உட்படப் பல நிகழ்வுகள் இடம்பெறும்.

இறுதியில் கடந்த மாதம் மன்னார் சமூக அருட்பணி மையத்தால் மன்னார், முருங்கனில் நடத்தப்பட்ட கலைச் சங்கமம் - 2011 இயல், இசை, நாட்டிய, நாடக விழாத் தொகுப்பு இறுவட்டாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அவர்களினால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (க-601)

## விளையாட்டுக்கு விழிப்புணர்வு



அதியுயர் பயிற்சிகள்: மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களுக்குப் பிரபல விளையாட்டு வீராங்கனை சுசந்திகா பயிற்சிகளை வழங்குகிறார். அருகில் ஒலிம்பிக் வீரர் எதிர்வீரசிங்கமும் காணப்படுகின்றார். (410)

# வெகுசன ஊடகப் பயிற்சி செயலமர்வு

மன்னார், ஒக. 1

வெகுசன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சு திணைக்களத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'எசிதிசி வினிச' எனும் வெகுசன ஊடகப் பயிற்சிச் செயலமர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப. 3 மணி வரை கொக்காவில் இலங்கைச் சமிக்ஞைகள் படையணியின் கணினிப் பயிற்சித் தலைமையத்தில் இடம்பெற்றது.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 60 க்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள பிராந்திய ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வின் போது வெகுசன ஊடகம் மற்றும் தகவற்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல கலந்துகொண்டார்.

இதன்போது கலந்து கொண்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவினால் ஒலிப் பதிவுக்கருவி விநியோகிக்கப்பட்டதுடன் செயலமர்வின் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (க-601)

# மன்னார் கல்வி வலய சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

மன்னார், ஒகஸ். 1

மன்னார் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவைகளின் தொடர்ச்சி வருமாறு:-

**பிரிவு - 3 தரம் 7**

முதலாமிடம் - கே.பூவரசன் (அல்மினா ம.வி), இரண்டாமிடம் ஏ.அஸ்ரா (கரிசல் றோ.க. பாடசாலை), ஏதர்ஸா (துள்ளுக் குடியிருப்பு அ.மு.க. பாடசாலை.

**தரம் 8**

முதலாமிடம் - ஐ.எம்.சாஜீத் (பண்டாரவெளி அ.மு.க.பாடசாலை), இரண்டாமிடம் - எஸ். சச்சின் ( சிலாவத்துறை அ.மு.க பாடசாலை), மூன்றாமிடம் - கொ.டயானா(தோட்டவெளி றோ.க.பாடசாலை).

**தரம் 9**

முதலாமிடம் - எவ்.பர்சீன் (அல்மினா ம.வி), இரண்டாமிடம் - எம்.சற். றிமாஷா (முசலி ம.வி), மூன்றாமிடம் - ச.திவ்யாபானு(தோட்டவெளி றோ.க. பாடசாலை).

**தரம் 10**

முதலாமிடம் - கொ.சர்லின் கொன்சி (தோட்டவெளி றோ.க. பாடசாலை), இரண்டாமிடம் - யு.எம் முன்பிஹ் (பண்டாரவெளி அ.மு.க.பாடசாலை) மூன்றாமிடம் - எஸ்.சஜீவன் (தலை மன்னார் அ.த.க.பாடசாலை).

**தரம் 11**

முதலாமிடம் - பவாஸ் (புதுக் குடியிருப்பு அ.மு.க.பாடசாலை), இரண்டாமிடம் - ஏ.ஆர். எம்.மின்ஷா (பண்டாரவெளி அ.மு.க.பாடசாலை), மூன்றாமிடம் - ஏ.அஷாமா (புதுக்குடியிருப்பு அ.மு.க.பாடசாலை), என்.எவ்.ஷஸ்னியா (பண்டாரவெளி அ.மு.க பாடசாலை), எச்.முஹம்மது றிக்கால் (எருக்கலம்பிட்டி (மு.ம.வி).

**தரம் 12/13**

முதலாமிடம் - ஐ.ஆசீம் (முசலி ம.வி), இரண்டாமிடம் - ஐ.அப்துல் றஹ்மான் (எருக்கலம்பிட்டி ம.ம.வி), மூன்றாமிடம் - எம்.ஐ.எம் முஷார்ரிப் (அல்மினா ம.வி)

**பிரிவு - 04 தரம் - 6**

முதலாமிடம் - சி.சஞ்சீவனா (மாவிலங்கேணி றோ.க.பாடசாலை), எம்.எவ்.முஹமட் ஹப்துல்லாஹ(புத்/அன்சாரி அ.மு.த.பாடசாலை) மூன்றாமிடம் - ஜெ.ருமேசினி (இலகிடிப்பிட்டி றோ.க.பாடசாலை).

**தரம் 7**

முதலாமிடம் - ஏ.அஸ்ரினா (புத்/ஹஸ்பான் அ.மு. பாடசாலை), இரண்டாமிடம் - எஸ். பாத்திமா சகானி (புத் அன்சாரி அ.மு.க.பாடசாலை), செ.டிலானி (உயிர்த்தராசன் குளம் றோ.க. பாடசாலை), பி.சினேக்கா (தலைமன்னார் அ.மு.க.பாடசாலை), கோ.பிரவினா (மோட்டக்கடை அ.த.க.பாடசாலை), செ.பிரதீப் ராஜ் (மாவிலங்கேணி றோ.க. பாடசாலை).

**தரம் 8**

முதலாமிடம் - (வ.சங்கரி மாவிலங்கேணி றோ.க.பாடசாலை), இரண்டாமிடம் - ப.மரிய நிதர்சனா (நறுவிலிக்குளம் றோ.க.பாடசாலை, மூன்றாமிடம் - ஏ.சாந்தினி நிலுசா (தலை மன்னார் அ.மு.க.பாடசாலை.

**தரம் 9**

முதலாமிடம்- ஐ.எஸ். எவ்.றிப்தா (வேப்பங் குளம் அ.மு.க.பாடசாலை), இரண்டாமிடம் - கோ.ஆன்லூட்ஸ் லிசி(வங்சியன்களம் றோ.க. த.பாடசாலை), மூன்றாமிடம் - லோ.தர்சிக்கா (மோட் டக்கடை அ.த.க.பாடசாலை), தொ. ஆன்றியா (இலகிடிப்பிட்டி றோ. க.த.ப.பாடசாலை), செ.தஸ் நேவிஸ் (மாவிலங்கேணி றோ. க.பாடசாலை)

**தரம் 10**

முதலாமிடம் - கோ.வினோதன் (மோட்டைக்கடை அ.த.க. பாடசாலை), இரண்டாமிடம்- பா.அலன் டொனால்ட் (இலகிடிப்பிட்டி றோ.க.பாடசாலை), மூன்றாமிடம் - ஜே.கில்டன் டியூனிஸ் (உயிர்த்தராசன் றோ.க. பாடசாலை).

**தரம் 11**

முதலாமிடம் - தி.ஆன் பிரியந்தன்(இலகிடிப்பிட்டி றோ.க. பாடசாலை), இரண்டாமிடம்- ச.லக்சினி (இலகிடிப்பிட்டி றோ.க.பாடசாலை), மூன்றாமிடம் - ஜி.ஈஸ்வனி (உயிர்த் தராசன் றோ.க.பாடசாலை).

(க- 601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசா மடந்தையாகப் பெண்கள் இருப்பதே வன்முறைகள் தலைதூக்கக் காரணமாகும்

பெண்ணாகப் பிறந்து விட்டால் கண்ணீர்தான் மிஞ்சும் எனப் பெரியவர்கள் கூறுவார்கள். ஆனால் பெண்களுக்குத் தன்னம்பிக்கை, துணிச்சல் அதிகம் இருக்க வேண்டும் என்பதைவிட, இருக்கின்றது என்றே கூறவேண்டும். அது மட்டுமன்றி இன்று பெண்கள் பேசாமடந்தையாக இருப்பதே நாட்டில் நடைபெறும் கொடுமைகள் அநீதிகளுக்குக் காரணம் என்று கூறலாம்.

ஒவ்வொரு பெண்ணும் தான் சாதிக்கப் பிறந்தவள் என்ற முயற்சியோடு போராட வேண்டும். தனக்கென உள்ள உரிமையை வென்றெடுக்க தற்துணிவுள்ள வளாக எதிர் நீச்சல் போடக்கூடியவளாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று பெண்ணியம் பற்றிப் பேச்சளவில் சொல்கிறார்களே தவிர ஒரு பெண்ணின் மனநிலையை புரிந்து நடந்து கொள்பவர்களாகத் தெரியவில்லை.

இன்று பெண்களைப் பொதுவாகப் புதுமைப் பெண்கள் என ஏட்டளவிலும் பேச்சளவிலும் கூறுகிறார்கள் நடை முறையில் அவ்வாறு இல்லை என்றே கூற வேண்டும். பெண்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் பெண்ணியம் பேசுபவர்கள் எனப் பல அமைப்புக்கள் இருந்தும் குற்றங்களை கண்டும் காணாதவர்போல் இருப்பதால் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளும் குற்றச்செயல்களும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது.




அது மட்டுமன்றிப் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களில் இருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்ளவேண்டும் என்பது பற்றிக் கருத்துக்கள் அறிவுரைகள் வழங்க வேண்டியது அவசியமாகவுள்ளது.

மனிதத் தன்மை என்பது மறைந்து கொண்டு செல்வது போல சிலரின் வன்முறையான போக்கு மெய் சிலிர்க்க வைக்கிறது. இதனால் பெண்கள் உடல் ரீதியாக மட்டுமல்ல உளரீதியான பாதிப்புக்களையும் எதிர் கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

ஏன் இன்னும் எமது சமுதாயத்தில் மட்டும் விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இதனைக் கண்டும் காணாததுபோல் பலர் இருந்து வருகின்றனர்.

எனவே பெண்கள் சுதந்திரமாக வாழ முடியும் என்ற நிலை எமது சமுதாயத்தில் உருவாக வேண்டுமானால் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியமாகும்.

# தங்கமா? தாரமா?



சிரிக்கும் பூவும்
சிற்பமும் நான்தான்-ஆனால்
சீதனக் கொடுமையால்
சிக்குண்டவளும் நான்தான்

பந்திக்குப் பிந்தினால்
பாயாசம் இல்லையாம்-அதுபோல்
வயதுபோனால்வாழ்வும் கோணல்தான்

புரியாத மானிடர்க்கு
பூவையின் பெறுமதி-ஏன்
தங்கத்தின் பெறுமதி அறிந்தேன்
தாரத்தின் தரத்தைப் பார்க்கவில்லை

வாடா மலராய்
வாழ்வை எதிர்பார்ப்பவளுக்கு
விடை கொடுப்போர் யார்?

-சுமித்திரா,
உடுவில்.

# குடும்பங்களை ஒரே கோவையாக்கும் பொறுப்புணர்வு பெண்களுக்கு உரியது



இன்றைய மக்கள் அறியாமையாலும், வறுமையினாலும், பல்வேறு பொருளாதார சிக்கல்களாலும் பெண்ணின் பெருமையை அறியாமல் இருக்கிறார்கள். ஆனால் பெண்களுக்கு இவ்வாறான சிக்கல்கள் இலகுவாகப் புரிந்துவிடும் என்பது உண்மை.

பெண்களுக்கு 'தையலர்' என்ற ஒரு மதிப்புச் சொல் இருக்கிறது. தையல் என்றால் இணைப்பு என்றே பொருள்படும். குடும்பங்கள் பலவற்றையும் ஒன்றோடு ஒன்று இணைத்து, உலகம் முழுவதையும் ஒரே கோவையாக மாற்றும் செய்திருக்கும் அருளாற்றல் பெண்ணினத்திற்கே உரியது. இத்தகைய தெய்வீக இணைப்பை வாழ்வில் கொண்டுள்ள பெண்களுக்கு தையலர் என்று கூறுவது எவ்வளவு ஆராய்ச்சியும் அறிவுடைமையுமாகும் என்று கவனிக்க வேண்டும்.

மேலும், திருப்பாவை என்ற ஒரு நூலில் பெண்களைப் பற்றி ஓர் உவமை கூறப்பட்டுள்ளது. அது 'நேரிழையாள்' என்பதாகும். ஒரு துணியை நெய்ய வேண்டுமானால் நேரிழைகள் என்னும் பாவு முதலாவதாக வேண்டும். அந்த நேரிழைகளின் குறுக்கே செலுத்தப்படும் நூலிழைக்கு, 'ஊடு இழை' என்று பெயர். நேரிழை இல்லாமல் ஊடு இழைக்கு என்ன பெருமையுண்டு? நேரிழையை வைத்துத்தான் ஊடு இழையைச் செலுத்தி, எந்த ஆடையும் உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே, ஆடையில் முதற்பொருளாக இருப்பது நேரிழை.

அதேபோல உலகம் முழுவதும் மக்கள் குலத்தில் நேரிழையாக இருப்பவர்கள் பெண் மணிகள். அவர்களை முன் வைத்து ஊடு இழைகளாக விளங்குபவர்கள் ஆண்கள் என்றே கூறப்படுகின்றது.

இந்த உண்மையை அறியும்போது பெண்களை, நமது அன்னைகளாகவும், சகோதரிகளாகவும், குடும்பத்தைக் காப்பவர்களாகவும் பெண்கள் ஆற்றும் தொண்டு எவ்வளவு சிறந்தது என்று விளங்கிக்கொள்ள வேண்டும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# பெண்கள் தம் வாழ்க்கையில் அவதானத்துடன் இருக்க சில வழிகள்



பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆனால் தற்போது மானிடம் இரங்காததால் தாய்க்குலம் எனப்போற்றப்படும் இன்றைய பெண்களில் மிகச் சிலர் விலை மாதுக்களாக மாற்றப்பட்டு விட்டனர்.

அதுமட்டுமன்றிப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய சமூகமே பணத்திற்காக பெண்களை விற்கின்றனர். இது மிகவும் வேதனை தரக் கூடியதுடன் இழிவானதொரு செயலாகவும் கருதப்படுகின்றது.

எனவே பெண்கள் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகப் பின்வரும் ஆலோசனைகளை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

* தேவையில்லாது யாருடனும் அளவுக்கதிகமாக பேசாமல், உணவுப் பண்டங்களை உடனே வாங்கி உண்பதைத் தவிர்ப்பது அவசியமாகும்.
* உங்களை யாராவது உன்னிப்பாகக் கவனித்தால் அவ்விடத்தை விட்டு நகருவதோடு அவர்கள் உங்களுடன் பேச முயலும்போது தவிர்த்து நடப்பது சிறந்தது.
* உங்களுடைய அழகைப்பற்றி யாராவது உங்களிடம் ஏதாவது கூறினால் ஏமாந்து விடாமல் காதில் விழாததுபோல் இருத்தல் மிகவும் சிறந்தது.
* உங்களுக்கு வேண்டாத ஒருவருடன் பேச வேண்டிய சூழ்நிலை ஏற்படும் போது அவர்களுடன் அவதானத்துடன் பேசுங்கள்
* மற்றவர்கள் உங்களை அவதானிக்கும்போது அவர்களிடமிருந்து விலக முயலுங்கள்.

இவ்வாறான நல்ல பண்புகளை உங்கள் வாழ்க்கையில் கையாளும் போது வெற்றி நிச்சயம் கிட்டுவதுடன் உங்கள் இலக்கையும் இலகுவில் அடையமுடியும்.

-ர.தமிழினி,
சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் வீடு இல்லாதோருக்கே முன்னுரிமை

நுவரெலியா, ஓக.1

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்திய அரசினால் அமைக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டங்களுக்கு இந்தத் தொழிற்சங்கம் ஒன்று உரிமை கோருவது தொழிலாளர்களுக்கிடையே குழப்பத்தைத் தோற்றுவித்துள்ளது. இதனால் தொழிலாளர்கள் குழப்பமடையத் தேவையில்லை. நாம் உரியவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்போம் - என்று மலையக தொழிலாளர் முன்னணியின் சிரேஷ்ட தொழிலுறவு அதிகாரி எஸ்.வரதராஜா தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களுக்கென தனித் தனி வீடுகளை அமைக்கும் திட்டத்தை முதன்முதலாக அமைச்சர் அமரர் சந்திரசேகரன் அறிமுகப்படுத்திய போது எந்தவிதமான தொழிற்சங்கப் பாகுபாடுகளுமின்றி உண்மையில் வீடுகள் இல்லாதவர்களுக்கே முன்னுரிமை வழங்கினார்.

ஆனால், தற்போது இந்திய அரசின் வீட்டுத் திட்டத்துக்கு இந்த ஒரு தொழிற்சங்கம் உரிமை கோருகின்றதாகவும், அந்தத் தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கு மாத்திரமே வீடுகள் வழங்கப்படவுள்ளதாகவும், வீடுகள் தேவையானவர்கள் அந்தத் தொழிற்சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைய வேண்டுமெனவும் பரப்பப்படும் செய்திகளால் தொழிலாளர்கள் மத்தியில் குழப்ப நிலையையும், போட்டி மனப்பான்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

அரச வளங்களோ அல்லது பொது நிறுவனங்களின் உதவியோ அல்லது வெளிநாட்டு உதவிகளோ தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படாது. இவ்வாறான திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்போது உண்மையிலேயே வீடுகள் இல்லாதவர்களுக்கே முன்னுரிமை வழங்க மலையக மக்கள் முன்னணி உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

எனவே, இவ்வாறான விளையாட்டுத்தனமான பிரசாரங்களைப் பற்றி தோட்டத் தொழிலாளர்கள் குழப்பமடையத் தேவையில்லை - என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கலவரம் செய்தோர் மீது துப்பாக்கிச் சூடு; பொலிஸார் உட்பட 10 பேர் விளக்கமறியலில்

திருகோணமலை, ஓக.1

திருகோணமலை, மகா மாயாபுர சந்தியில் மது போதையில் கலவரம் செய்தோர் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸார், இராணுவத்தினர் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கிணங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மது போதையில் கலவரம் செய்த ஐவர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர், இரு இராணுவ வீரர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 10 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, மகா மாயாபுர சந்தியில் கடந்த வியாழக்கிழமை மதுபோதையிலுள்ள சிலர் கலவரம் செய்வ தாக பொலிஸுக்குக் கிடைத்த தகவலை அடுத்து அந்த இடத்துக்குச் சென்றுள்ள பொலிஸார் போதையிலுள்ளவர்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலைமை மோசமானதை அடுத்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மதுபோதையில் கலவரம் செய்த மேலும் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படும் இந்தப் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.(ச)

# கிழக்கில் மைதானங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு,ஓக.1

கிழக்கு மாகாணத்தில் மூன்று மைதானங்களைப் புனரமைக்க வெகுவிரைவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண அமைச்சர் சுபைருக்கும், விளையாட்டுத் துறை அமைச்சருக்கு மிடையே இது தொடர்பாகப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இதில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் உடன்பாடு தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மக்கெய்ஸர் விளையாட்டரங்கு, மட்டக்களப்பு வெபர் மைதானம், அம்பாறை நகர விளையாட்டு மைதானம் ஆகியவையே புனரமைக்கப்படவுள்ளன.



வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.இந்த நிகழ்வில் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், சிறுவர் மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

# பாடசாலை அதிபர் படுகொலை; இருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஓக1

வெலிமடை, போஹாகும்புர பகுதியில் பாடசாலை அதிபரொருவரின் கழுத்தை வெட்டிக் கொலைசெய்தனர் எனக் கூறப் படும் சம்பவத்தில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வெலிமடை நீதிமன்ற நீதிவான் உத்தர்விட்டுள்ளார்.

போஹாகும்புர பகுதியைச் சேர்ந்த ஏ.கே. கருணாவதி (வயது - 72) என்ற பாடசாலை அதிபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் கடந்த திங்கட்கிழமை இரவு அதிபரின் வீட்டுக்குள் நுழைந்து அவரின் கழுத்தை வெட்டிக் கொலைசெய்து விட்டு நகைகளை அபகரித்துச் சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இருவரையும் வெலிமடை நீதிமன்ற நீதிவான் முதுன்கெட்டுவ முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வெலிமடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புத்தசிங்க ஏக்கநாயக்கா, குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சி.ஜீ.குணசேகர ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# காற்றுடன் கூடிய மழை

மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் எதிர்வரும் சில நாள்களுக்கு நடுத்தர அளவு மழை பெய்யுமென்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பகுதியில் குறிப்பாக மத்திய மலைப்பகுதியில் பலமான காற்றினால் பாதிப்பு ஏற்படலாமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# பிரதேச செயலருக்கு அச்சுறுத்தல்: பொலிஸில் முறைப்பாடு

தம்பலகாமம் பிரதேச செயலாளர் லக்ஷ்மேந்திர தமயந்த் குமார தென்னகோனுக்கு இனந்தெரியாத நபர்களினால் தொலைபேசி மூலம் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தம்பலகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள சிலர், சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக இந்தப் பிரதேச செயலாளரிடம் அனுமதி பத்திரங்களைக் கோரியிருந்த நிலையில் அவற்றைக் கொடுக்க அவர் மறுப்பு தெரிவித்ததாலேயே இந்த மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. தனக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதுடன் அச்சுறுத்தல் விடுத்த நபர்களை கண்டறிந்து கைது செய்யுமாறு இந்தப் பிரதேச செயலாளரால் தம்பலகாமம் பொலிஸிடம் கையளிக்கப்பட்ட எழுத்து மூலமான முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# முகாமைத்துவச் சேவைப் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்பக் கோரிக்கை

## ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு

மட்டக்களப்பு, ஓக.1

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் தமிழ் மொழி முகாமைத்துவ சேவை அதியுயர் வகுப்பு பதவி வெற்றிடங்களை நிரப்ப ஆவன செய்யுமாறு இலங்கை அரச பொதுச்சேவைகள் சங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட் டதாவது:-

அரச முகாமைத்துவ சேவையின் அதியுயர் வகுப்பிற்கான பரீட்சைகள் வருடாவருடம் இடம்பெற்று வருகின்றன. எனினும் 2005ஆம் ஆண்டின் பின்னர் நடைபெற்ற பரீட்சைகளிலிருந்து தமிழ்மொழிப் பரீட்சார்த்திகள் எவருக்கேனும் நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இதேவேளை, மாகாண சபையின் கீழான வெற்றிடங்கள் இந்தப் பரீட்சையிலிருந்து முறையாக நிரப்பப்பட்டு வருகின்றன. இது மத்திய அரசின் கீழ் இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய உத்தியோகத்தர்களுக்கு மனவேதனையையும் அதிருப்தியையும் அளிக்கிறது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள மத்திய அரசின் திணைக்களங்கள், பிரதேசசெயலகங்கள் ஆகியவற்றில் முகாமைத்துவ உதவியாளர், அதியுயர் வகுப்பிற்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. இதனால் நிர்வாக நடைமுறைகள் பலமிழந்து வருகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மத்திய அரசின் சகல திணைக்களங்களிலும் குறிப்பாக பிரதேச செயலகங்களில் 2000 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. அதேவேளை, முகாமைத்துவ சேவையில் வகுப்பு - 1, வகுப்பு -11 உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக இந்தப் பதவிகளில் கடமையாற்றுகின்றனர்.

கடந்த 2011 ஜூன் மாதம் நடைபெற்ற முகாமைத்துவ அதியுயர் வகுப்பிற்கான தமிழ் மொழிப் பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றவர்களிலிருந்து அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டப் பிரதேச செயலகங்களிலும் ஏனைய திணைக்களங்களிலும் நிலவும் வெற்றிடங்களை நிரப்பி, நிர்வாக சீரமைப்பை மேற்கொள்ள வேண்டும்- என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
தேக ஆரோக்கிய பராமரிப்பில் அக்கறை காட்டுவீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உங்களின் சில ரகசியங்களை உறவினர்கள் அறிந்து கொள்வர். திட்டமிட்ட காரியம் ஒன்றை எப்படியாவது வெற்றிகரமாக முடிப்பீர்கள். சில பிரச்சினைகள் தொடர்பாக ஒருவரிடம் கடுமையாக நடந்து கொள்ளலாம்.

**இடபம்:**
பெண்கள் வழியில் பெருமைப்படும்படி உதவி கிடைக்கலாம். குடும்பப் பெரியவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றி வைப்பீர்கள். தடை, தாமதங்களை முறியடித்து எதிலும் வெற்றி காண்பீர்கள். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்கலாம்.

**மிதுனம்:**
உடல் அசதி, சோர்வு ஆள்கொள்ளும். பெண்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். பழைய பொருள்கள், பேப்பர் போன்றவற்றை விற்கலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவுகள் ஏற்படும். கடன்களை கொடுக்கலாம். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள்.

**கடகம்:**
எதிலும் தெளிவான சிந்தனை, புத்தி சாதுர்யத்துடன் செயற்படும் நாள். குடும்பத்தில் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சோம்பியிருக்காமல் ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். பிரியமான சிலரின் சந்திப்பு நிகழும். நண்பர்களுடன் பார்ட்டி, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**சிங்கம்:**
உறவுகள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். நீங்கள் செய்ய நினைத்த காரியம் ஒன்றுக்கு குடும்ப உறுப்பினர்கள் தடை போடலாம். உடல் உபாதைகளால் மருத்துவச் செலவுகளுக்கு ஆள்படலாம். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் உருவாகலாம். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம்.

**கன்னி:**
நண்பர்கள், நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். கணவன், மனைவி இடையே கோபதாபங்கள் உண்டாகி பின்னர் சரியாகும். முக்கிய முடிவுகள் எடுக்கும் முன், ஒன்றுக்கு இரண்டு முறை யோசிப்பீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

**துலாம்:**
அலைச்சல் இருந்தாலும், அதற்கேற்ற ஆதாயம் பெறுவீர்கள். உறவினர்களால் உருவான வீண் பழிகள் அகன்று செல்வாக்கு கூடும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். நீண்ட கால திட்டம் ஒன்றை செயற்படுத்த முற்படுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைப்பதால் அவதிப்படலாம்.

**விருச்சிகம்:**
சிக்கலான விடயம் ஒன்றில் தலையைக் கொடுப்பதன் மூலம் மண்டை குடைச்சல்களுக்கு ஆள்படலாம். உங்களுக்கு எதிராக மறைமுகமாக சதி செய்யும் சிலரை அறிந்து கொள்வீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் போனில் பேசலாம்.

**தனுசு:**
நீங்கள் பிரச்சினை வராது என சாதாரணமாக நினைத்த விடயம் ஒன்றில், தொல்லைகள் உருவாகலாம். சிறிய விடயங்களுக்காக, சிலருடன் பெரிய அளவில் சண்டை போடலாம். பெண்கள், கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். வீண் பேச்சுக்கள்பேசி வம்பில் மாட்டிக் கொள்ளலாம். வாகன பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையலாம்.

**மகரம்:**
முத்தான வாய்ப்பு ஒன்று உங்களைத்தேடி வரலாம். நண்பர்கள் சிலருக்கு தேடிச்சென்று உதவி செய்வீர்கள். சிறிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில், பெரிய அளவில் பலன் கிடைக்கலாம். புதியவர்கள் சந்திப்பு நிகழும். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். ஆறுதலான நாள்.

**கும்பம்:**
விளையாட்டாகச் செய்த சில காரியங்கள், நல்ல விதமாக முடியலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மனதில் உற்சாகம், சந்தோஷம் குடிகொள்ளும். உறவினர்கள் சிலரின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். குறுகிய தூர பயணங்கள் செல்லலாம். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**மீனம்:**
மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். நடந்து முடிந்த சம்பவம் ஒன்றை நினைத்துக் கவலைப்படுவீர்கள். இளைய உடன் பிறப்புகள், ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். பிள்ளைகள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக, சில காரியங்களைச் செய்வீர்கள்.

# குகா

# இல

# வைக்கப்

இலங்கையில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கான பத்திரிகையாளர்கள் என்ற அமைப்பு வெளியிட்ட இந்தக் கட்டுரை, உதயன் செய்தி ஆசிரியர் குகநாதன் தாக்கப்பட்டதற்கான அரசியல் பின்னணியை அலசுகிறது. அரச பயங்கரவாதம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிய, பெரும்பாலும் சிங்களப் பத்திரிகை யாளர்களால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. குகநாதன் மீதான தாக்குதல் நாட்டின் ஜனநாயகத்தின் மீது விழுந்த மிகப் பெரிய அடி என்று இந்தக் கட்டுரை வர்ணிக்கின்றது. அதன் மொழியாக்கம் இங்கு தரப்படுகிறது.

உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலை ஊடக சுதந்திரத்தின் மீதும் மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாக மட்டும் கருதிவிடக் கூடாது. இலங்கைத் தமிழர்களின் ஜனநாயக உரிமைகள் மீது தொடரும் அடக்குமுறைகளும் வன்முறைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு விரைவுபடுத்தப்பட்டிருப்பதை இந்தத் தாக்குதல் சந்தேகத்துக்கு இடமற்று நிரூபித்துள்ளது. இந்த நாட்டின் அரசியல் மற்றும் இராணுவ அதிகாரங்களின் ஆசீர்வாதத்துடனும் பின்புலத்துடனுமே நிராயுத பாணியான ஊடகவியலாளன் மீது சமூகவிரோதக் கும்பல் இந்தப் பயங்கரவாதத் தாக்குதலை நடத்தி உள்ளது.

59 வயதான குகநாதன் பணி முடித்து தனது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது அவரின் பின்னால் சென்று இரு ஆயுததாரிகள் கூர்மையான இரும்புக் கம்பிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தி உள்ளனர். தலையில் படுகாயமடைந்த அவர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

### காவலரணுக்கு அருகில் இடம்பெற்றுள்ள தாக்குதல்

குகநாதனின் வீடு உதயன் பத்திரிகை அலுவலகத்தில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரத்துக்குள் அமைந்துள்ளது. கஸ்தூரியார் வீதி - நாவலர் வீதிச் சந்தியில் அமைந்துள்ள இராணுவக் காவலரணில் இருந்து 30 மீற்றர் தூரத்துக்குள்ளேயே குகநாதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

இந்தத் தாக்குதல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது என்று யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகையாளர்கள் தெரிவிக்கின்றனர். குகநாதனின் அயலவர்களின் கருத்துப்படி, சம்பவம் நடப்பதற்கு முதல் நாள் இரவிலும் அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் பலமணிநேரம் அவரது வீட்டின் முன்பாகக் காத்திருந்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் உதயன் பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்படும் இரண்டாவது தாக்குதல் இதுவாகும். மே மாதம் 28ஆம் திகதி நிறுவனத்தின் செய்தியாளர்களில் ஒருவரான செ.கவிதரன் வேலைக்கு வந்துகொண்டிருந்த போது ஆயுதம் வைத்திருந்த காடையர் கும்பல் ஒன்றால் இதேபோன்று தாக்கப்பட்டிருந்தார்.

உதயன் பத்திரிகை பலமுறை தாக்கப்பட்டுள்ளது. அதன் ஆசிரியர் உட்பட ஊழியர்களும் கடந்த சில வருடங்களில் பல தாக்குதல்களை எதிர்கொண்டுள்ளனர். உதயன் பத்திரிகையாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டவர் கூடக் கொல்லப்பட்டுள்ளார். மேலும் பலருக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றங்கள் தொடர்பில் இதுவரை ஒருவர் கூடக் கைது செய்யப்படவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் விடப்படும் இலங்கையின் பண்பு இந்த விடயத்திலும் தொடர்ந்து கொண்டே போகிறது. இத்தகைய அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களுக்கு மத்தியிலும் உதயன் பத்திரிகை நாளாந்தம் வெளி வந்துகொண்டே இருக்கின்றது. ஆட்சியாளர்கள் மீதான அச்சம் காரணமாக இலங்கையில் உள்ள ஏனைய பிரதான பத்திரிகைகள் வெளியிடாமல் தணிக்கை செய்யும் கட்டுரைகளையும் செய்திகளையும் உதயன் நாளாந்தம் வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றது.

### தேர்தல் முடிந்த கையோடு இடம்பெற்ற தாக்குதல்

இராணுவத்தின் முற்றுமுழுதான ஆக்கிரமிப்புக்கு மத்தியில் உள்ள யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளியான கையோடு மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒரு விடயத்தை மிகத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. அதாவது ஊடகங்கள் மற்றும் ஜனநாயகத்தின் மீதான அரசின் தாக்குதல்கள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன என்பதுதான் அது.

வன்னியில் நடந்த இறுதிப் போரின் போது நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில்



சர்வதேச சமூகத்தில் இருந்து கடுமையான அழுத்தங்களை எதிர்கொண்டுள்ள இலங்கை அரசு, இடம்பெயர்ந்த மக்களை முழுமையாகக் குடியமர்த்தாத நிலையிலும் வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை அவசரமாக நடத்தியது. போராளிகளின் கைகளில் முன்னர் இருந்த பகுதிகளில் ஜனநாயகத்தை முழுமையாக நிலைநிறுத்திவிட்டோம் என்று சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே அரசு உள்ளூராட்சித் தேர்தலை நடத்தியது.

### விமர்சனத்துக்கு உள்ளான அரசு

ஜூலை 23 ஆம் திகதி நடத்தப்பட்ட தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இராணுவம் பொலிஸ் உட்பட அனைத்து அரச வளங்களையும் மஹிந்த ராஜபக்ஷ அரசு தேர்தல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்தியது. பெரும் எண்ணிக்கையான அமைச்சர்களுடன் சென்று ஜனாதிபதி வடக்கில் முகாமிட்டார். ஐந்துக்கும் குறையாத தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொண்டார். போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாக்குகளைக் தனது கட்சிக்குக் கவர்வதற்காக என்ன செய்ய முடியுமோ அத்தனை தந்திரங்களையும் அவர் செய்தார். அளவெட்டியில் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கூட்டத்தின் மீது சிவில் உடையில் இராணுவத்தினரைக் கொண்டு தாக்குதல் நடத்தியது அதில் ஒரு தந்திரம்.

இந்தத் தேர்தலை எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்பதில் அரசுக்கு இருந்த பிடிவாதத்துக்கு இது சான்று. வடபகுதியை அபிவிருத்தி செய்வோம் என்ற வாக்குறுதியை மக்களுக்குக் கொடுத்து வாக்குப் பெற முயன்ற அரசு மறுபுறத்தில் தேர்தலில் அரசின் வெற்றியே முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ா ஏன் ...லக்கு ...ப்பட்டார்?



ஆயிரக்கணக்கான இளைஞர்களின் விடுதலைக்கான விலை என்றும் மிரட்டி வாக்குப் பெற முயன்றது.

நடந்து முடிந்த இந்தத் தேர்தல் மோசமான கண்டனங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளானது. இராணுவத்தினர் சீருடையிலும் அது இல்லாமலும் சென்று, அரச கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் அல்லது வாக்களிக்கவே செல்லக் கூடாது என்று வன்னியின் பல பகுதிகளில் மிரட்டினார்கள். வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள் அத்துடன் அவர்களில் பலரின் வாக்காளர் அட்டைகள் அரச ஆதரவுச் சக்திகளால் ஆயுதமுனையில் பறிக்கப்பட்டன.

ரேணுபிறேம்

எனினும் தமக்கான ஆபத்துக்களையும் பொருட்படுத் தாமல் வடக்குவாழ் தமிழ மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள். வடக்கு, கிழக்கில் கூட்டமைப்புப் போட்டி யிட்ட 25 இடங்களில் 20 இடங்களைக் கைப்பற்றி உள்ளது. ராஜபக்ஷ அரசுக்கு எதிரான மிகப் பெரிய வெற்றி இது.

பெரும் வெற்றியைப் பெற்றிருந்த போதும், பல இடங்களில் மீள் வாக் கெடுப்பு நடத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் கோரி இருந்தது. தேர்தல் தொடர்பில் நடைபெற்ற வன்முறைகளே அதற்குக் காரணம்.

மக்களின் தீர்ப்பால் ஆத்திரமும் கோபமும் அடைந்த அரசு, அரசியல் பழிவாங்கலாக உள்ளூர் தலைவர்களுக்கும் ஊடகங்களுக்கும் எதிராகத் தனது படைகளையும் துணைப்படைகளையும் கொண்டு மீண்டும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

### பஸில் கூறிய கருத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தோற்கடிக்கப்பட்டதை ஜீரணிக்க முடியாத அமைச்சர் பஸில் ராஜபக்ஷ (இவரே இந்த உள்ளூராட்சித் தேர்தலில் வடக்குப் பரப்புரைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்), தெருவிளக்குகளைப் பொருத்துவதற்கும் குடிதண்ணீர்க் குழாய்களைப் பொருத்துவதற்குமே தமிழ் மக்கள் கூட்டமைப்பினருக்கு தேர்தலில் வாக்களித்தனர் என்று மதிகெட்ட தனமாகக் கருத்துரைத்தார்.

மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளில் குகநாதன் மீதான தாக்குதலை, ஊடகவியலாளர் மீதான தாக்குதல் என்று மட்டுமே ஒதுக்கிவிட முடியாது. 40,000 படையினரின் கடுமையான காவலுக்குக் கீழ் இருக்கும் வடக்கில் ஒவ்வொரு விடயமும் எப்படி நிகழ்கின்றன என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. அத்துடன், அனைத்துலக சமூகம் மற்றும் நாடுகள் என்னதான் கண்டன அறிக்கையை விடுத்து சிறந்த அரசாட்சியை நடத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்தாலும் அவை எல்லாம் வீணானவையே என்பதையும் இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

தேர்தல்களை நடத்துவது என்பது ஜனநாயகத்தின் ஒரு கூறு மாத்திரமே. அதுவே முழு ஜனநாயகமும் இயல்பு நிலையும் திரும்பிவிட்டது என்பதைக் குறிப்பதாக ஆகிவிடாது, அதிலும் அவற்றை ஜனநாயகத்தையும் இயல்பு நிலையையும் அரசே கெடுக்கும் நிலையில் தேர்தலை ஒருபோதும் அப்படி அர்த்தப்படுத்த முடியாது.

வடக்கில் இருக்கும் இராணுவத்தினரை முற்றாக அகற்றுவதே அங்கு ஜன நாயகத்தையும் இயல்புநிலையையும் திருப்புவதற்காக மேற்கொள்ளக்கூடிய அர்த்தமுள்ள நடவடிக்கையாக இருக்க முடியும். பெரும் எண்ணிக்கையான இரா ணுவத்தினர் வடக்கே தேவையற்று நிலை கொண்டிருப்பது அந்த மக்களின் விருப் பத்துக்கும் சுதந்திரத்துக்கும் மாறானது.

இந்த நாட்டின் அரசியல் தலைமையினால் மிகப் பெருமளவில் கட்டுப்படுத்தப்படும் இராணுவத்தினராலும் துணைப் படையினராலும் வடக்கில் ஜன நாயகம் என்று கூறப்படுவது கேலிக் கூத்தாக்கப்படுவது தவிர்க்க முடியாதது. ✱



## இயற்கையின் இணைப்பு



“அந்த மனிதரைக் கண்டால் எனக்குள் வெறுப்பாக இருக்கிறது''. இப்படிக் கூறுபவர்கள் பல பேரை நாம் பார்திருக்கிறோம். எமக்கும் கூட அதுமாதிரி அனுபவங்கள் ஏற்படுவது உண்டு.

ஒரு குறிப்பிட்ட மனிதரை நெருங்கும் போது திடீரென்று எமக்கு வெறுப்புத் தோன்றும். உடனே விலகி வந்துவிடலாம் என்று நினைப்போம்.

ஏதோ ஒன்று எம்மை வெளியே தள்ளுகின்ற மாதிரியாக உணர்வோம். ஆனால் சில பேரைப் பார்த்தால் ஓடிப்போய் அன்பாகக் கட்டிப் பிடித்திருக்கலாம் என்று தோன்றும். அவரே எம்மை அன்பாகக் கூப்பிடுகிற மாதிரி உணர்வோம்.

எமக்குள்ளே ஏற்படுகின்ற அலைகள் தான் இதற்குக் காரணம். வெறுப்பை உருவாக்குகின்ற, விருப்பை உருவாக் குகின்ற அலைகள் உண்டு என்பதை நிரூபிக்கின்ற மாதிரி ஒரு இயந்திரத் தைக் கண்டுபிடித்திருக்கிறார் பிரான்ஸில் உள்ள ஒரு விஞ்ஞானி.

எடை பார்க்கின்ற கருவியில் ஏறி நின்றால் அதில் உள்ள முள் எம் எடையைக் காட்டுகிறது. அது மாதிரி இந்தக் கருவியின் முன்னால் நின்றால் எதிரில் நிற்பவரின் அலைகள் மற்றவரை விலகி ஓடச் செய்கின்ற அலைகளா; அல்லது அருகில் ஈர்க்கும் அலைகளா என்பதை அந்த முள் தெரிவிக்கும்.

மனிதர்களிலேயிருந்து எழுப்பப்படுகின்ற இந்த அலைகளுக் கும் இயற்கைக்கும் ஓர் இணைப்பு உண்டு. அந்த இணைப்பு சரியாக இருந்தால் இந்த உலகத்தில் எல்லாம் சரியாக நடக்கும்.

அந்த அலை இன்றைக்கு சரியாக இல்லை. அதனால் தான் மழை சரியாகப் பெய்வதில்லை. பயிர் விளைச்சல் சரியாக இல்லையென்றால் அதற்குச் சரியாக எருப்போடவில்லை என்பது விஞ்ஞான காரணம். அதைவிட மனிதன் தன்னிடமிருந்து எழுகின்ற அலைகளுடன் இயற்கைக்கு இருக்கிற இணைப்பைக் கலைத்துவிட்டான் என்பதுதான் அந்தக் காரணம். மனிதன் தனியாக நிற்கிறான், ஒரு விரோதி மாதிரி அவனுக்கு மேகத்திடமும் நட்பு இல்லை; நதிகளிடமும் நட்பில்லை.

எம் முன்னோர்கள் நதியை வணங்கினார்கள். மலைகளை வணங்கினார்கள். சூரியனை வணங்கினார்கள். இயற்கையோடு ஒரு நட்பு இருந்தது. அதனால் அந்த அனுபவத்தை அவர்கள் உணர்ந்தார்கள்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் ஒரு ஆராய்ச்சி நடந்தது. அது என்ன ஆராய்ச்சி என்றால், இரண்டு பாத்திகளில் விதை விதைத்தார்கள். ஒரே மாதிரி விதை, ஒரே மாதிரியான உரம், ஒரே மாதிரியான பாத்தி. இப்படி எல்லாம் ஒரே மாதிரியாக இருந்தன.

ஒரு பாத்திக்குப் பக்கத்தில் துள்ளல் இசைப் பாடல்கள் போட்டார்கள். இன்னொரு பாத்திக்கு அருகில் சாஸ்திர சங்கீதப் பாடல்கள் போட்டார்கள். 24 மணி நேரமும் பாடல்கள் போடப்பட்டன.

துள்ளல் இசைப் பாடல்கள் இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள புதிய தலைமுறையின் சங்கீதம். சங்கீதம் குறைவு, சத்தங்கள் அதிகம். சாஸ்திர சங்கீதத்தில் உண்மையின் அர்த்தத்தில் ஸ்வரங்களின் சங்கம இணைப்பு ஒழுங்காகப் பிணைந்திருக்கும்.

இதன்படி ஆராய்ச்சியின் முடிவு என்ன தெரியுமா? துள்ளல் பாட்டுப் போட்ட பாத்திகளில் முளைவிடவில்லை. ஒன்று, இரண்டு துளிர் விட்டாலும் அதெல்லாம் சரியான வளர்ச்சியை அடையவில்லை. பாதி காய்ந்த நிலையிலேயே இருந்தன. சாஸ்திர சங்கீதம் இசைக்கப்பட்ட பாத்தியில் சாதாரணமாக துளிர்ப்பதை விட ஒன்றரை மடங்கு பெரிதாகவும் அதிக எண்ணிக்கையிலும் துளிர்கள் வந்தன. சங்கீதத் துறையிலிருந்து எழுந்த ஒலி அலைகள் தான் இந்த வேறுபாட்டுக்குக் காரணம். இசையிலிருந்து அலை எழுப்ப முடியுமானால் மனிதர்களின் செயல்களிலியிருந்து அலைகள் எழும்பாதா என்ன?

அகங்காரமுள்ள மனிதன் கொடூரமான அலைகளை எழுப்புகிறான். அகங்காரமற்ற மனிதன் தன்னைச் சுற்றி சாஸ்திர சங்கீதத்தைப் பரப்புகிறான் என்கிறார் ஓஷோ. எனவே எம்முடைய எண்ண அலைகள் தான் இந்த உலகத்திலே நல்ல நிகழ்வுகளுக்குக் காரணம்.


இயற்கையை வணங்குங்கள், இயற்கையோடு நட்பாயிருங்கள், அதுதான் இன்றைய தேவை.

ஒருத்தர் மேடையில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்தார். எதிரில் ஒரு சிறுவன். இவர் பாட ஆரம்பித்தார். அவன் அழ ஆரம்பித்தான். இவர் இன்னும் கொஞ்சம் வேகமாகப் பாடினார். அவன் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். இவர் பாட்டை நிறுத்திவிட்டு ''தம்பி ஏனப்பா இப்படி தேம்பித் தேம்பி அழுகிறாய்?'' என்று கேட்டார். அதற்கு அவன் சொன்னான் ''நேற்று எங்கள் ஆடு இதே மாதிரித்தான் கத்திக் கத்திக் கடைசியில் செத்துப் போய்விட்டது'' என்றான்.

கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
01 ஓகஸ்ட் 2011 திங்கட்கிழமை



கரவெட்டி, தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஆங்கிலதின விழாவில் அதிபர் எம். நவநீதமணி தலைமையில் விருந்தினர்களான வடமராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி, ஓய்வுபெற்ற அதிபர் எஸ். யோகசிங்கம் சகிதம் அழைத்து வரப்படுகின்றனர். (ம-190)

# இன்றைய இளையோரை வழிப்படுத்தும் கட்டாய நிலை சமூகத்துக்கு உள்ளது

**யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர்**

இன்றைய இளைஞர், யுவதிகளை ஆற்றல்படுத்தி நல்வழிப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்குச் சமூகம் தள்ளப்பட்டுள்ளது.

பல பின்னணிகள் காரணமாக இளைஞர்களும் யுவதிகளும் எமது கலை, கலாசாரப் பண்பாட்டை இழந்து மாறுபட்ட சூழ்நிலைகளுக்குத் தள்ளப்பட்டுவிட்டனர்.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் வேல்நம்பி இவ்வாறு கூறினார்.

துளிர்கள் நிறுவனத்தின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 'றிங்றிங் சமூக சீர்திருத்தக் குறுந்திரைப்பட வெளியீடும் சேர் பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நிறுவனப் பணிப்பாளர் கே.எஸ்.ரகு தலைமையில் அண்மையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யதார்த்தமான காரணங்களான இணையம், தொலைக்காட்சி, கைத்தொலைபேசி என்பன இருந்தபோதிலும் இந்த நவீன தொழில்நுட்பம் இளைஞர், யுவதிகளை வளப்படுத்தி உள்ளது.

இவற்றின் பிரயோகம் அறிவையும், ஆற்றலையும் வளப்படுத்தியுள்ளன. தாமாகவே இந்த அறிவைப் பெற்றுக்கொண்டாலோ வாய்ப்புக்களைத் தேடிப் பெற்றுக்கொண்டாலோ அந்த அறிவைச் சாதகமான காரணங்களுக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தாம் பெற்றுக்கொண்ட அறிவை சாதகமான காரணங்களுக்காக பயன்படுத்துகின்றமை தொடர்பான விடயத்தில் அவதானிப்புடனும் விழிப்புடனும் இருப்பது பெற்றோர்களினதும் உறவினர்களினதும் கடமையாகும்.

பாடசாலை மாணவர்களின் மத்தியில் கைத்தொலைபேசி பற்றிய விழிப்புணர்வுகளை ஊட்டுவது ஆசிரியர்களின் பங்கு.

பாடசாலைகளில் தொலைபேசி கொண்டுவருவதை தடைசெய்வது மாணவர்களுக்கு நற்புத்தி வழங்குவது பாடசாலைச் சமூகத்தைச் சார்ந்தது.

நவீனதொழில்நுட்ப வளர்ச்சி சமூகத்துக்கு தேவையான ஒன்றாக விளங்குகிறது.

அவற்றைச் சாதகமான முறையில் பயன்படுத்தி சமூகத்தினதும் குடும்பத்தினதும் வளர்ச்சியில் பங்குகொள்ள வேண்டும்.

பெற்றோர்களின் கண்காணிப்பில் வெளிப்படுத்தப்படும் எந்தவொரு வெளிப்பாடும் சாதகமான காரணிகளாகவே அமையப் பெறும் - என்றார். (ம-311)

# மனிதனின் முழுமையான உருவாக்கமே கல்வி நிலையின் முக்கிய நோக்கமாகும்

**கிறிஸ்தவ, இஸ்லாமியத் துறைப் பேராசிரியர்**

கொழும்புத்துறை, ஓக. 1

கல்வியின் முக்கிய நோக்கம் ஒருவரின் முழுமனித உருவாக்கமே. மாணவர்களின் அறிவுத்திறன் வளர்ச்சி சமச்சீரான சிந்தனைப் போக்கு என்பன கல்விச் செயற்பாடுகளிலேயே ஏற்படுத்தப்படுகின்றன.

மாணவர் உருவாக்கத்தில் குடும்பமும், பாடசாலையுமே அடிப்படை அலகுகள்.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ஞா.பிலேந்திரன் அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

30 வருடப் போர் பல தமிழர் பாரம்பரிய விழுமியங்களை அழித்து ஒழித்து விட்டது. பெரியோரை மதித்தல், சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாக ஒழுகுதல், சமய விழுமியங்களுக்கு மதிப்புக் கொடுத்தல் போன்றவை அருகிப் போய்விட்டன.

தற்கால மாணவர்களின் நன்னடத்தை குறித்து பெற்றோர், பெரியோர், ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

நவீன தொழில்நுட்ப சாதனங்களாகிய தொலைக்காட்சி, கணினி, இணையம், தொலைபேசி போன்றவை பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

பெற்றோர் பிள்ளைகளை ஊக்கப்படுத்தி கற்க வைப்பதை விடுத்து குடும்பக் கௌரவத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவர்மீது தமது விருப்பு வெறுப்புக்களைத் திணிப்பது தவறாகின்றது.

அவர்கள் சுயமாகத் தமது துறையை தெரிவுசெய்து படிக்க ஊக்கப்படுத்துவதுடன் எம் இளைய சமூகத்தின் முழு மனித பண்பாட்டு உருவாக்கத்தில் அனைவரும் துணை செய்ய வேண்டும் என்றார். இப்பரிசளிப்பு விழாவில் கல்லூரியின் முகாமையாளரும் யாழ். ஆயருமான மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொண்டு ஆசியுரையை வழங்கினார். (ம-135)

# சண்டிலிப்பாய் பிரதேச கலை இலக்கிய போட்டி முடிவுகள்

தேசிய கலை இலக்கியப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை முடிவுகள் வெளியாகியுள்ளன. வெற்றி பெற்றோரின் விவரம் வருமாறு:-

சிறுகதை-கனிஷ்டபிரிவு- அ.சுபிக்சனா(பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை), சி.ல்ங்ஜெயரூபிகா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க. த.க பாடசாலை)

கவிதை-கனிஷ்ட பிரிவு- ஜெ.துவாரகன்(மானிப்பாய் இந்துக்கல்லூரி), அ.கிறேக்கர் (புனித ஹென்றியரசர் கல்லூரி), யோ.சுமித்ரா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை)

கவிதை-சிரேஷ்ட பிரிவு- ம.திவ்யபிரசாந்(புனித ஹென்றியரசர் கல்லூரி), றொ.திலக்ராஜ்(புனித ஹென்றியரசர் கல்லூரி), அ.ஜீவராசா(புனித ஹென்றியரசர் கல்லூரி)

கட்டுரை-கனிஷ்ட பிரிவு- அ.அனுசன்(பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை) ப.சயந்தினி(பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை), ஜா.கிறிஸ்ரியன்(பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை)

கட்டுரை-சிரேஷ்ட பிரிவு- நா.நிரோசா(பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), செ.ம.டிலக்சனா- (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை), க.தவலட்சயா- (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை)

கையெழுத்துப்போட்டி- சூ.ஜெனிக்நாதன் (புனித ஹென்றியரசர் கல்லூரி)

கவிதை-ஜோ.தேவமதி (மாகியப்பிட்டி), ஏ.தினேஸ் சங்கர்(சுதுமலை தெற்கு)

பாடலாக்கம்-ர.துவாரகா(சண்டிலிப்பாய் வடக்கு), ஏ.தினேஸ் சங்கர்(சுதுமலை தெற்கு), ஜோ.தேவமதி (மாகியப்பிட்டி),

விமர்சனம்-ஜோ.தேவமதி (மாகியப்பிட்டி)சு.காசிராசா(சண்டிலிப்பாய் வடக்கு) (வ)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.1

சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் யாழ். மாவட்டத்தின் புதிய நிர்வாக சபைக்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். கடற்கரை வீதியில் உள்ள பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அந்த அமைப்பின் பொதுக்கூட்டத்தின் போதே உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இலங்கை சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் பேராசிரியர் ஜயந்த களுபோவில தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

மாவட்ட நிர்வாகப் பணிப்பாளரான பேராசிரியர் கலாநிதி இராமநாதன் சாந்தன், மாவட்டப் பணிப்பாளரான சு.இரத்தினசிங்கம், தேசியப் பணிப்பாளரான விஸ்வகீர்த்தி ரி.தர்மரட்ணம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கலாநிதி தேசமானிகளான கே.எம்.பத்மநாதன், எஸ்.நித்தியானந்தன், கோ.சந்திரசேகரம் ஆகியோரும் கலாநிதி எஸ்.ஜெயசங்கர், ரி.விமலன் மரிய கொறட்டி அன்ரன், எம்.பிராண்சிஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மாவட்டத்தின் பிரதேச செயலாளர் ரீதியாக உதவிப் பணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-14)

# உறுப்பெழுத்தில் முதலாமிடம்



2010 தேசியமட்ட ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை மாணவன் செல்வன் சிவகோணேசன் மனாமிர்தன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ம)


# பா ஓதலில் முதலிடம்



அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான தமிழ்த்தினப் போட்டியில் யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய தரம் 5 மாணவி செல்வி அ.யோ. ஆரபி பாவோதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் மூலம் அரசுக்கு கூறப்பட்ட உறைப்பான செய்தி



பல்வேறுபட்ட பிரயத்தனங்களுக்கு மத்தியில், பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு மத்தியிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முடிவுற்று மக்களின் யதார்த்த நிலையை, இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் எடுத்துரைத்திருக்கிறது. எமது மக்களின் எதிர்பார்ப்புக்கள் வீண்போகாது என்பதற்கு தமிழ் கூட்டமைப்பின் வெற்றி சான்றாகிறது.

அரசு தான் வெல்ல வேண்டும் என்பதற்காக பல்வேறுபட்ட உத்வித் திட்டங்கள் வழங்கப்படுவது போல் பாசாங்கு செய்து பல்வேறு அழுத்தங்களையும் மறைமுகமாகவும், நேரடியாகவும் பிரயோகித்தது. ஆனால் அவை எதனையும் தமிழ் மக்கள் கண்டு கொள்ளவில்லை. மாறாக அரசியல் தீர்வின் அவசியத்தை இந்த மக்கள் தேர்தல் முடிவுகள் மூலம் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆம் '' இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் உறைப்பான, உறுதியான செய்தி சொல்லப் பட்டிருக்கிறது''. அதுவே ''தமிழ் மக்கள் எதற்கும் விலை போகமாட்டார்கள். எனவே தீர்வை விரைந்து முன்வையுங்கள்'' என்பதே அந்தச்செய்தியாகும்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசு தொடர்ந்து மௌனம் சாதிக்க முடியாது. அல்லது சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. சர்வதேசத்தின் அழுங்குப் பிடிக்குள் சிக்கியுள்ள இலங்கையின் மஹிந்த அரசு தமிழரின் அரசியல் தீர்வு விடயத்தில் உடனடி கவனமெடுத்து செயற்பாடுகளில் இறங்க வேண்டும். மாறாக சர்வகட்சிக் குழு போன்ற குழுக்கள் அமைத்து காலத்தை வீணடிக்கக்கூடாது. அவ்வாறு காலங்கள் வீணடிக்கப்பட்டால் எதிர்கால அரசின்நிலை கேள்விக் குறியாகவே அமையும். கடந்த காலங்களில் அரசுடன் சேர்ந்து செயற்படும் குழுக்கள் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத்தருவோம் எனத் தேர்தலில் வெற்றிபெற்றார்கள். ஆனால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். தொடர்ந்து ஏமாற்றுவதற்கு தமிழ் மக்கள் ஏதிலிகள் அல்ல என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் அரசுக்கு வெளிப்படுத்தியுள்ளன.

இதேபோன்று தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மீது அதீத நம்பிக்கை கொண்டு, ஏகப் பிரதிநிதிகளாக அவர்களை ஏற்றுக்கொண்டு தமது அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான ஆணை கூட்டமைப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆணையை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளில் முன்னரைவிட வேகத்துடன் ஈடுபட வேண்டும். அரசுடன் இறுதிவரையில் பேசி தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

தற்போது நடைபெற்றுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் அரசியல் அனுபவமற்ற புதுமுகங்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர். இவர்களுக்கு கூட்டமைப்பினர் வழிகாட்டிகளாகச் செயற்பட்டு இவர்களை நடத்திச் சென்று எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக மக்களின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தியாக்கப்படுவதுடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்குப் பலம் சேர்ப்பதாக அமையும்.

**ஷங்கவி**

மாறாக இலங்கை அரசு தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் மேலும் இழுத்தடிப்புக்களைச் செய்யுமாயின் சர்வதேசத்தின் அழுங்குப் பிடியிலிருந்து விடுபட முடியாது. அதே போன்று தமிழ் கூட்டமைப்பினர் உடனடியாக செயற்பட்டு மக்களின் அபிவிருத்திக்கும் அரசியல் தீர்வுக்குமான அழுத்தங்களை அரசின் மீது பிரயோகிக்க முடியாவிட்டால் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும், சர்வதேச சமூகம் கூட்டமைப்பின் மீது கொண்டுள்ள எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் வீண்போகாமல் காக்கவேண்டிய பெரிய பொறுப்பு கூட்டமைப்பின் மீது சுமத்தப்பட்டுள்ளது. எனவே அவை தொடர்பாக சிந்தித்து செயற்படுவதன் ஊடாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை ★


## தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த London குடியுரிமை உள்ள 1982 இல் பிறந்த சித்திரை 3ஆம் பாதம் உதயத்தில் செவ்வாய், கிரகபாவம் 30. பிரான்ஸ் இல் குடியுரிமை உள்ள 1951 இல் மகம் 4 ஆம் பாதம் உதயத்தில் செவ்வாய், 35 பாவம் 1977 இல் பிறந்த, 8 இல் செவ்வாய், கிரகபாவம் 62 1/2 உத்தரட்டாதி 2 ஆம் பாவம் கனடா குடியுரிமை உள்ள மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவுக்கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத் தப்படுவீர்கள். வெளிநாடு ரூபா 4000/- உள்நாடு 2000/-

தொடர்புகளுக்கு: விஜய்: 0771307185, வாணி 0778501013

Govt.Registered (international) V.I.M.B

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான No.1 Prima புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 04.08.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

★ சூட்டிபாம் சென்ரர் - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம் - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பருத்தித்துறை -0771392593
★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி - 0776225944

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண் நாயும், 8மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும், 3 மாதம் சினைப் படுத்திய யமுனாபாறி ஆடும். மணித்தாராக்களும் வான்கோழி, வன்டம், சில்க்கி, வெள்ளடியன் போன்ற கோழிவகைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு வி.மயூரன் இல. 209, பலாலி வீதி, கோண்டாவில், ராஜாபிளாசா முன்பாக.

0726997331

## வேலை வாய்ப்பு

கணினி ரைப்செற்றிங் செய்யக் கூடியவர் தேவை.

நல்ல திறமை/ முன் அனுபவம் உள்ளவருக்கு உயர்ந்த சம்பளம் வழங்கப்படும்.

0772174751

## கடை வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி ஏ-9 வீதி
பெரிய ஆஸ்பத்திரிக்கும்
வலயக் கல்விக்கும் இடையில்
இருக்கும் ஐந்து தொடர் கடை
களில் ஒன்று 65 அடி நீளமும் 12
அடி அகலமும் கொண்ட கடை குளி
யல் அறை, மலசல கூடம், குழாய்
தண்ணீர், மின்சார வசதிகளுடன்
களஞ்சிய அறையும் உண்டு.

விவரங்கள் அறிய 0773362140


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
17 ★ 10 ★ 1930



மறைவு
01 ★ 07 ★ 2011

### அமரர் விஷ்வலிங்கம் தம்பி

எமது தம்பி மாமா எம்மை விட்டுப் பிரிந்தபோது ஆவன மேற்கொண்ட அன்பு உள்ளங்கொண்டோருக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்ட இனிய உள்ளங்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (01.08.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''பிறேமகிரி''
நெற்கொழு வீதி,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

சகோதரி: செல்வி வி. புஷ்பம்,
(அம்பன் முன்பள்ளி ஆசிரியர்),
மருமகள்: திருமதி தே. முத்துராஜா.

(6378) (27-21)

## 13 ஆம் வருட நினைவுநாள்

## கவிதாஞ்சலி

தோற்றம்: 05.05.1968

மறைவு: 25.07.1998

தோற்றம்: 11.04.1950





**அ.இந்துமதி** **கி.சிவகெங்கா**

திதி: துதியை

காலத்தாலும் அழியாத நினைவலைகள் நெஞ்சில்
கலைமகளாய் இருமகளாய் வளர்ந்த எம் செல்வங்கள்
குலதெய்வம் எங்கள் நெற்கொழு வைரவர் விழாக்காணக் கடல்
அது தாண்ட துணிந்த செல்வங்களே உங்களை கொடிய
கூற்வன் கடலில் நின்று கவர்ந்தானே அன்று கலங்கிய
மனதோடு துடித்த நாளதை நாம் மறவோம்
குலக்கொழுந்துகளே மறந்திடமாட்டோம் உங்களை காலங்கள்
கடுகி மறைந்தாலும் மறையாது வாழ்வீர்கள் நெஞ்சில்

என்றும் உங்கள் நினைவில் வாழும்

கம்பர் மலை,
வல்வெட்டித்துறை.

ஆகி. அருணகிரிராசாவும்
குடும்பத்தினரும்


1816 - 2011

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

01-08-2011 (இன்று)

195 ஆம் ஆண்டில்


கால்பதிக்கும்
எனது பாடசாலை வாழ்க
இவ் வையகம் உள்ளவரை!

Central's Flag must ne'er be Lowered

மத்தியின் பழையவன்

தப்பவே முடியாது
மறைந்து வாழும்
கரப்பான்
பூச்சிகள்கூட


## நான்காம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம்: 1922.12.06
மறைவு: 2007.08.14

அமரர்
**சரவணமுத்து சதாசிவம்**
('சாண்டோ' என்னும் சற்குணத்தான்)

மண்ணிலே மலர்ந்த மதி நிறைவாளன் - எங்கள்
மனத்திலே நிறைந்த சதாசிவப் பெரியோன்
அறவழிஅன்றிப் பிறவழி அறியான்
அறிவுரை சாற்றும் அன்புடை ஆசான்

அன்னை இராஜ இராஜேஸ்வரி அம்மைமீது பக்தி மிக்கவன்
ஆலயம் சிறக்க அரும்பணி செய்திட்டான்
மக்களை அரவணைக்கும் பண்புகொண்ட சீராளன்
மக்கள் மனதில் உறைந்திட்ட சாண்டோ என்னும் சண்குணத்தான்


சீருயர் குணக்குன்று சிறந்த நாடக எழுத்தாளன்
சிறப்புற நற் சமூக சேவை செய்திட்ட செம்மல்
சீராக நாம் வாழ சிறப்பாக வழிகாட்டி
சிவனடி சேர்ந்திட்ட நான்காம் நினைவுநாள் இன்றாகும்

இல.305, A.V. றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(6991) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கியின் 72ஆவது ஆண்டு நிறைவுக்கு எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள்



ரூபா. 19,700,000,000
கடன் உதவிகள்

வடக்கு மக்களாகிய எங்களுக்கு வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக கமதொழிலுக்கும், மீன்பிடி தொழிலுக்கும் , கால்நடை அபிவிருத்திக்கும் , வர்த்தக நடவடிக்கைகளுக்கும், சிறிய மற்றும் நடுத்தர கைதொழில் நிறுவனங்களுக்கும் ஈடிணையற்ற நிதி வழங்கியதோடு 46 கிளைகளின் ஊடாக எம் மக்களுக்கு சேவையாற்றி யாழ் குடா நாட்டில் இரண்டு தீவுப் பகுதிகளிலும் கிளைகளை கொண்டுள்ள ஒரே வங்கியான இலங்கை வங்கியினது 72 ஆவது ஆண்டு நிறைவுக்கு இதய பூர்வமான வாழ்த்துக்கள்

வர்த்தக சம்மேளனம் - யாழ்ப்பாணம்
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 021 2222367


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகத்துடன் சமூகப் பணியையும் முன்னெடுக்கும் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நிறுவனம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

யாழ். சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஆன்மிக சேவைகளை விட சமூக சேவைகளும் இடம்பெறுகின்றன. குறிப்பாக வறிய பிரதேசங்களை இலக்கு வைத்து இந்தச் சமூக சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்கள், விதவைகள், கணவனைப் பிரிந்து தலைமைத்துவமான பெண்களைக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரக் குறையை நிறைவேற்றக்கூடிய பல்வேறு சமூக சேவைகள் இடம்பெறுகின்றன.

பிரதேசங்கள் தோறும் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கல் உட்பட மேலதிக கற்றல் வகுப்புக்களையும் நடத்தி வருகின்றது. அத்துடன் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்குவதுடன் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்பதற்கும் பண உதவிகளையும் வழங்குகின் றது.

கற்றல் உபகரணங்கள் குறிப்பாக வறிய மாணவர்களைச் சென்றடைய வேண்டும் என்பதே இந்த நிறுவனத்தின் எதிர்பார்ப்பாகும். இவை யாவும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து முன்னேற்றகரமான கற்றல் நடவடிக்கைகளுக்கு முன்னின்று செய்யப்படும் சமூக சேவைகளில் ஒன்றாகும்.

அது மட்டுமல்லாது வைத்திய சாலைகளில் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் மருத்துவ செலவுகளையும் பொறுப்பெடுத்துச் செய்து வருகின்றது.

இந்த நிறுவனத்தின் இன்னொரு சமூகப் பணி பெண்களை முன்னிலைப் படுத்தி உள்ளது.

அந்த வகையில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதார தேவைகளைக் கருத்தில்கொண்டு அந்தந்தக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தாமாகவே சுயதொழில்களை மேற்கொள்வதற்காகக் கிராமங்கள் தோறும் 10, 15 அங்கத்தவர்கள் கொண்ட சிறுசிறு குழுக்களை அமைத்து சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வழிகாட்டி வருகின்றது.

அந்தக் குழுக்கள் சேமிப்புச் செய்யப்படும் பணத்தைக் கொண்டு சுயதொழிலுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்து சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபட வழி சமைத்துக் கொடுக்கின்றன.





அத்துடன் இந்தக் குழுக்களின் ஊடாக அரச, தனியார் வங்கிகளில் கடனுதவிகளைப் பெறுவதற்கும் உதவி செய்து வருகின்றது.

''மகளிர் மன்றம்'' என்னும் பெயருடன் இயங்கி வரும் இந்தக் குழுக்கள் தற்போது கோண்டாவில், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ளன.

கிராமியப் பெண்களின் வாழ்வாதாரத் தேவைகளை இலக்கு வைத்துச் செய்யப்படும் இந்தச் சமூக சேவையில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் பயன் பெற்று வருகின்றன.

இந்த மகளிர் மன்றம் வெகு விரைவில் அரியாலைப் பிரதேசத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்த நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்காகச் செய்யும் சமூக சேவைகளில் கோண்டாவில் இந்து மாகவித்தியாலயம், கொக்குவில் நாமகள் வித்தியாலயம், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவி, பொருள் உதவி என்பவற்றை வழங்கி வருகின்றது.

30 இற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டு பிரதேசங்கள் தோறும் அபிவிருத்தியை ஏற்படுத்தி வரும் இந்தத் தொண்டு நிறுவனம் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்யா தலைமையில் வழிப்படுத்தப்படுகின்றது.

இது போன்ற சமூக சேவைகள் வட மாகாணம் முழுதும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதே இந்த நிறுவனத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது. கல்வி, அறிவு, ஒழுக்கம், ஆன்மீக ரீதியாக வாழ்வை மேம்படுத்த பல்வேறு தொண்டுகளை ஆற்றிவரும் இந்த நிறுவனத்தின் சேவை சகல பிரதேசங்களையும் சென்றடைய வேண்டும் என்பதே சமூக சேவையாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. (முற்றும்) *

**சோபனா**

வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக
அவர்தம் வாழ்விடங்களை நோக்கி...

இலங்கை வங்கி

**முழங்காவில்**
விரிவாக்கற் காரியாலயம்
நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்

**ஒட்டுசுட்டான்**
விரிவாக்கற் காரியாலயம்
மாங்குளம் வீதி, ஒட்டுசுட்டான்
(உதவி அரச அதிபர் பணிமனையில்)

மேற்படி விரிவாக்கற் காரியாலயங்கள்
2011 ஓகஸ்ட் மாதம் 01ஆம் திகதி
திங்கட்கிழமை (இன்று)
முற்பகல் 10.00 மணிக்கு திறந்து
வைக்கப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறிவித்துக்
கொள்கின்றோம்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## காரைநகர் பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல் - 2011

பின்வரும் வேலைக்கான பொருத்தமான அட்டவணையில் காட்டப்பட்டவாறான (ICTAD) தகுதி உடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் திகதி: 01.08.2011 - 19.08.2011 பி.ப. 2மணி வரை
2. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி: 22.08.2011 பிற்பகல் 12.30 மணிவரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி: 22.08.2011 பி.ப. 2மணி (கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்)
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் வேலையின் பெயருடன் 'செயலாளர், காரைநகர் பிரதேச சபை, காரைநகர்' என முகவரியிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ சமர்ப்பிக்கமுடியும். அதன் பிரதியை 'பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டும்.
5. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

| இல | வேலை விபரம் | பதிவுத் தரம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்க முடியாதது | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கேள்விப் பத்திரம் | Vat வரி 12% | NBT வரி 2% |
| 01. | Construction of Semi Permanent Resting Hall (HEXA GONAL) & Construction of Resting Chair with Arm, armless at Casorina Beach karainagar | C9/M8 | 20000.00 | 1000.00 | 120.00 | 20.00 |

திரு.க.கனகதுரை,
செயலாளர், பிரதேச சபை, காரைநகர்.
01.08.2011

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக் காலத்தில் மாணவர்கள் இலவசப் பயணம்; அமைச்சு கோரினால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்

## இலங்கை போக்குவரத்துச்சபை அறிவிப்பு

கொழும்பு, ஓக.1

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சைக் காலத்தில் இலவசமாகப் பயணம் செய்வதற்கான வசதிகளை வழங்குமாறு தம்மிடம் கேட்கப்படவில்லை என இலங்கை போக்குவரத்துச்சபை கூறியுள்ளது.

இந்தச் சேவைகளை வழங்குமாறு அமைச்சரிடமிருந்தோ அல்லது அமைச்சிடமிருந்தோ இதுவரை கோரிக்கை எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை - என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் எம்.டி.பந்துசேன கூறியுள்ளார்.

போக்குவரத்து அமைச்சு அல்லது கல்வி அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டால் அது தொடர்பாகப் பரிசீலனை செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தனியார் பஸ்கள் இலவச போக்குவரத்துச் சேவையை வழங்கும் என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்தன கூறியிருந்தார்.

ஆனால், இலவச சேவைகளை தனியார் பஸ்கள் வழங்காது எனவும் கல்வியமைச்சிடமிருந்து அது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்திருந்தது.

பிள்ளைகளின் கல்வியில் இந்த மாதிரியான வெற்று அறிக்கைகளை விடுப்பதன் மூலம் அதிகாரிகள் இடையூறை ஏற்படுத்துகின்றனர் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண கூறியுள்ளார். (ச)



ஈரான் அரசின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காங்கேயனோடை கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டு திட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
இந்த வீட்டுத்திட்டத்தை ஈரான் பிரதி வெளிவிவகார அமைச்சர் செய்த் அமீர் மன்சூர் பேர்காய் நாடாவெட்டித் திறந்து வைக்கின்றார். அருகில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் மற்றும் பிரமுகர்களும் காணப்படுகின்றனர்.

# தமிழ் மக்களின் ஒற்றுமை மூலமே உரிமைகளைப் பெற முடியும்

கொழும்பு, ஓக.1

தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருப்பதன் மூலமே உரிமைகளைப் பெற்று கொள்ள முடியும். உங்களது ஒற்றுமை எங்களுக்கும் ஒரு பலமாகவே இருக்கும் என புளத்சிங்கள பிரதேசசபை உறுப்பினர் ரீ.ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

புளத்சிங்கள மிரிசேன மற்றும் ஹொரண பேர்த், மாப்புட்டுகல தோட்ட மக்கள் மத்தியில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தோட்டத் தொழிலாளர்கள் முன்னர் போன்று கைகட்டி நிற்காது விழிப்படைந்துள்ளனர். தட்டிக்கேட்கும் தைரியம் பெற்றுள்ளனர்.

மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் போது தொழிற்சங்க ரீதியாக நோக்காது மக்கள் பிரதிநிதியாகவே அவர்கள் முன் சென்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தி வருகின்றேன்- என்றார். (ச)

# 1000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டம்; முதலாம் தர மாணவர் அனுமதியில் பாதிப்பு

கொழும்பு,ஓக.1

அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்படவுள்ள ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டம் சம உரிமை வழங்கும் ஒரு திட்டமாக இருந்தாலும் முதலாம் தரத்துக்கு அனுமதிக்கப்படவுள்ள மாணவர்கள் இந்தத் திட்டத்தால் பாதிக்கப்படுவார்களென பெற்றோரும், நலன்விரும்பிகளும் விசனம் தெரிவிக்கின்றனர்.

1000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்படும் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு இல்லை. இதனால் 2012 ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கும் அனுமதிக்கப்பட வேண்டிய மாணவர்கள் தமது பிரதேசத்தில் காணப்படும் பாடசாலையில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இதனால் ஏனைய பிரதேசத்தில் காணப்படும் ஒரு ஆரம்ப பாடசாலைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் தனியாக தூரப்பிரதேசத்தில் காணப்படுகின்ற ஒரு பாடசாலைக்கு 6 வயது மாணவர் ஒருவர் செல்ல முடியுமா? என்ற கேள்வியும் - தோட்ட தொழிலாளர் பிள்ளைகளின் நிலை என்னவாகும் என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளன. எனவே, இந்தத் திட்டத்தால் தமது பிள்ளைகள் பாதிக்கப்படப் போகின்றனர் எனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

வாடிக்கையாளர் வசதி கருதி
புதிய இடத்தில்,
புதும் பொலிவுடன்
இலங்கை வங்கி
கொடிகாமம்
விரிவாக்கற் காரியாலயம்
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்
என்ற முகவரியில் 2011 ஓகஸ்ட் மாதம் 01ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

ஒளிந்திருக்கும்
கரப்பான்
பூச்சிகளையும்
கொன்றுவிடும்.



கரண்டி,
முள்ளுக் கரண்டி
குறைந்த விலையில்
ரூபா-90/-இல் இருந்து
டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை, லிபட்டி பிளாசா
2439422

உங்கள் கனவு இல்லத்தை தரமாக அமைத்துக்கொள்ள நாடுங்கள்
உங்கள் வீடு கட்டும்
பொறுப்பை யாரிடம்
ஒப்படைப்பது
என்று யோசிக்கின்றீர்களா?
எங்களிடம் ஒப்படையுங்கள்.
சிறந்த முறையில்
நிறைவேற்றித் தருகிறோம்.



★ இலவச வீடமைப்பு ஆலோசனை ★ இலவச வீட்டுப்படம் (Plan) வரைதல்
★ வீடு கட்டியபின் வீட்டுத்தோட்டம் (Land Scaping) அமைத்தல் இலவசம்
★ நவீன தொழில்நுட்ப (Latest Technology) முறைகள் மூலம் குறைந்த செலவில் வீடுகள் அமைக்கமுடியும். இதனால் எல்லோரும் ஒரு வீட்டுக்கு உரிமையாளர் ஆகலாம்
★ 100% நம்பிக்கை நாணயம்
★ குறுகிய காலத்துக்குள் வீடு அமைக்கப்படும்
★ சாஸ்திர முறைப்படி வீடுகள் அமைக்கப்படும்
★ நவீன வீடுகள் (Modern House in Latest Fashion) அமைத்தல்
★ பழைய வீடுகள் முன்முகப்பு உட்பட புதியபாகன் (Latest Fashion) இற்கு மாற்றி அமைத்தல்
★ நிதி நிலைக்கேற்றவாறு சிறிய வீடுகள் அமைத்தல்
★ நிதிப்பற்றாக்குறை ஆயின் வங்கிக் கடன் உதவி ஒழுங்கு செய்துதரப்படும்.
★ இலங்கையின் எப்பகுதியிலும் (நிலம் வாங்குதல் உட்பட) வீடுகள் அமைக்கப்படும்
★ மாநகர சபைஅங்கீகாரம் விரைவாகப் பெற்றுத்தரப்படும்
Quality First
தரத்துக்கு முதலிடம்
குறிப்பு: பழைய வீடொன்றை வாங்குவதை விட உங்கள் விருப்பப்படி புதிய வீடொன்றை அமைத்து புதிய வீட்டுக்கு உரிமையாளராகுங்கள்.
தொடர்பு கொள்ளுங்கள், எம்மிடம் வாருங்கள், 0786155929- 021 3205939
ANANDA HOUSING CONSTRUCTIONS
email- ananda.housing@yahoo.com
Reg.No: TN/UC/0011
பருத்தித்துறை வீதி, மடத்தடிச் சந்தி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள்; உயர்மட்ட விசாரணை நடத்த வேண்டும்

## மார்க்சிஸ்ட் கம்யூ. செயலாளர் பிரகாஷ் வலியுறுத்து



சென்னை, ஒக.01

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதுமான உயர்மட்ட விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் பிரகாஷ் காரத் தெரிவித்தார்.

இலங்கைஇனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் சிறப்பு மாநாடு நடைபெற்றது.மாநாட்டைத் ஆரம்பித்துவைத்து காரத் பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்:

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்துவதன் மூலம் தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க முடியும்.

வடக்கு, கிழக்கில் இராணுவ நிர்வாகம் களையப்பட வேண்டும் எனவும், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி ஒட்டுமொத்த இலங்கையிலும் அதிகார ஆட்சி முறைமை நீடித்து வருகின்றது. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் தொடர்ச்சியாகத்தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் ஜன நாயக உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இடம்பெயர் மக்கள் மீள் குடியமர்வு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு அரசு அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (வ)

# 2 ஜி விவகாரத்தில் நாடாளுமன்றம் முன்கூட்டியே தீர்ப்பளிக்கக்கூடாது

## பிரதமர் கருத்து

டில்லி, ஒக1

2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் நீதிமன்றத்தில் விசாரணை முடியும் முன்னரே நாடாளுமன்றம் முன்கூட்டி தீர்ப்பளிக்கக் கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இந்த விவகாரம் நீதிமன்றத்தின் கவனத்தில் உள்ளது. எனவே நீதிமன்றத்திடம் இந்த விவகாரத்தை விட வேண்டும். நாடாளுமன்றமே முன்கூட்டி தீர்ப்பளிக்கக்கூடாது.

2ஜி விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் ராசா தெரிவித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங், உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோர் மீது நாடாளுமன் றத்தின் மழைக்கால கூட்டத்தொடரில் பா.ஜ.க. போர்க்கணைகளைத் தொடுக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க் கட்சிகளும் பிரதமர், உள்துறை அமைச்சரிடம் இருந்து விளக்கம் கோரியுள்ளது.வலுவான லோக்பால் மசோதா கோரி எதிர்வரும் 16 ஆம் திததி முதல் உண்ணா விரதம் இருக்கப்போவதாக அண்ணா ஹசாரே எச்சரிக்கை விடுத்துள்ளார். லோக்பால் மசோதாவின் நிலை குறித்தும் நாடாளு மன்றத்தில் முடிவெடுக்கப்பட உள்ளது.

லோக்பால் மசோதா குறித்து விவாதிக்கத் தயாராக உள்ளோம். லோக்பால் மசோதாவின் நிலைமை நாடாளு மன்றத்தில் தீர்மானிக்கப்படும்-என்றார் அவர். (வ)

# பிரதிபா பாட்டீலுடன் பிரதமர் சந்திப்பு

டில்லி, ஒக.1

நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாவதை முன்னிட்டு இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீலை பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளதாக ஜனாதிபதி மாளிகைச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

மழைக்காலக் கூட்டத்தொடர் குறித்தும், முக்கியமான தேசிய, சர்வதேச விவகாரங்கள் குறித்தும் பிரதிபாவிடம் மன்மோகன் விளக்கியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 30 நிமிடங்கள் இருவரும் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்ததாக ஜனாதிபதி மாளிகைச் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை பிரதிபா பாட்டீல் தென்கொரியா மற்றும் மங்கோலிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் சென்றுவிட்டு நேற்று முன்தினம் இரவுதான் டில்லியை வந்தடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஈழத் தமிழரை நோக்கும் பார்வை...



சென்னையிலுள்ள அ.தி.மு.க., தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் முதல்வர் ஜெயலலிதா உரையாற்றுகிறார். அருகில் முன்னாள் அமைச்சர் பொன்னையன் மற்றும் அமைச்சர் செங்கோட்டையன் அமர்ந்திருக்கின்றனர்.

# பேருந்து ஆற்றுக்குள் பாய்ந்து விபத்து; பத்து பேர் பலி!

காஷ்மீர், ஒக.1

காஷ்மீர் மலைப்பாதையில் சென்று கொண்டிருந்த பேருந்து திடீரென ஆற்றுக்குள் பாய்ந்து விபத்துக்கு உள்ளானதில் 10 பயணிகள் பலியானார்கள்.

காஷ்மீரில் அனந்தநாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலா விடுதிக்குச் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக் கொண்டு பேருந்து ஒன்று நேற்று முன்தினம் பயணித்துக் கொண்டிருந்தது. அதில் 52 பேர் பயணிகள் இருந்தனர்.

மலைப்பாதையில் சென்று கொண்டிருந்த பேருந்து திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத் தடுப்புச் சுவரை உடைத்துக் கொண்டு ஆற்றுக்குள் பேருந்து பாய்ந்தது.

இந்த விபத்தில் பேருந்தில் இருந்த 4 பயணிகள் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். காயமடைந்த 48 பேரும் உடனடியாக மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு 6 பேர் பலியானார்கள். பலியானவர்களில் ஒருவர் பெண், 2 பேர் குழந்தைகள். இந்த விபத்து பற்றிப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

# ஆந்திராவில் கைதான ஈழத்தமிழர்கள் 147 பேரும் வழக்குப் பதியாமல் சென்னைக்கு அனுப்பப்பட்டனர்

## ஆந்திர காவல்துறை நடவடிக்கை

ஆந்திரா, ஒக.1

ஆந்திர மாநிலத்தில் உள்ள துணி பிரதேச பொலிஸ் நிலையத்தில் கடந்த மூன்று நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 147 ஈழத்தமிழர்களும் வழக்குப் பதியப்படாமல் நேற்று முன்தினம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திர பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினரால் இவர்கள் தமிழ்நாடு பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டு சிர்கார் அதிவேக ரயில் மூலம் நேற்று முன்தினம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களின கடவுச்சீட்டுகள், அகதிமுகாம்களில் வழங்கப்பட்ட அடையாளச் சான்றுகள், சரிபார்க்கப்பட்ட பின்னர், சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் கிழக்கு கோதாவரி மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் திரிவிக்ரம் வர்மா தெரிவித்துள்ளார்.

சந்தேகத்துக்கிடமான முறையில் லோவாவில் உள்ள தலுபுல்லம்மன் ஆலயப் பகுதியில் தங்கியிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது தம்மை ஐந்து முகவர்கள் கனடாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக்கூறி அழைத்து வந்ததாகக் கூறியுள்ளனர். ஒவ்வொருவரிடம் இருந்தும் முகவர்கள் 5000 ருபா பணத்தைப் பெற்றுக் கொண்டதாகவும், லோவா ஆலயத்தில் இருந்து விசாகப் பட்டிணத்துக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கப்பல் மூலம் கனடாவுக்கு அனுப்பி வைப்பதாகவும் அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளனர் என்று கூறியதாக அவர் தெரிவித்தார். (வ)

# இந்திய பெண்களின் சராசரி வருமானம் அதிகரிப்பு

மும்பை, ஒக.1

இந்தியாவில் உள்ள நகர்ப்புற பெண்களின் வருமானம் கடந்த 10 ஆண்டுகளில் இரட்டிப்பாகியுள்ளதாக ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இதேவேளை 2001 ஆம் ஆண்டு நகர்ப்புறப் பெண்கள் சராசரியாக மாதத்துக்கு 4492 ரூபா வருமானம் ஈட்டியதாகவும், 2010 ஆம் ஆண்டு அந்த வருமானம் 9457 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. (வ)

# முன்னாள் துணை முதல்வர் ஸ்டாலின் கைதாகி உடன் விடுவிப்பு

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே முன்னாள் துணைமுதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு அன்று பிற்பகல் 2 மணிக்கு விடுவிக்கப்பட்டார். ஆனால் மாவட்ட தி.மு.க. செயலர் பூண்டி கலைவாணனை விடுவிக்க பொலிஸார் மறுத்து விட்டனர். அவர் மீது கொலை வழக்கு பதிவுசெய்யப் பட்டுள்ளதாகக் கூறினர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

ஸ்டாலின் திருத்துறைப் பூண்டி அருகே மொழிப்போர் தியாகி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கடந்த வெள்ளிக்கிழம இரவு தஞ்சாவூருக்குச் சென்றார். பின்னர் நேற்று முன்தினம் காலை திருவாரூருக்கு காரில் சென்று கொண்டிருந்தார்.

திருவாரூர் மாவட்ட எல்லையில், திருத்துறைப்பூண்டி அருகே கோவில் வன்னி என்னும் இடத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கத் திருவாரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் பூண்டி கலைவாணன் உள்ளிட்ட தி.மு.க.வினர் காத்திருந்தனர். அங்கே ஸ்டாலின் வந்ததும், பொலிஸார் அவரிடம் ஒரு விசாரணை உள்ளது என்று கூறினர். என்ன விசாரணை என்று கேட்டபோது, முந்தைய தினம் சமச்சீர் கல்வியை எதிர்த்து தி.மு.க.வினர் போராட்டம் நடத்தியபோது பாடசாலையில் இருந்து மாணவர்களை வலுக்கட்டாயமாக பஸ்ஸில் திருப்பி அனுப்பினர். அப்போது, கொரடச்சேரி அருகே பஸ் ஒன்று விபத்துக்கு உள்ளானதில், தி.மு.கவினரால் திருப்பி அனுப்பப்பட்ட விஜய் என்ற மாணவர் விபத்தில் பலியானார். இதற்கு பூண்டி கலை வா ணன் தான் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது. அது தொடர்பாக அவரை விசாரிக்கவும் பொலிஸார் அங்கே சென்றனர். அதற்கு ஸ்டாலின் எதிர்ப்புத் தெரிவித்தார். பூண்டி கலை வாணனை ஒப்படைக்க இயலாது என்று கூறி வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து சாலை மறியல் போராட்டமும் நடந்தது. இதனால் ஸ்டாலினையும் சேர்த்து தி.மு.கவினரை பொலிஸார் கைது செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிவாசிகள்- வனஜீவராசிகள் திணைக்களம் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்து

கொழும்பு, ஓக.1

ஆதி வாசிகளுக்கும் வன ஜீவராசிகள் திணைகக்களத்துக்கு இடையி லான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

காட்டுப் பிரதேசங்களில் தமது கலா சாரத்திற்கு அமைய வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்குமாறு ஆதிவாசிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திரவங்க பதிராஜ தெரிவித்துள்ளார்.

நீர்த்தேக்கங்களில் மீன்பிடிப்பதற்கும், காடுகளில் விறகு மற்றும் குடியிருப்பு நிர்மாணத்துக்கு தேவையான பொருள்களைப் பெற்றுக் கெள்வதற்கும் அனுமதி அளிக்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கோரிக்கைகளுக்கு அமையத் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் வனஜீவராசிகள் திணைக்களப்பணிப்பாளர் நாகமும் ஆதிவாசிகள் தலைவரும் நேற்று ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு வாகரையில் இடம்பெற்றதாக வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ற)

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2425 ஆம் இலக்க கடந்த வெள்ளிக்கிழமை சீட்டிழுப்பில் "T" என்ற ஆங்கில எழுத்தும் 3/9/4/4/7/5 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 3/9/4/4/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/4/4/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/4/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 148 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது. 4/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,463 பேருக்கு 4 ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14,544 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது. 5 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,44,138 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும். இடமிருந்து வலமான அமைப்பில் 3/9/4/4/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்தி ருக்கும் 14 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/9/4/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 146 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும். 3/9/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,460 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

3/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14,370 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும். "T" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 57,661 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)

# உயர்தரப் பரீட்சை நிலையங்களுக்கு தீவிர பாதுகாப்பு நடவடிக்கை

இந்தமுறை உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ள அனைத்து பரீட்சை மத்திய நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ரோந்து சேவையொன்றை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பரீட்சைத் தொடர்பாடல் மத்திய நிலையங்களில் நிரந்தரமான குழுவொன்றை பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களின் பாதுகாப்புக்காக முப்படைகள் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் இரண்டு இலட்சத்து 94 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாகவும் இந்தப் பரீட்சை இரண்டாயிரத்து 400 மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (ற)



அகில இலங்கை ரீதியில் இலங்கை இந்திய சங்கங்கள் நடத்திய இந்திராகாந்தி ஞாபகார்த்த கட்டுரைப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவி ஸ்ரீ.ஜீவா சொரூபிகாவுக்கு தங்கப் பதக்கம் வழங்குவதைக் காணலாம். (ற)

# வாகன ஒலி தொடர்பில் புதிய சட்டம்

வாகனங்களில் இருந்து வெளியேறும் ஒலி தொடர்பில் புதிய சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது. உத்தேச சட்டங்களை சட்டமா அதிபர் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்து பின்னர் சுற்றாடல் அமைச்சரிடம் ஒப்படைக்க எண்ணியுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சரித்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

சனநெரிசல் மிக்க பிரதேசங்களில் சில வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படும் ஒலிகள் காரணமாக பிரச்சினை ஏற்பட்டுள்ளதால் புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்படுவதாக

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக 1

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். (ற)

***

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற)

***

தென்மராட்சி, ஓக 1

நுணாவில் கிழக்கு கற்குழி கந்தசாமி ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ற-207)

***

தென்மராட்சி, ஓக 1

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-207)

இதயபூர்வமான வாழ்த்துக்கள்

யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

1816 - 2011

195 ஆவது அகவையில் இன்று காலடி வைக்கும் மத்தியத்தாயை மனதார வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

''மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்''

(6389)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2244 திகதி 30-07-2011
ஆங்கில எழுத்திற்கும் Y
வெற்றி எண்கள் 26 51 63 69
போனஸ் இல: 10
ஜக்பொட் பரிசு ரூ. 16,943,925/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 207640 | 20/- | 4,152,800/- |
| 2 இல | 14853 | 100/- | 1,485,300/- |
| 3 இல | 311 | 1,000/- | 311,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8369 | 40/- | 334,760/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 608 | 1,000/- | 608,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,943,925/- | - |
| 1 இல + போனஸ் இல | 9887 | 100/- | 988,700/- |
| 2 இல + போனஸ் இல | 467 | 500/- | 233,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 444 | 200/- | 88,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | 242616 | | 9,752,860/- |
| ரத்தரங்வரம மொத்த பரிசு | 329 | | 264,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 242945 | | 10,016,860/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2011 ஓகஸ்ட் 03 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 17,511,200/-

தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை
ரத்தரங் வரம
வெற்றி எண்கள் 07 16 68 70
ஆங்கில எழுத்திற்கும் O

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 328 | 500/- | 164,000/- |
| 4 இல | 01 | 100,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுண் தங்கக்காசு 37 | - |

இந்த புதன்கிழமை தங்கக் காசுப் பொதி 39 தங்க நாணயங்கள்


அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் தரும்
சோ- கூ-றே குபேர மணிமேக்கர்ஸ்

கடன் தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக் கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய்களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு - வாகனம், மனை, கடை மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.

(இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டது)
உங்கள் இருப்பிடங்களுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்:
0771399950

நன்றிகள் நவில்கின்றேன் பல
வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தேர்தல் - 2011



சிந்தனைச் சிற்பி சி.கதிரவேற்பிள்ளை நா.உ.வின் பாசறையில் நேரடியாக வளர்ந்தவன் நான். இந்தத் தெரிவு அன்னாருக்குச் சமர்ப்பணம்.

தமிழ் மக்கள் அபிவிருத்தி என்ற மாயமான் பின் செல்லார் என்று மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்திய நிலையில் உள்ளுணர்வுடன் உங்கள் வாக்குகளை எனக்கும் அளித்து வலிதந்தோருக்கு வாக்கினால் விரட்டி அடித்து வலி.கிழக்கு பிரதேச சபைக்கு எனது தெரிவுக்கு உழைத்த அன்புள்ளங்களுக்கு உங்கள் ஆசியுடன் கடமையைச் சரியாக மேற்கொள்வேன்.

நன்றியுடன் சேவையிலுள்ள
லயன்.ஞா.த.ஞானசேகரவேல். ஜே.பி.
ஞானபாஸ்கரோதய வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். அணு ஆயுத தயாரிப்புக்கு அமெ., பிரிட்டன் முட்டுக்கட்டை

## தற்போது தகவல் வெளியாகியது

வாஷிங்டன், ஒக. 01

''கடந்த 1970களில், பாகிஸ்தான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது, அதைத் தடுக்கும் முயற்சியில் அமெரிக்காவும், பிரிட்டனும் ஈடுபட்டன'' எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆவண காப்பகத்திலிருந்து, சில முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக, கடந்த 1970ஆம் ஆண்டுகளில், பாகிஸ்தான், அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது, அதைத் தடுப்பதற்கு, அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகள் குறித்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 1978 - 81 வரையிலான காலகட்டத்தில், அணு ஆயுதம் தயாரிப்பதற்கான முயற்சியில் பாகிஸ்தான் ஈடுபட்டிருந்தது.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள சாஸ்மா என்ற இடத்தில், அணு உலை அமைக்கும் நடவடிக்கைகளில், பாகிஸ்தான் ஈடுபட்டது. இதற்குத் தேவையான செறிவூட்டப்பட்ட யூரேனியம், தொழில்நுட்ப உதவிகள் ஆகிய வற்றை அணுசக்தி அளிக்கும் நாடுகளிடமிருந்து பெறுவதற்கு, பாகிஸ்தான் முயற்சித்தது.

இதுகுறித்து தகவலறிந்த அமெரிக்காவும், பிரிட்டனும், இந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டன. அணுசக்தி தொடர்பான வசதிகளை அளிக்கும் நாடுகளுக்கு அமெரிக்காவும், பிரிட்டனும், உத்தரவுகளைப் பிறப்பித்தன.

பாகிஸ்தானுக்கு அணுசக்தி தொடர்பான உதவிகளை அளிக்கக்கூடாது என்ற உத்தரவும், அதில் முக்கியமானது. இதையடுத்து, சாஸ்மாவில் அணு உலை அமைப்பதற்கான உதவிகளைச் செய்ய முன்வந்த பிரான்ஸ், தன் திட்டத்தைக் கைவிட்டது. இது, பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் இடையே கோபத்தை ஏற்படுத்தியது.

அதே நேரத்தில், பாகிஸ்தான் அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சியில் ஈடுபடுவது குறித்து, இந்திய உளவு அமைப்புகள் நன்கு தெரிந்து வைத்திருந்தன. தன்னை விட, இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்கு முன்பே, அணு ஆயுதம் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை, பாகிஸ்தான் பெற்றுவிடும் என்பதை, இந்திய உளவு அமைப்புகள் தெரிந்து வைத்திருந்தன.

ஆனாலும் அமெரிக்காவும், பிரிட்டனும், இந்தியாவை பொருட்படுத்தவில்லை என்பதும், அமெரிக்க ஆவணங்களின் மூலம் தற்போது தெரியவந்துள்ளது.

இந்த ஆவணங்களில், பாகிஸ்தான் அணு ஆயுத விஞ்ஞானி ஏ.கியூ.கான் பற்றிய எந்தத் தகவலும் இடம்பெறவில்லை.

# லிபியாவில் இராணுவத்துடன் மோதல்: புரட்சிக்காரர்கள் 190 பேர் பலி

லிபியாவின் மேற்குப் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு முதல் புரட்சிப் படைக்கும், கடாபி ஆதரவு இராணுவத்துக்குமிடையே யுத்தம் நடந்தது. இதில் கடாபி ஆதரவு இராணுவம் புரட்சிப்படையைச் சேர்ந்த 190 பேரைக் கொன்றுவிட்டது என லிபியா அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்குப் பின்னர் தலைநகர் திரிபோலியில் 10 இடங்களில் சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்தன. இதனால் நகரமே குலுங்கியது.

சனிக்கிழமை காலையில் கடாபி வசிக்கும் இடத்துக்கு அருகே 3 குண்டுகள் வெடித்தன. புரட்சிப்படையின் தளபதி அப்தெல் பதானஸ் கொலை செய்யப்பட்டதற்கு அல்-குவைதாதான் காரணம் என்று அரச அதிகாரி மூசா இப்ராகிம் தெரிவித்தார்.

அவரது மரணம் புரட்சிப்படைக்கும் கடாபியை பதவியிலிருந்து இறக்கவேண்டும் என்று ஆசைப்படும் ஐரோப்பிய சக்திகளுக்கும் ஏற்பட்ட பின்னடைவாகும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதற்கிடையில் யுனசை விசாரணைக்காக வரவழைத்த புரட்சிப் படைத் தலைவர்களில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். கொலையில் ஈடுபட்டவர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள்.

# உக்ரைன் வெடி விபத்துக்கள்; 21 பேர் உயிரிழப்பு!

உக்ரைனில் இரு வேறு நிலக்கரிச் சுரங்கங்களில் ஏற்பட்ட வெடி விபத்துகளில் 21 பேர் உயிரிழந்தனர். 16 பேரைக் காணவில்லை. உக்ரைனில் லூகன்ஸ்க் பகுதியில் சுகோ போல்ஸ் கயா வோஸ்டோசனாயா என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. இங்கு 28 பேர் வேலை பார்த்துக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. அதில் 16 பேர் அதே இடத்தில் உடல் கருகி இறந்தனர். 3 பேர் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அதேபோன்று மகியிவ்கா நகரில் பஷா ஹோவா என்ற இடத்தில் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 5 பேர் பலியாயினர். பலர் காயமடைந்தனர். பாதுகாப்புக் குறைபாடுகளே இந்த விபத்துகளுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

# ரஷ்யாவில் கால்நடைகளை தாக்கி இரத்தம் குடிக்கும் காட்டேரி மிருகம்

. வனப்பகுதியிலிருந்து வெளியே வரும் ஒரு விநோத மிருகம் ஊருக்குள் புகுந்து, கால்நடைகளைக் கொன்று இரத்தம் குடிக்கின்றது என பல நாடுகளிலிருந்து தகவல்கள் வெளியாகி வருகின்றன.

தற்போது ரஷ்யாவில் இது போன்ற கொடூர சம்பவம் நடக்கின்றது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ரஷ்யாவின் சைபீரியாவிலுள்ள நொவோசி பிர்ஸ்க் நகரை ஒட்டி வனப்பகுதி உள்ளது. அங்கிருந்து நாய் போன்று வெளியேவரும் ஒரு இரத்தக் காட்டேரி மிருகம் கிராமங்களுக்குள் வருகிறது.

பின்னர் ஆடு, மாடுகளின் கழுத்தில் கடித்து இரத்தத்தை மட்டும் குடிக்கிறது. ஆனால், அவற்றின் இறைச்சியை சாப்பிடுவதில்லை.

அந்த மிருகத்தை இரத்தம் குடிக்கும் நாய் என ரஷ்ய விவசாயிகள் வர்ணிக்கின்றனர். இதனால் அச்சத்தில் உறைந்துள்ள அவர்கள் மத குருமார்களை அழைத்து வந்து அவற்றிடமிருந்து தங்களது கால் நடைகளைக் காப்பாற்றும்படி ஆசி பெறுகின்றனர்.

# மர்ம நபர் துப்பாக்கிப் பிரயோகம்: பாகிஸ்தானில் 11 ஷியாக்கள் படுகொலை

இஸ்லாமாபாத், ஒக.01

பாகிஸ்தானில் அடையாளம் தெரியாத நபர் சுட்டதில் ஒரு பெண் உட்பட பதினொரு பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் தென்மேற்கு நகரான குவெட்டா நகரில் சனிக் கிழமை இந்தச் சம்பவம் நிகழ்ந் தது. இப்பகுதியில் நிகழ்ந்த இனப் படுகொலையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை பதினெட்டாக உயர்ந்தது.

ஹஸரா ஷியா பிரிவைச் சேர்ந்த சிலர் வேலைக்குச் செல் வதற்காக ஒரு வானில் ஏறிக் கொண்டிருந்தனர். இவர்கள் மீது அருகிலிருந்த பஸ் நிலையத்திலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் ஒரு பெண் உட்பட பதினொரு பேர் உயிரிழந்தனர், நான்கு பேர் காயமடைந்தனர்.

ஈரானிலுள்ள வழிபாட்டுத் தலத்திற்குச் சென்ற ஏழுஷியா பிரிவு முஸ்லிம்களை வெள்ளிக்கிழமை சிலர் சுட்டுக் கொன்றனர். லஷ்கர்-இ-ஜாங்வி என்ற தீவிரவாதக் குழு இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்றது.

சுனி பிரிவு முஸ்லிம் கல்வியாளர் மெல்வி கரீம் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக ஷியா பிரிவினர் மீது இத்தகைய தாக்குதல் நடத்தப்பட்டது என அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அலி ஷேர்ஹைதரி தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து ஷியா முஸ்லிம்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அரசுக்கெதிராகவும், இனப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தக் கோரியும் அவர்கள் போராட்டம் நடத்தினர்.

# மூவாயிரம் கிளர்ச்சியாளர்கள் சிரியாவில் காணவில்லை

பெய்ரூத், ஒக. 01

''சிரியா ஜனாதிபதி பஷீர் அசாத்துக்கு எதிராக, கடந்த நான்கு மாதங்களாக நடந்துவரும் போராட்டம் காரணமாக, இதுவரை கிளர்ச்சியில் ஈடு பட்டவர்களில், மூவாயிரம் பேர் காணாமற் போயுள்ளனர்'' எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சிரியா ஜனாதிபதி பஷீர் அசாத்துக்கு எதிராக, மக்கள் கடந்த நான்கு மாதங்களாக, கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கிளர்ச்சியாளர்களின் மீது, சிரிய இராணுவத்தினர் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

கிளர்ச்சி ஆரம்பமாகிய மார்ச் 15ஆம் திகதி முதல், ஆயுதம் இல்லாமல் கிளர்ச்சி செய்தவர்களில், 1,600 பேரை சிரியா இராணுவத்தினர் கொன்றுள்ளனர்.


இதுகுறித்து கிளர்ச்சியாளர்கள், தங்கள் இணையதளத்தில் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

ஜனாதிபதி பஷீர் அசாத் துக்கு எதிராகப் போராடிவரும் கிளர்ச்சியாளர்களை, இராணுவத்தினர் கடுமையான முறை யில், கையாண்டு வருகின்றனர். அமைதியாகப் போராடு வோரைக் கூட, வீண்பழி சுமத்தி மிருகத்தனமாக நடத்துகின்றனர்.

இவ்வாறு இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# யாழ்ப்பாணத்தில் இறந்த நிலையில் கரப்பான் பூச்சிகள்

## மக்கள் அதிர்ச்சி




யாழ்ப்பாணத்தின் சில முக்கிய பிரதேசங்களில் பெருந்தொகையான கரப்பான் பூச்சிகள் இறந்த நிலையல் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். மர்மமான முறையில் பெருந்தொகை கரப்பான் பூச்சிகள் இவ்வாறு இறந்த நிலையில் பல்வேறு இடங்களில் காணப்படுவது பற்றி இதுவரை எவ்வித தகவல்களும் அறியப்படவில்லை. இறந்து கிடக்கும் கரப்பான் பூச்சிகளைச் சுற்றி மஞ்சள் பட்டி கட்டியிருப்பதாகவும் அருகில் ''ஹிட்'' என்ற வாசகம் எழுதப்பட்டிருப்பதாகவும் இறுதியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் பிரதான இடங்களில் இவ்வாறு கரப்பான் பூச்சிகள் இறந்து கிடப்பதை வீதியில் செல்லும் மக்கள் அதிசயமான முறையில் அவதானித்து வருகின்றனர். இது சம்பந்தமான மேலதிக தகவல்கள் கிடைத்ததும் அடுத்து வரும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.



கரப்பான் பூச்சிகள் இறந்து கிடப்பதை மக்கள் அவதானிக்கின்றார்கள்.

இது ஒரு விளம்பர அனுபந்தம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட அணிகளின் கரபந்தாட்டம்; யாழ்.மாவட்ட அணி சம்பியன்

வலி.வடக்கு,ஓக.1

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் வவுனியா மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் இரு அணிகளும் இறுக்கமான நிலையில் மோதிக் கொண்ட போதிலும் நேரம் செல்லச் செல்ல யாழ். மாவட்ட அணியின் கைகளே மைதானத்தில் மேலோங்கிக் காணப்பட்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர்சுற்றுக்களை யாழ். மாவட்ட அணி பெற்று மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்.மாவட்ட அணி முதல் இரண்டு நேர் சுற்றுக்களை முறையே 25:12, 25:20 புள்ளிகள். என்ற அடிப்படையில் வவுனியாமாவட்டத்தைவெற்றிபெற்று தேசிய மட்டத்தில் இடம் பெறும் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றது.

(ம-23-86)

# நெஸ்லே நிறுவன வலைப்பந்தாட்டம்: வெற்றிபெற்ற பாடசாலை அணிகள்

வலி.வடக்கு,ஓக.1

நெஸ்லே நிறுவனத்தால் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 16 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் முதல் சுற்றில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு:-

வடமாராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 25:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்துக்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் 19:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் பண்டத்தரிப்புஜெசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யூனியன் கல்லூரி 19:02 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கும் உடுவில் மகளிர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 14:00 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்துக்கும் வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

மற்றுமோர் அரையி றுதி ஆட்டத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டதில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 28:16 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

(ம-86)

# மாகாண மட்டத்தில் பெருவிளையாட்டுப் போட்டி

வலி.வடக்கு,ஓக.1

கல்வி அமைச்சால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே மாகாண ரீதியாகப் பெருவிளையாட்டுப் போட்டிகள் இந்த மாத இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

15,16,17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 8,9,10 ஆம் திகதிகளில் பண்டாரவளை நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வடமாகாணத்தில் இருந்து கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு -**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு-**

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு-**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

(ம-86)

# மாகாண அணிகளிடையே கபடிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.1

விளையாட்டு அமைச்சால் மாகாண அணிகளுக்குஇடையேயான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டிகள் எதிர்வரும் 5,6 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெறவுள்ளன.

வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வவுனியா மாவட்ட கபடி அணி பங்கு கொள்ள உள்ளது என்று வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (ம-23)



*கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயத்தில் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தைப்பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் விளையாட்டுத்துறைப். பொறுப்பாசிரியர், பயிற்றுநர்களுடன்.* (ம-23)

# விளையாட்டு கழகங்களுக்கு புதிய இலக்கம்

தென்மராட்சி, ஓக.1

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களும் மீளமைக்கப்பட்டு புதிய இலக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

பிரதேசத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு மீளமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)



*முரளி வெற்றிக் கிண்ணத்துக்காக நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்ட சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்கள் பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளர்களுடன்.* (23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

✱மாலை 5 - பாசையூர் சென்.அன்ரனிஸ் ‘ஏ’ பிரிவு அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

✱ மாலை 3.45 மணி - பாசையூர் சென். அன்ரனிஸ் ‘பி’ பிரிவு அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# மாவட்டப் பாடசாலைகளில் மெய்வன்மைப் போட்டி வெற்றியாளர்கள்

வலி.வடக்கு,ஓக.1

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டிகளில் முதல் நான்கு இடங்களில் வெற்றிபெற்று தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**100 மீற்றர்**

ஜீ.ருமேஸ்சந்தியாகு-மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி, கே.யோகநாதன்-வேலணை மத்தியகல்லூரி, எ.நிலோசன்-யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, வி.பிருந்தாபன்- வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

**200 மீற்றர்**

ஜீ.ருமேஸ் சந்தியாகு- மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி, எ.நிலோசன்- யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, எஸ். சாருகன்-சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம், கே.யோகநாதன்-வேலணை மத்திய கல்லூரி.

**400 மீற்றர்**

ஜீ.ருமேஸ்சந்தியாகு- மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி, எ.நிலோசன்- யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, பி.தர்சிகன்- முல்லைத்தீவு வற்றாப்பளை மகாவித்தியாலயம், எ.அருள்ஜோதி-வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி,

**உயரம் பாய்தல்**

ஆர்.செந்தூரன்-யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, பி.ஜெஸ்வின்- மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி, ஜீ.றொகான்- சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, எஸ்.சீபன்-மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி.

**நீளம்பாய்தல்**

எஸ்.சாருகன்-சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம், ஆர்.எச்.றினோசன் லம்பேட்- மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை, எஸ்.தமிழரசன்- யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், ஆர்.விதுர்சன்- வடமராட்சி மணற்காடு கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.

**குண்டு போடுதல்**

ரி.பிரகலாதன்-சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, ஜே.அல்வின்- யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, எஸ்.கணேஸ்வரன்- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, எஸ்.கௌசிகன்-கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

**தட்டெறிதல்**

கே.நிரோஸ்கர்-தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, கே.அஜித்- மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலயம், ஆர்.எம். ருஸ்தி-மன்னார் றிசாட் பதியுதீன் மகாவித்தியாலயம், பி.கிருசாந்தன்- வவுனியா வடக்கு கோயில் புளியன்குளம் மகாவித்தியாலயம்.

**ஈட்டி எறிதல்**

ஆர்.ஜோன் பற்றிக்- பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தேலிக்க தமிழ் கல்வன்பாடசாலை, பி.கில்மன்ராஜ்- யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, ஆர்.பபிசன்- கிளிநொச்சி மகாவித்தியாலயம், எ.தனுசன்-மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி.

**100 மீற்றர் தடை தாண்டல்**

ஆர்.நிரோஜன்-சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, ரி.யதுர்சன்-சாவகச்சேரி இந்துக்கல்லூரி, எம்.எ.ஆர். சிகுலாமீரிஸ்- மன்னார் சென். ஆன்ஸ் மகாவித்தியாலயம், ஜே.நிரோசன்- வயாவிளான் மத்தியமகா வித்தியாலயம்.

**4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மன்னார் சென். சேவயர் ஆண்கள் கல்லூரி. (86) *(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிங்கவுக்கு இடம் இல்லை!

கொழும்பு, ஒக. 01

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 'இருபது-20' கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மலிங்க காயம் காரணமாக சேர்க்கப்படவில்லை.

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள ஆஸ்திரேலிய அணி, இரண்டு 'இருபது-20' போட்டிகள், 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது 'இருபது-20' போட்டி ஒகஸ்ட் 6ஆம் திகதி பல்லேகலவில் நடக்கவுள்ளது.

'இருபது-20' போட்டிகளுக்கான இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

அதில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மலிங்கவுக்கு இடம் கிடைக்கவில்லை.காயம் காரணமாக அவருக்கு அணியில் இடம் வழங்கப்படவில்லை.

இதேபோல் கண்டம்பியும் அணியிலிருந்து கழற்றி விடப்பட்டுள்ளார். இதனால், துணைத் தலைவர் பொறுப்பு மத்யூஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதுமுகமாக சகலதுறைவீரர் சமிந்த எராங்க வாய்ப்புப் பெற்றுள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 'இருபது-20' போட்டிகளுக்கான இலங்கை அணி வருமாறு:-

டில்ஷான் (அணித்தலைவர்), சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, சந்திமால், மத்யூஸ், ஜீவன் மெண்டிஸ், தில்ருவான் பெரேரா, திசரா பெரேரா, தம்மிக பிரசாத், சுரங்க லக்மல், அஜந்த மெண்டிஸ், குலசேகர, ரந்தீவ், ஹேரத், சாமர சில்வா, சமிந்த எராங்க.

## பாங்க் ஒப் வெஸ்ட் கிளாசிக் டென்னிஸ் அரையிறுதி



# செரீனா வெற்றி

பாங்க் ஒப் வெஸ்ட் கிளாசிக் டென்னிஸ் தொடரின் அரையிறுதியாட்டத்தில் அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் வெற்றிபெற்றார்.

கலிபோர்னியாவில் நடைபெற்றுவரும் பாங்க் ஒப் வெஸ்ட் கிளாசிக் டென்னிஸ் தொடரில், நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதியாட்டத்தில், முன்னாள் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ஜேர்மனியின் சபின் டிசிக்கியை எதிர்கொண்டார்.

ஆட்டத்தின் முதல் சுற்றை 6-1 என்ற செற் கணக்கில் அதிரடியாக ஆடிக் கைப்பற்றிய செரீனா, இரண்டாவது சுற்றிலும் தனது அதிரடி ஆட்டத்தைத் தொடர்ந்து 6-2 என்ற கணக்கில் அந்த சுற்றையும் தனதாக்கிக் கொண்டார்.

இதனடிப்படையில், 6-1, 6-2 என்ற செற் கணக்கில் அரையிறுதியில் வென்ற செரீனா இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

# இந்திய அணி முன்னிலை!

டிரென்ட்பிரிட்ஜ், ஒக. 01

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி, டிராவிட்டின் சதம் கை கொடுக்க 288 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி விளையாடிவருகிறது.

லோர்ட்ஸில் நடந்த முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டி கடந்த 29 ஆம் திகதி தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, இந்தியாவின் வேகப்பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 221 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி முதல் பந்திலேயே ஆரம்ப வீரரான அபினவ் முகுந்தை பறிகொடுத்தது.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 24 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

வி.வி.எஸ்.லக்ஷ்மன் 13 ஓட்டங்களுடனும், ராகுல் டிராவிட் 7 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இரண்டாவது நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது.

மூத்த வீரர்களான டிராவிட்டும், லக்ஷ்மனும் தொடர்ந்து விளையாடினார்கள். இங்கிலாந்தின் ஆக்ரோஷ தாக்குதலைச் சமாளிக்க இருவரும் நிதானத்தைக் கடைப்பிடித்தனர்.

குறிப்பாக டிராவிட் முழுக்க முழுக்க தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தினார். தனது 54ஆவது அரைச் சதத்தைக் கடந்த லக்ஷ்மன், அணி 93 ஓட்டங்களுடன் இருந்தபோது ஆட்டமிழந்தார்.

அவர் 54 ஓட்டங்களுடன் (112 பந்துகள், 10 பௌண்டரிகள்) பெவிலியன் திரும்பினார்.

பின்னர் சச்சின் டெண்டுல்கர் களம் புகுந்தார். இந்த முறையாவது தனது 100ஆவது சர்வதேச சதத்தைப் பூர்த்தி செய்வாரா என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு மீண்டும் ஏமாற்றமே மிஞ்சியது.

மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் ஆட்டமிழந்து சென்றார். அவர் 16 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

அடுத்து வந்த சுரேஷ் ரெய்னாவும் (12) நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் 'சுவர்' என்று வர்ணிக்கப்படும் டிராவிட், நங்கூரம்போல் நிலைத்து நின்று அரைச் சதம் கடந்தார்.

5ஆவது விக்கெட்டுக்காக இறங்கிய யுவராஜ்சிங், டிராவிட்டுடன் இணைந்து நிலைத்து நின்று ஆடினார்.

தேநீர் இடை வேளையின் போது இந்திய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 4 விக்கெட் டுகள் இழப்புக்கு 215 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. டிராவிட் 83 ஓட்டங்களுடனும், யுவராஜ்சிங் 43 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தேநீர் இடைவேளைக்குப் பின்னரும் டிராவிட், யுவராஜ்சிங் ஆகியோர் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

அடித்து ஆடிய யுவராஜ்சிங், அரைச் சதத்தை எட்டினார். இது அவரது 10ஆவது அரைச் சதம் ஆகும்.

மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய டிராவிட் சதம் அடித்தார். இது அவரது 34ஆவது சதம் ஆகும்.

அணி 267 ஓட்டங்களுடன் இருந்தபோது அடித்து ஆடிய யுவராஜ்சிங் (62) ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய அணித்தலைவர் டோனி (5), ஹர்பஜன் சிங் (0), பிரவீன்குமார் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்கள்.

இந்த மூவரையும் அடுத்தடுத்து வீழ்த்தி புரோட் 'ஹெட்ரிக்' சாதனையைப் படைத்தார்.

அவர்களைத் தொடர்ந்து டிராவிட் ஆட்டமிழந்தார். அடுத்துக் களம் கண்ட இஷாந்த் ஷர்மா 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 288 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

ஸ்ரீசாந்த் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

பின்னர் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 24 ஓட்டங்களைச் சேர்த்தது.

நேற்றுமுன்தினம் கள நிலவரப்படி இந்திய அணி, 43 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

## புரோட் 'ஹெட்ரிக்'



புரோட்டின் கைகளில் யுவராஜின் விக்கெட்....

டிரென்ட்பிரிட்ஜ், ஒக. 1

இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளரான ஸ்ருவர்ட் புரோட் நேற்றுமுன்தினம் தொடர்ந்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தி 'ஹெட்ரிக்' சாதனை படைத்தார்.

88ஆவது ஓவரில் 3ஆவது பந்தில் ஸ்ருவர்ட்டின் பந்து வீச்சில் அன்டர்சனிடம் பிடிகொடுத்து அணித்தலைவர் டோனி (5) ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஹர்பஜன்சிங் அடுத்த பந்திலேயே எல்.பி.டபிள்யூ. ஆனார்.

பின்னர் களம் கண்ட பிரவீன்குமார், அவர் சந்தித்த முதல் பந்திலேயே 'போல்ட்' ஆனார்.

இதன்மூலம் தொடர்ந்து 3 விக்கெட்டுகளைத் தொடர்ந்து வீழ்த்திய புரோட், டெஸ்ட் போட்டியில் 'ஹெட்ரிக்' சாதனை படைத்த 12ஆவது இங்கிலாந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

உலக அளவில் டெஸ்ட் போட்டியில் நடந்த 38ஆவது 'ஹெட்ரிக்' நிகழ்வு இதுவாகும். (12)

## 4ஆவது இடத்தை பகிர்ந்தார் டிராவிட்

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் நேற்றுமுன்தினம் இந்திய வீரர் ராகுல் டிராவிட் சதம் அடித்தார். 155ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் டிராவிட்டுக்கு இது 34ஆவது டெஸ்ட் சதமாகும்.

முதல் டெஸ்ட் போட்டியிலும் சதம் கண்டிருந்த டிராவிட், இங்கிலாந்து அணிக்கு எதிராக அடித்த 6ஆவது சதம் இதுவாகும்.


இந்தச் சதத்தின் மூலம் டிராவிட், டெஸ்ட் போட்டிகளில் அதிக சதங்களை அடித்தவர்கள் வரிசையில் 4ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்திய வீரர் டெண்டுல்கர் 51 சதங்களுடன் முதலிடத்திலும், கலிஸ் (தென்னாபிரிக்கா) 40 சதங்களுடன் 2ஆவது இடத்திலும், ரிக்கி பொண்டிங் (ஆஸ்திரேலியா) 39 சதங்களுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

கவாஸ்கர் (இந்தியா), லாரா (மேற்கிந்தியத் தீவுகள்) ஆகியோர் தலா 34 சதங்களுடன் 4ஆவது இடத்தில் இருந்தனர். அந்த இடத்தை டிராவிட் நேற்றுமுன்தினம் பகிர்ந்து கொண்டார்.



புரோட்டின் ஹெட்ரிக் மகிழ்ச்சியில் இங்கிலாந்து வீரர்கள்...





# நடுவருடன் வாக்குவாதம்; பிரவீனுக்கு அபராதம்

டிரென்ட்பிரிட்ஜ், ஒக. 01

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் தொடக்க நாளில் இந்திய வேகப்பந்து வீச்சாளரான பிரவீன்குமார், கெவின் பீற்றர்சனுக்குக் காலில் பட்ட பந்துக்கு எல்.பி.டபிள்யூ. கேட்டு முறையிட்டார்.

ஆனால், நடுவர் மரைஸ் எராஸ்மஸ் ஆட்டமிழப்புக் கொடுக்க மறுத்தார் இதனால் பிரவீன்குமார் மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளானார்.


பின்னர் மறுஒளிபரப்பின்போது திரையில் பார்த்தபோது, பந்து காலில் படுவது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து நடுவருடன், பிரவீன்குமார் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டார். தனது கோபத்தையும் வெளிப்படுத்தினார்.

பின்னர் ஹர்பஜன்சிங் தலையிட்டு பிரவீன்குமாரை சமாதானப்படுத்தினார்.

இந்நிலையில் களத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக பிரவீன்குமாருக்கு போட்டிக் கட்டணத்திலிருந்து 20 சதவீதத்தை அபராதமாக ஐ.சி.சியின் போட்டி நடுவர் ரஞ்சன் மடுகல்லே விதித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சினிக்க வாழ்த்துகின்றோம் கரைச்சி பிரதேச சபைத் தேர்தல் 23-07-2011



எமது நிலத்தில் எமது பலத்தில் எமது கால்களில் எழுந்து நிற்போம் எனத் தடைகள் கடந்து தன்மான உணர்வோடு தேசியப் பற்றுறுதியுடன் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து பதினைந்து (15) பேராளர்களை பெருவெற்றி பெறச் செய்த கரைச்சிப் பிரதேச மக்களின் தாழ் தொட்டு வணங்குகின்றோம்.

எனது பெருவெற்றிக்காகவும் எமது பதின்நான்கு (14) வேட்பாளர் வெற்றிக்காகவும் உழைத்த இனிய உறவுகளுக்கு எமது அன்பையும் வாழ்த்தையும் நன்றியையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

நா.வை. குகராசா J.P.
(மணி அண்ணா),
இலங்கை தமிழரசுக் கட்சி,
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு),
கிளிநொச்சி.

(சி-2329)



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை

அம்பிகை மெய்யடியார்களுக்கு நாகபூஷணி அம்மன் ஆலய ஆடிப்பூரத்தை முன்னிட்டு நாளை 02.08.2011 வருகின்ற அனைத்து மெய்யடியார்களுக்கும் வழமைபோல் அமுதசுரபி அன்னதான சபையினரால் அன்னதானத்துக்கான சகல ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்பதை மிகவும் மகிழ்ச்சியோடு தெரியப்படுத்துகின்றோம். அனைத்து மெய்யடியார்களும் தவறாது சமுகம் தந்து அம்பிகையின் அருளையும் பெற்றுக் கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அமுதசுரபி
அன்னதான சபை
நிர்வாகத்தினர்.

(6393)

# மரண அறிவித்தல்கள்

## முருகையா வரதராசா (பொம்மை)



தெல்லிப்பழை, விராங்கொடையை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா வரதராசா நேற்று (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா முருகையா மற்றும் தங்கம்மா தம்பதி யரின் அன்பு மகனும் ரோகினிதேவியின் அன்புக் கணவரும் டிலக்சனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தவராசா, யோகராணி (பிரான்ஸ்), யோகராசா (இருபாலை), புஸ்பராணி (சுதுமலை), காலஞ்சென்ற இராச குமார் மற்றும் இந்திரன் (இருபாலை), ஜெயராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கைலாசபதி',
'வள்ளுவடி லேன்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:-
ராணி (சகோதரி)
தங்கம்மா (தாய்)

(6388)

## இறப்பியேஸ் பிரான்சிஸ் சேவியர் (ஓய்வூதியர்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 15/26, மூளாய் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட இறப்பியேல் பிரான்ஸிஸ் சேவியர் நேற்று (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்கிறேற் சொர்ணத்தின் அன்புக் கணவரும், மரியகொரட்டி (ஜேர்மனி), அன்ரன் றொக் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாமிநாதன், கத்தறீன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/26, மூளாய் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
லூயிஸ் றபாயேல்
(மருமகன்).

## பிரேமா....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் பயன்படுத்துவேன் என்று கூறியதாக தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை இரவு ஜயசூரிய தமது மனைவியுடன் திருச்சிக்கு பயணமானார். பல மாதங் களுக்கு முன் திட்டமிட்ட பயணம் இது.

கட்சியையும் நாட்டையும் சம்பந்தப்படுத்தும் பல முக்கிய விடயங்களில் ஐ.தே. கட்சித் தலைவர் அசமந்தமாக செயல் பட்டிருந்தார் என்பதை புத்தியுள்ள எந்த மனிதரும் மறுத்து விடமாட்டார். எல்லாவற்றையும் இல்லாவிட்டாலும் பல விடயங்களை ஐ.தே.க. தலைவர் கட்சியின் ஏனைய சிரேஷ்ட தலைவர்களை கையாளும்படி விட்டிருந்துள்ளார். ஒரு சிலவற்றைத்தவிர பலவிடயங்களை எடுத்துக்காட்டலாம். நாடாளுமன்றத்தில் அறிக்கை விடுவது, ஊழல்கள் அதிகரிப்பது. லஞ்சம் மற்றும் அரச சொத்துக்கள் விற்பனை போன்ற விடயங்களில் அரசுடன் மோதுவது போன்றவற்றை நாடாளுமன்றத்தில் விவாதங்களில் அவரே பேச்சாளராக இருக்க முடியாது தான். கட்சியின் கருத்தை வெளியிட ஏனையவர்களுக்கும் சந் தர்ப்பம் தேவை.

ஆனால் சமீபத்திய உள்ளு ராட்சி தேர்தல் பிரசாரத்தை ஜயசூரியவிடம் ஒப்படைத்திருந்தமை மிகப்பொருத்தமான ஓர் உதாரணம் எனலாம். இதில் ஒரே ஒரு விதிவிலக்கு என்னவென்றால் அவருடைய வெளி நாட்டுப்பயணங்களாகும். அதை மட்டும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அவர் கையளிப்பதில்லை என்னதான் சூழ்நிலையாக இருந்தபோதிலும் என்று தெரிவித்தார். ஆத்திர மடைந்திருந்த விக்கிரமசிங்க எதிர்ப்பாளர் ஒருவர் சரியோ பிழையோ அவருக்கு எதிரானவர்கள் இப்போது அவர் அதிகமாக அரசுக்கு ஆதரவாக செயற்பட்டுவருகிறார் என்று குற்றஞ்சாட்டிவருகிறார்கள். செயல் கமிட்டியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் அவ்வாறு கூறத் தொடங்கியிருக்கிறார்கள். அரசுக்கு எதிரான கடுமையான சொற்கள் கொண்ட கட்சியின் அறிக்கைகளை மென்மையாக்கிவிடுகிறார் என்றும் ராஜபக்ஷ குடும்பத்தைப்பற்றிய கடுமையான குற்றச்சாட்டுக்களை தவிர்க்கும்படி கட்சி உறுப்பினர்களை தடுக்கிறார் என்றும் தெரிவிக்கிறார்கள். இருந்தாலும் அவரை ஆதரிப்பவர்கள் இவையெல்லாம் அவருக்கு பின்னாலேயே பேசப்படுகின்றன எவரும் அவருக்கு முன்னால் இந்தக் குற்றச்சாட்டுகளை தெரிவிப்பதில்லை என்று சொல்கிறார்கள்.

என்னதான் சொன்னாலும் ஒருகனவான் அரசியல்வாதி என்று கருதப்படுவரான ஜயசூரிய இப்போது சங்கடத்துக்குள்ளானவராகத் தென்படுகின்றார். விக்கிரமசிங்க லண்டனிலிருந்து விடுத்துள்ள அறிக்கையில், ஜயசூரியா தலைமைப் பதவிக்கு ஒரு வேட்பாளராக நிற்க விரும்புகிறார் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றாலும் அவரது விசுவாசம் தொடர்பாக சந்தேகம் கொஞ்சமாகிலும் இல்லாமல் போகாது. விக்கிரமசிங்காவின் தலைமைப் பதவிக்காக ஆசைப்பட்டது அவருக்கு இது முதல் தடவையன்று. 2001ஆம் ஆண்டும் இப்படி நடந்ததுண்டு. ஆனால் அப்போது திடீரென்று கட்சி மாறி ராஜபக்ஷ அரசில் அமைச்சரானார், பின்னர் அதே முகத்துடன் ஆனால் செய்த காரியத்துக்கான களங்கத்துடன் கட்சிக்கு திரும்பிவந்தார்.

பிரேமதாச பிரிவினரைப் பொறுத்தவரை புதிய தலைவர் பதவிக்கு போட்டியாக இவரை நிறுத்தலாமா நம்பலாமா என்று பிரச்சினை இருக்கிறது. தவறான செயல் ஒன்றுக்காக ஜயசூரிய அதிக விலைகொடுத்துவிட்டார். அவரது நம்பகத் தன்மை திருத்தமுடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டுவிட்டது. இவையெல்லாம் விக்கிரமசிங்கவுக்கு அனுகூலமாகவே உள்ளன. கட்சியில் அவரை எதிர்த்து நிற்பதற்கு உறுதியான தலைவர் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. (ப)

## மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்



இடம் : இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி
காலம்: 14.08.2011 பி.ப. 2 மணி (ஞாயிற்றுக்கிழமை)
பேராசிரியர் க. தேவராஜா அவர்கள் பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி சமுகம் தரவும்

உற்ற இடத்தெவர்க்கும்
உதவும் குணம் படைத்தெம்
கல்வி அறிவொழுக்கம்
கடமைகளில் ஓர் முதலாய்
நல்எண்ணம் சொல் - செயலாய் - எம்
நாடுயர வாழுகின்ற
பிள்ளையின் வளர்ச்சி கண்டெம்
பூமித்தாய் வாழ்த்துகின்றாள்.

ஞானசேகரம் இல்லம்,
இணுவில் தெற்கு,
இணுவில்.

வாழ்த்துவோர்:
ஞான. திருக்கேதீஸ்வரன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி பத்மநாதன்



கரவெட்டி வடக்கு, காளையன் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கோரதீவு வீதி, கோவிலாக்கண்டி, கைதடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி பத்மநாதன் கடந்த (27.07.2011) புதன் கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா பத்மநாதனின் (ஓய்வுபெற்ற அதிபர், J.P., சாயி கல்வி நிலைய இயக்குநர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - நம்மியா வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர் களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சந்திரவதனியின் பெறாமகளும், வள்ளிநாயகி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சிவ பாலன், சிவதாசன், சந்திரராணி மற்றும் சிவநாயகி (மக்கள் வங்கி - வெள்ளவத்தை) ஆகியோரின் அன்புச் சகோதரி யும், முருகானந்தன் (பிரான்ஸ்), சிவநாதன் (லண்டன்), கதிர்காமநாதன் (லண்டன்), கிருபானந்தன் (அமதிபுர தமிழ் வித்தியாலயம்), பத்மரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கெங்காதேவி (பிரான்ஸ்), ராஜி (லண்டன்), அஜி (லண்டன்) நளினி (பிரதேச வைத்தியசாலை - கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும் பிரான்ஸில் வசிக்கும் ஸ்டீபனி, கெவின், மற்றஸ் லண்டனில் வசிக்கும் கோபிசன், மதுசன், அபிரா, வைஷ்ணவி, கிரீஸ், மகிளினி, கீர்த்தனன் (சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவர்கள்), கிரிபரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்; சிவசுப்பிரமணியம், குணாளன், காலஞ்சென்ற ஜெயராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரான்ஸில் வசிக்கும் சிவராசா, சேத்திரபாலன், சேத்திரகுமார், சத்தியபாமா, சத்தியநாதன் ஆகியோரின் சிறிய தாயும், சிவஜா, நெறிஜா, அனுஜா, சிவஜன், சிவகஜன் ஆகியோரின் அன்பு மாமியும், தனுஜா, உதயணன், கார்த்திக், பிரசன்னா ஆகியோரின் பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (02.08.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாயி கல்வி நிலையம்,
கோரதீவு வீதி,
கோவிலாக்கண்டி.
0214901922.

(6401)

தகவல்:
குடும்பத்தினர்.

## அம்பலம் செல்லையா



காரைநகரைப் பிறப்பிடமாகவும், நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் செல்லையா கடந்த 30.07.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் - சின்னப்பிள்ளை தம்பதி யரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம் தம்பதியரின் மருமகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அழகம்மா, அருளையாவின் சகோதரரும், மஞ்சுளாதேவி, சுகுணா, நாகரூபன் , நந்தினி, மாலினி (இந்தியா) மற்றும் காலஞ்சென்ற கிருஸ்ணரூபன் (சுவிஸ்), ஆகியோரின் தந்தையும் அம்பிகைபாலன், சிவபாலன், ஜெயா (சுவிஸ்), மற்றும் காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் லோகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும் சந்திரவதனி, ரஞ்சித், விஜி, தேனு, மது, கஜேந்திரன், கபில்ராஜ், டயானா, நிரூபன், ஜாருஷா, பிரவீனா, ஜனார்த்தனன், மேருஜா, பிரசாந், நிரூஜா, சங்கீதா, துவாரகா, திரிசிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலைப்பள்ளி மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை-2011**

*பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தேர்தல் 23.07.2011இல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி[ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி] சார்பில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்ட என்னை வெற்றி பெறச் செய்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்தமைக்கு பச்சிலைப்பள்ளி மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**வ.தியாகராசா**


# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து விஜயரங்கன்



நீர்வேலி மேற்கு, மாசிவனை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து விஜயரங்கன் நேற்று (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் ஆருயிர் கணவரும், வினோபா, கோபிராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து மற்றும் நாகரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவரான சோமசுந்தரம் மற்றும் வள்ளிநாயகி தம்பதியரின் மருமகனும், சேதுராஜா(பாரின்), பலராமன் (லண்டன்), நாகேஸ்வரி, விஷ்ணு(டென்மார்க்), காலஞ்சென்றவரான வாசுதேவன் மற்றும் விஜயகுமார் ஆகியோரின் அன்பு சகோதரரும், மங்களேஸ்வரி, விக்னேஸ்வரி, நித்தியானந்தன், காலஞ்சென்றவர்களான சதானந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாசிவன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாசிவன்,*
*நீர்வேலி மேற்கு, நீர்வேலி.*

**தகவல்: நாகேஸ்வரி (மனைவி), பிள்ளைகள்.**

## கந்தையா கனகசபாபதி



பள்ளந்தோட்டம், துன்னாலை மேற்கு, கரவெட்டியை வசிப்பிட மாகக் கொண்ட இளைப்பாறிய தபால் அதிபர் கந்தையா கனகசபாபதி (30.07.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் செல்வநாயகியின்(நேசம்) அன்புக் கணவரும், உதயணன் (கனடா), தேவகி(கனடா), குமணன்(கனடா), யாழினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசொரூபி, இராசநாதன், கௌரி, குகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மிஷா, தர்மிதன், ரேணுகா, ஆர்த்திகா, அபிநாஷ், அபிசயா, மநீஷா, மதீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரூண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

கரவெட்டி,
துன்னாலை,

**தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.**

## செல்லன் செல்வராசா (செல்வம்)



சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் செல்வராசா (செல்வம்) நேற்று (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன் - பசுபதி தம்பதியரின் அன்பு மகனும் அன்னலிங்கம் - காலஞ்சென்ற செல்லக்கிளி தம்பதியரின் அன்பு மருமகனும் ரஞ்சினியின் அன்புக் கணவரும் சாந்தன், இந்துஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சற்குணராஜா, ஞானமலர், குகன் மற்றும் யோகமலர், இராஜேஸ்வரி, சிவனேஸ்வரி, குகதாஸன் (பிரான்ஸ்), ராதாராணி, நற்குணராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுஜீவன் (ஊழியர், இலங்கை மின்சார சபை), நிரஜா ஆகியோரின் பாசமிகு மாமனும் கபிநஜனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2011) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.* (6404)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

# அரசு போரின் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுகின்ற இந்தச் சிறப்பு மாநாட் டில் இயற்றப்பட்ட தீர்மானங்களுக்காக இலங்கைத் தமிழ் மக்கள் சார்பாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகவும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முன்னைப்பொழுதையும்விட இப்பொழுது நாங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளோம். இராணுவத்தினர் மிகவும் வீரத்துடன் போராடி வடக்கு, கிழக்குப் பிரதேசத்தை வெற்றிகொண்டுள்ளனர் என்பதால் தமது சொற்படியே தமிழ் மக்கள் நடந்து கொள்ளவேண்டும் என்று இலங்கை அரசு சொல்கின்றது.

பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காகவே இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டோம். எமது மனிதாபிமான நடவடிக்கையில் ஒரு பொதுமகனும் மரணிக்கவில்லை என்று அரசு சொல்கிறது.

போர்நடைபெற்றுக்கொண்டிருக்கையில், வன்னியில் சுமார் 4.25 இலட்சம் மக்கள் இருந்தனர், அவர்களுக்குத் தேவையான உணவு, மருந்து வகைகளை அனுப்பிவையுங்கள் என்று நாங்கள் கோரினோம்.

ஆனால் அரசு அதனைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. மாறாக அங்கு 75ஆயிரம் மக்களே உள்ளனர் என்று சொன்னதுடன் வெறும் 45ஆயிரம் பேர்களுக்கு மாத்திரமே உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பிவைத்தது. ஆனால் போர் முடிவுற்று வவுனியாவில் உள்ள முகாம்களுக்கு சுமார் மூன்று இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து வந்திருந்தனர். இதனைக் கொண்டு எஞ்சியவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை நீங்களே ஊகித்தறிந்துக்கொள்ளலாம்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலை நாங்கள் ஒரு சின்ன விடயமாகவே நோக்கினோம். ஆனால் அரசு இத்தேர்தலில் தனது முழு வளங்களையும் பயன்படுத்தியது. ஜனாதிபதி மூன்று நாள்கள் வடபகுதியில் பிரசாரம் மேற்கொண்டிருந்தார். சுமார் 15இற்கும் அதிகமான அமைச்சர்கள் வடபகுதியில் முகாமிட்டிருந்தனர்.

அரசு, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு தமிழ் மக்கள் எங்களுடன்தான் இருக்கின்றனர், சர்வதேசம் சொல்வதுபோல் இங்கு எவ்விதப் போர்க்குற்றங்களோ, மனிதஉரிமை மீறல்களோ இடம்பெறவில்லை என்று காட்டுவதற்கு முயற்சிக்கும் நோக்கில் எங்களது கைகளைக் கொண்டே எங்களது கண்களைக் குத்துவதற்கு முற்பட்டது.

எமது மக்கள் தங்களின் சோகம், கோபம் என்பனவற்றைக் கொட்டும் இடமாகவும் தாங்கள் இன்னமும் சுயமரியாதையை இழக்கவில்லை என்பதை உலகுக்குப் பறைசாற்றும் விதமாகவும் இத்தேர்தலைப் பயன்படுத்திக்கொண்டனர். அதன் விளைவாகவே அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வடக்கு, கிழக்கில் இருபது சபைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஒப்படைத்தனர்.

எமது மக்கள் ஒரு நிரந்தர அரசியல் தீர்வையே விரும்புகின்றனர் என்பது இத்தேர்தலின் மூலம் சர்வதேச சமூகத்துக்கு நன்கு விளக்கப்பட்டுள்ளது.

ஒன்பது சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றுள்ளன என்று பெயரே தவிர, அதில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக நான்கு மணிநேரமாவது விவாதம் நடைபெற்றிருக்குமா என்பதுகூட சந்தேகமாக உள்ளது.

இலங்கை அரசு யுத்தத்தை வெற்றிகொண்ட மமதையில் இருக்கிறதே தவிர, தமிழ் மக்களின் மனங்களை வென்று அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு அது தயாரில்லை.

யுத்த வெற்றியைக் கொண்டாடுகின்ற இலங்கை அரசை தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் காணுமாறு சர்வதேசமும் குறிப்பாக இந்தியாவும் வலியுறுத்த வேண்டும். அதற்கு இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒரே குரலில் எமக்கு ஆதரவளிக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களே என்றும் இந்தியாவின் உற்ற நண்பர்கள் என்பதை இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். யுத்தத்தை நடத்துவதற்கு இந்தியாதான் பூரண ஒத்துழைப்பை வழங்கியது என்று இலங்கை அரசு கூறுகிறது. எமது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கும் இந்தியா உதவவேண்டும். அதனை விரைவுபடுத்த உங்களது ஆதரவுக் குரல் ஒலிக்க வேண்டும்.

இது வெறுமனே தமிழர்களின் பிரச்சினை என்று பாராமல் இது ஒரு தேசிய இனத்தின் பிரச்சினை. இந்த இடத்தில் எவராக இருந்தாலும் நாங்கள் இப்படித்தான் செயற்படுவோம் என்பதைக் காட்டுமுகமாக அகில இந்திய ரீதியிலும், சர்வதேச மட்டத்திலும் எமது விடிவுக்காக நீங்கள் அனைவரும் பொறுப்புடன் கடமையாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - இப்படி அவர் கூறினார். (உ-சி)


## இலத்திரனியல் பணியாளர்களுக்கான வெற்றிடங்கள்

**ELECTRONIC & HARDWARE TECHNICIANS**

*பிரபல கம்பனி ஒன்றில் அலுவலக முகாமைத்துவ பணிகளுக்கான பின்வரும் இலத்திரனியல் துறை சார் பணியாளர்களுக்கான வெற்றிடங்களுக்கு தகுதியும் அனுபவமுமுடையவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.*

1) CCTV Camera
2) Finger Print Machine
3) PABX- Intercom System
4) Computer Hardware Trouble Shooting and Networking.

**தராதரப் பத்திரங்கள், அனுபவச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.**

*IT ISLAND GATEWAY CENTRE*

**347, Kasthuriyar Road, Jaffna.**


# மரண அறிவித்தல்

## சின்னையா செல்லையா



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சின்னையா செல்லையா (செல்லர் ) நேற்று (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா- ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பூபதியின் அன்புக் கணவரும், இராசேந்திரன்(சந்தா-கனடா), சூரியகலா (வவுனியா), சித்திரகலா, காலஞ்சென்ற குகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமதி(கனடா), சிவகுமாரன்(இளைப்பாறிய நில அளவையாளர், வவுனியா), உலகசேகரம் (விலை மதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சிவக்கொழுந்து, சுப்பிரமணியம், காசிப்பிள்ளை, செல்லமுத்து, தம்பித்துரை மற்றும் கனகம்மா ஆகியோரின் சகோதரரும், சிந்துஜன்(கனடா), தனுசன்(கனடா), நிருசன் (கனடா), யோகி(ஹட்டன் நஷனல் வங்கி, வவுனியா), துசிதரா(NITA மாணவி, வவுனியா), கயிலன்(வணிக முகாமைத்துவ பீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்), சுமன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2011) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பசிட்டி வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (9/1116)

**தகவல்:**
**த.உலகசேகரம்(மருமகன்).**


## LOGIC - 2011

கந்தரங்க

பரீட்சை வழிகாட்டல் முறைகள்

02.08.2011
8.30 Am

★ கையேடுகள் வழங்கப்படும்.

By.P. காலி & SRJ சுதன்

DCM - வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு உண்டு

186 கஸ்தூரியார் வீதி மேல்மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 021 222 8634, 0773720866

## தவறிவிட்டது

270, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் இராமச்சந்திரன் பாலசிருஸ்ணன் என்னும் பெயர் முகவரியுடைய தே.அ. அட்டை இல. [741233690V] மற்றும் சிறு தொகைப் பணத்துடனும் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.

தொடர்புகளுக்கு: ஜெகன் களஞ்சியம், 477, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0779425053.

## வேலையாள் தேவை

நகரின் மத்தியில் இயங்கும் மிகப் பிரபலமான RB Bus Booking Centre ரில் பணியாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. யாழ். நகர் எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு:**
S. Dishanthan - 0779688006.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

கொழும்பில் கணக்கு வேலை செய்வதற்கு பெண்பிள்ளை தேவை.
தொடர்பு: 0771807672

பௌதிகவியல் - (2011 A/L )
செய்முறை - வகுப்பு
02.08.2011 செவ் 9 - 1 am, 3-5 pm
N.E.W. ஆனைப்பந்தி.

**சிறுநீரகம் தேவை**

B + இரத்தவகையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து 59 வயதான சீறுநீரக நோயாளி ஒருவருக்கு சிறுநீரகம் தேவை.
சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0213214291, 0212255321

**New Medi Care Clinic**

இதன் புதிய கிளை வரணியில், வரணி மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக இன்று (01.08.2011) திறந்து வைக்கப் படுகிறது.

இது சாவகச்சேரி New Medi Care Hospital இன் கிளை நிலையமாகும்.

★ வைத்தியர்களின் சேவை நாளாந்தம் மாலை 4 மணி முதல் 7 மணிவரை நடைபெறும்.

★ சகல இரத்த, சல பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

★ E C G, X- RAY, SCAN வசதிகள் செய்துதரப்படும்.

★ சகல விதமான பற்சிகிச்சைகளும், பல் பிடுங்குதல், கட்டுதல், அடைத்தல், கிளிப்போடுதல்.

★ வாகன அனுமதிப்பத்திர மருத்துவ சான்றிதழ் வழங்கப்படும்.

★ உள்ளக மருந்தக வசதி.

நிர்வாகி.

## பொருளாதாரத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளான இந்திய மார்க்ஸிட் கட்சி ஈழத் தமிழர் விவகாரத்தை இந்திய மாநிலங்கள் எங்கும் எடுத்துச் சென்று பிரசாரப்படுத்தும் செயல் திட்டத்தை ஏற்கனவே தொடங்கி நடத்தி வருகிறது.

மற்றொரு முக்கிய கட்சியான மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி கடந்த சனிக்கிழமை சென்னையில் பெரியார் திடலில் இலங்கைத் தமிழர் ஆதரவுக் கூட்டம் ஒன்றை நடத்தியது. அதில் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ்காரத் கலந்துகொண்டு பேசுகையில், ''நடந்த அத்துமீறல்கள் குறித்து இலங்கை அரசு விசாரிக்க வேண்டும். யாரால் எப்படி நிகழ்ந்தது என்பதையும் கண்டறிய வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

''இந்த மாநாட்டின் முக்கிய குறிக்கோள், இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை மற்றும் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதுதான். இறுதிக்கட்ட போரில் அப்பாவித் தமிழர்களும், சரணடைந்தவர்களும் கொல்லப்பட்டனர். வன்முறை, அத்துமீறல் நடந்ததோடு, அந்தப் போரில் மனித உரிமைகளும் மீறப்பட்டுள்ளதாக ஐ.நா அமைத்த நிபுணர் குழு தெளிவாகக் கூறியுள்ளது.

இலங்கை வரலாற்றில் தமிழர்களுக்கு சம உரிமை மறுக்கப் பட்டதுடன், மொழி அந்தஸ்தும் மறுக்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு சம உரிமையும், வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து மாநில சுயாட்சியும் வழங்கப்பட்டால்தான் இலங்கையை ஒன்றிணைக்க முடியும்'' - என்றார் அவர்.

இந்த நிலையில் இந்திய நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. அதில் ஈழத் தமிழர் விவகாரத்தை எழுப்புவதற்கு இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் தீர்மானித்துள்ளன. (உ)

## குகநாதன் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச ஊடகவியலாளர் ஒன்றியம் (ஐஊஒ), எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, ஜெனிவாவில் இயங்கும் இலங்கையின் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பு உட்பட பல ஊடக அமைப்புகள் இந்தத்தாக்கு தலைக் கண்டித்துள்ளன. (உ)

## நல்லிணக்கக்குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கடிதத்துக்கு இலங்கை அரசு இன்னும் பதிலளிக்கவில்லை என்றும் அநேகமாக இந்தக் கோரிக்கை அரசால் நிராகரிக்கப்படலாம் என்றும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கோரிக்கைக்கு உடன்பட்டால் இதைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை மீது அமெரிக்கா வேறு வழி களில் அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடும் என்றும் மனித உரிமைகள் சபை யின் கண்காணிப்புக்கு இலங்கை உட்பட வேண்டிவரும் என்றும் இலங்கை அரசு அஞ்சுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை இந்த வருடம் நவம்பர் மாதம் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

## சமல் தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை-இந்திய நாடாளுமன் றங்களுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தும் நோக்கில் இந்த விஜயம் மேற்கொள்ளப் படுகின்றது என சபாநாயகரின் அலுவலகம் தெரிவிக் கின்றது.

இந்திய எம்.பிக்கள், ஜனாதிபதி, உப ஜனாதிபதி, நாடாளு மன்றங்களுக்கிடையிலான நட்புறவுச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை இலங்கைக் குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

இந்தக் குழுவில் அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, ஜோன் செனிவிரத்ன, ரிஷாத் பதியுதீன், பிரதியமைச் சர் முத்து சிவலிங்கம் மற்றும் எம்.பிக்களான ரஜீவ விஜேசிங்க, செல்வம் அடைக்கலநாதன், டி.எம்.சுவாமிநாதன், மாலினி பொன்சேகா ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். (சி)

**நன்றியும் பாராட்டும்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தேர்தலில்
தமிழர்களின் அடையாளம் தமிழரசுக் கட்சிக்கும்
அதிகூடிய விருப்பு வாக்குகளை திரு.தி.பிரகாஷ்
அவர்களுக்கும் வழங்கியமைக்கு எமது
மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன்
பிரகாஷ் அவர்கள் மேலும் பல சிறப்புகளைப்
பெறவும் வாழ்த்துகின்றோம்.

குப்பிளான் நண்பர்கள்

**புதிய இடத்தில்! புதிய பொலிவுடன்!**

அதிரடி விலைக்கழிவில்...

| SDSCOM - I | SDSCOM - II |
| --- | --- |
| Processor Intel Dual Core 3.2 | Processor Intel i3 3.06 |
| Mother Board - Biostar G41 | Mother Board-Biostar i7 Supt. |
| 2GB DDR-3 Memory - Kingston | 2GB DDR-3 Memory - Kingston |
| HDD 500GB Samsung | HDD 500GB Samsung |
| Casing Tower 250W ATX | Casing Tower 250W ATX |
| DVD Writer | DVD Writer |
| Monitor LCD 16" Viewsonic | Monitor LCD 16" Viewsonic |
| USB Optical Mouse with pad | USB Optical Mouse with pad |
| M/M HI-FI Stero Speaker | M/M HI-FI Stero Speaker |
| Web Camera/ Headphone with mic | USB Keyboard 104 Keys |
| PS/2 Keyboard 107 Keys | Web Camera/Headphone with mic |
| | UPS 650VA |
| Price :- Rs. 35,400/= | Price :- Rs.48,900/= |
| Original Free : Antivires Kasperksy 2011 | Original Free : Antivires Kasperksy 2011 |

Note ★ 3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்!
★ கையிருப்பில் உள்ளவரை மட்டுமே....

Our Services

Sales, Repair & maintenance, Software Developments and all type of printing etc.

Authorized Dealer for..

Hp, Dell Items
Biostar Mother Boards
T P Link Products
Viewsonis Products
Havit Products
East UPS

வரவேற்கின்றோம்!
மொத்த / சில்லறை விற்பனையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

| | | |
| --- | --- | --- |
| Mother Boards D/C, i3 ,i5, i7 | UPS - 650VA - 3KVA | Pos Printer & Barcode Reader |
| Processors D/C ,i3, i5, i7 | Dongle , Pen Drive | Cash Drawer & Customer display |
| Memory DDR 1,2,3 - kingston | Computer Table & Chair | Fax machines & Scale machines, |
| Hard disk Drive and DVD writer | Routers 1port ,4port and wireless | Cash Register Machines |
| Monitors LCD/LED 16" - 21" | Toners & Cartridges | Laptop - HP / Dell / Susuki |
| Tower casing 250W - 550W | Scanners ,Printer - Laser / Inkjet | Branded Desktop Com - HP / Dell |
| Mouse USB / PS/2 /wireless | All net work Comp Accessories | And many many more.... |
| Keyboard Normal / Multi media | And all Computer Accessories.. | |

தற்போது:
SDS Computer Services
No. 42/1, College Road, Jaffna.
T/P:- 0215100105 Fax :- 0212224500

எங்களின் நோக்கம் - உங்களின் தொழில்நுட்ப முன்னேற்றம்

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் இராசம்மா



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, விதானையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராசம்மா நேற்றுமுன்தினம் (30.07.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விதானையார் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

*தகவல்:*
**மகேந்திரன்**- *மகன்*
*(செல்வராசா)*

### கந்தையா அன்னலிங்கம்



தாமரை வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா அன்னலிங்கம் நேற்று (31.07.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துமாரி தம்பதியரின் அன்பு மகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், குருநாதன், கிருஷ்ணகுமாரி, வசந்தி, சாந்தி, ஜெயந்தி, சுகந்தி, அருள்நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரட்ணகுமார், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் சிறிதரன், சுந்தரம், தேவநேசன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், ரஜீந்திரன், நவநீதன், தர்சினி, பபிதா, தாயாணி, சோனியா, அனுசா, சஜீந்திரன், லோஜினி, சன்சிகா, சயந்தன், குலராஜ், கிரிகரன், சஜீவனா, சஜீவன், சதுஷன், சதுர்ஷிகா, கவிஷன், சிந்துஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2011) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**44/4, தாமரை வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
குடும்பத்தினர்.

Quick Learning Course

**Spoken English with Grammar**

Duration 1 Month
Rs. 3000.00

உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

15 -08- 2011
Batch I :09.00 AM - 12.00 PM
Batch II :02.00 PM - 05.00 PM

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநியோகத்தர்கள் தேவை

பதப்படுத்தப்பட்டு பொதி செய்யப்பட்ட ஏற்றுமதி செய்யப்படும் உணவுப் பொருள்களை உள்நாட்டில் சந்தைப்படுத்துவதற்கு விநியோகத்தர்கள் (Local Distributors) உடனடியாகத் தேவை சிறந்த கொமிஷன் தரப்படும்.

தொடர்பு:- 077 1673393, 071 3267826



## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 144
திகதி - 30.07.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Y | அதிர்ஷ்ட இலக்கம்: 03 | வெற்றி இலக்கம்: 2 4 2 9 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 03 | 2 | 4 | 2 | 9 | 3 | ரூ. | 23,102,666.00 | - |
| 1 பரிசு | | 03 | 2 | 4 | 2 | 9 | 3 | ரூ. | 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 2 | 4 | 2 | 9 | 3 | ரூ. | 100,000.00 | 05 |
| 3 பரிசு | | | | 4 | 2 | 9 | 3 | ரூ. | 10,000.00 | 40 |
| 4 பரிசு | | | | | 2 | 9 | 3 | ரூ. | 1,000.00 | 376 |
| 5 பரிசு | | | | | | 9 | 3 | ரூ. | 50.00 | 3737 |
| 6 பரிசு | | | | | | | 3 | ரூ. | 20.00 | 35888 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 2 | 4 | 2 | 9 | | ரூ. | 1,000.00 | 38 |
| 8 பரிசு | | | 2 | 4 | 2 | | | ரூ. | 100.00 | 373 |
| 9 பரிசு | | | 2 | 4 | | | | ரூ. | 50.00 | 3759 |
| 10 பரிசு | Y | | | | | | | ரூ. | 20.00 | 14950 |
| 11 பரிசு | Y | 03 | | | | | | ரூ. | 100.00 | 1612 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,904,060.00

தேசிய லொத்தர் சபை
224/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.23,627,127.00


## உயரம் பாய்தல் உபகரணம் வழங்கல்

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் பாடசாலைகளின் விளையாட்டுத் தரத்தை மேம்படுத்தும் அடையச் செய்யும் முகமாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு உயரம் பாய்தலுக்கு வேண்டிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டுள்ள போதிலும் உயரம் பாய்தலுக்கான உபகரணங்கள் அற்ற நிலைமையில் இவர்கள் கோட்ட வலயப் போட்டிகளில் பங்குபற்றி வந்துள்ளனர்.

தற்போது கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு உயரம் பாய்தலுக்கான மெத்தை உட்பட ஏனைய உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. (ம-86)





## சேவை நலன் பாராட்டு



செல்வி நேரா யோன்பிள்ளை
(S.L.T.S.-I)
(உப அதிபர் - தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்)

கல்வி கற்ற பாடசாலை :
யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

ஆசிரிய சேவை விவரம்

1. மு/வவுனிக்குளம் மத்திய துரிசு அ.த.க.பாடசாலை 1983.05.02 - 1985.02.25
2. மு/முள்ளிவாய்க்கால் மேற்கு க.உ.வித்தியாலயம் 1985.02.26 - 1991.08.31
3. யா/மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம் 1991.09.01. - 1993.05.30
4. யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம் 1993.05.31 - 2011.08.01

தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியராகவும் உப அதிபராகவும் பதினெட்டு வருடங்கள் சிறப்புறப் பணியாற்றி இன்று (01.08.2011) திங்கட்கிழமை ஓய்வுபெறும் செல்வி நேராயோன்பிள்ளை அவர்களின் சேவையை நன்றியுடன் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமானின் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம்





ஆயிரங்காலத்துப் பயிர் - திருமணம்
# திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்
# போஸ்கோ

இல.610/3(252) பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக) தொ.பே: 021 222 0370



# Lap City

**Laptop** கணினிகளுக்கான **NALIN**னின் பிரத்தியேக காட்சியறை
**01.08.2011 இருந்து பரமேஸ்வராச்சந்தியில்**



**Special Offer:**
Dual core Laptop 47,000 ரூபாவிலிருந்து
Core 2 due, i3, i5 Lap top அனைத்தும்
01.08.2011 முதல் 02.08.2011 வரை
சலுகை விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Microsoft Windows 7 genuine 6,000/=
KASPERSKY 1, 400/=

Laptop: Hard disk, Ram, Cooler pad என்பவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

hp DELL TOSHIBA lenovo COMPAQ acer


→ புதிய வகை Lap Top கள்
→ மலிவான விலையில்
→ அங்கீகாரம்பெற்ற உத்தரவாதம்
→ சிறந்த விற்பனையின்பின் சேவை

மேலதிக விபரங்களுக்கு: www.nit.lk

NALIN Information Technologies Pvt Ltd.
195/4, Palaly Road, Parameswara Junction, Jaffna.
T.P: 021-2221166, 0777667974 Fax: 021-222 4994
e.mail - nalin@nit.lk www.nit.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் ஸ்ரீ வீரமாபிடாரி
# தேர்த் திருவிழாச் சிறப்பு



## மஹோற்சவ குருவின் ஆசியுரை



இறைவன் தனது திருநடனத்தில் பஞ்சகிருத்தியங்களையும் காட்சி தந்து அருளுகிறார். இவ்வைந்தொழில்களையும் காட்டுவது மகோற்சவம் ஆகும். கொடியேற்றம் படைத்தலையும், இடையில் நடைபெறும் உற்சவம் காத்தலையும், இரதோற்சம் அழித்தலையும், தீர்த்தோற்சம் சூர்ணோற்சவம் போன்ற ஏனைய உற்சவங்கள் அருளல், மறைத்தல் போன்றவற்றையும் குறிக்கும். இதில் இன்று நடை பெறும் தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும் . ஆணவ மலத்தைப் போக்கி அருள் பாலிப்பதுதான் திருவிழாவின் பொருள். இறைவன் திரிபுரதகனம் செய்வதற்கு இரதத்திலே சென்றார் என்பது புராணக்கதை. இதன் மூலமாக இரதோற்சவத்தின் பெருமையை நாம் அறிந்திருக்கின்றோம். எனவே இன்று ஆனைக்கோட்டை கொக்குவில் மேற்குப் பதியில் வீற்றிருந்து தன்னை நாடிவரும் அடியவர்களின் குறைதீர்த்து அருளும் வீரமாபிடாரி அம்பிகையானவள் இரதம் ஏறி அகங்காரத்தை அழித்து நல்லருள்புரிய வேண்டுமென அவளின் பாதக்கமலங்களைப் பணிந்து அனைத்து அடியார்களுக்கும் நல்லாசி கூறுகின்றேன்.

''வேதரிவாகமஞானாபானு'', ''கிரியாசாகரம்''
பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக்குருக்கள் (பர்வதவர்த்தனி அம்மன் ஆலய பிரதம குரு) உரும்பிராய்.

## ஆலய நித்திய குருவின் ஆசியுரை



நவசக்தி நாயகியாக விளங்கும் ஆதிபராசக்தியானவள் ஆனைக்கோட்டை கொக்குவில் மேற்குப் பகுதியில் வீரமாபிடாரி அம்பிகையாக வீற்றிருந்து தன்னை நாடிவரும் அடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லாட்சி புரிந்து வருகிறாள். இன்று மகோற்சவத்தின் இரதோற்சவ தினம் ஆகும். அம்பிகையானவள் அலங்கார பூஜிதையாக இரதத்தில் ஏறி வீதியுலா வருகின்றாள். இந்த வேளையில் அம்பிகை ஏறி வருகின்ற இரதத்தின் திருக்கயிற்றை எமது கரங்களில் பற்றி இழுத்து எமது பிறவித் துன்பத்தை நீக்குவோமாக. இந்த வேளையில் அடியார்கள் அனைவரும் கலந்து அம்பிகையின் திருவருட் பேற்றை பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்று அவளது திருவடிக் கமலத்தைப் பிராத்தித்து நல்லாசி கூறுகிறேன்.

''அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்''
''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெல்லாம்''

பிரம்மஸ்ரீ ர.கேசவசர்மா (பிடாரி அம்பாள் தேவஸ்தானம்) ஆனைக்கோட்டை.
rkesavan12@gamil.com

## தேரேறிவந்திடும் தேசநாயகியே! பூரத்து நாயகியே பிடாரி அம்பிகையே!



இந்து சமுத்திரத்தின் முத்தாய் விளங்கும் ஈழவளநாட்டின் வடபால் விளங்கும் யாழ்பாணப் பட்டணத்தின் கொக்குவில் மேற்கில் ஆனைக்கோட்டை எல்லையில் அற்புத நாயகியாய் விளங்கிடும் பிடாரி அம்பிகையின் மஹோற்சவம் சிறப்புற விளங்கிடும் நிலையில் இன்று திங்கள் வளர் பிறையில் அடியார்களைப் பீடித்த பீடைகள் என்னும் வறுமைபோக்கி துன்பம் போக்கி வாழ்வில் வசந்தம் தந்திடும் அம்பிகையே சரணம்.

மஹோற்சவம் ஐந்தொழில் தத்துவம் உணர்திய நிலையில் மண்ணில் வாழ்வதற்கு தனு, கரண, புவன, போகம் தந்திட்டு காத்தும் இன்று தேரேறி ஆணவம் முதலான அகந்தை, மமதைகளைப் போக்கி அடியவர்களை மண்ணில் நல்லவண்ணம் வாழ அருள் காட்டிட வேண்டுகிறேன்.

''தேசமெல்லாம் இயக்கிடு சக்தியாய்
தேச நாயகன் இடப்பாக சக்தியாய்
தேரேறி வந்து இடர்களையும் சக்தியாய்
தேற்றிவிடும் ஆனைக்கோட்டைப் பிராரி சக்தியே சரணம்''
வணங்கித் துதிக்கிறேன்.

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்,
க.நித்தியதசீதரன், இந்துதர்மாசிரியர்.

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



எல்லாம் வல்ல ஆதிபராசக்தியாக விளங்குகின்ற அம்பிகை பிடாரி அம்பாள் இன்று தேர் மீது ஆரோகணித்து திருவருள் பாலிக்கின்றாள். நம்பிவரும் அடியவரின் கொடிய வினை தீர்க்கும் அன்னையாக ஆனைக்கோட்டைப் பதியிலே எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கும் அம்பாள் இன்று அநியாயங்களையும் அக்கிரமங்களையும் வேரோடு தகர்த்து அழித்திடத் தேரில் புறப்படுகின்றாள்.

''அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாமே! நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு'' என்பதற்கிணங்க இந்த அம்பாளை வழிபடும் அடியவர்கள் அனைவரும் நல்ல வண்ணம் மங்களகரமாக வாழ அம்பாள் அருள்புரிய வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''


நல்லை ஆதீன முதல்வர்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

## துன்பங்களும் துயரங்களும் அழியட்டும்



ஈழ மணித்திருநாட்டில், சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தில், தொன்மை மிக்க பல அம்பாள் ஆலயங்களில் வண்.வடமேற்கு சிறி வீரமாபிடாரி அம்பாள் ஆலயமும் ஒன்று. இந்த உலகின் உயிரோட்டத்துக்கு சக்தியே காரணம். இன்று தேரேறிவரும் அம்பாளின் வடம் பிடித்து இழுத்து துன்பங்களையும் துயரங்களையும் போக்க ஆயிரக்கணக்கான பக்தர் வருவர். அன்பும் அறமும் தர்மமும் இந்த நாட்டில் இருந்து ஓடி விட்டதோ என்று எண்ணும் வகையில் சமூகம் சீரழிந்து வாடிவதங்கி நிற்கின்றது. சங்காரத் தொழிலுக்குத் தேரேறி வரும் தாயே எம் மண்ணில் நிலவும் சீரழிவுகளை நீக்கி பண்பும் பாசமும் தர்மமும் தழைத்தோங்க நான் என்னும் அகங்கார ஆணவத்தை அழித்துவிடு. துன்பங்களையும் துயரங்களையும் போக்கி விடு. அன்பும் அறமும் தழைத்தோங்க உனது அருளாட்சியைக் காட்டி விடு. எல்லாமக்களின் வாழ்வும் சிறக்கட்டும் என இந்த வேளையில் பிராத்திக் கிறோம்.

அ.குமாரவேல்,
தலைவர் பரிபாலனசபை-
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.



## தல வரலாறு

திருக்கோயில்களால் சிறப்புப் பெற்றது நமது ஈழவளநாடு. இ
நாட்டைச் சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்கள், சக்தி ஆலயங்
என்பன பெரிதும் அழகுபடுத்துகின்றன என்றால் அது மிகையாக
அந்த வகையில் சக்தி ஆலயங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த புரத
ஆலயமாக யாழ்.நகரை அண்மித்த ஆனைக்கோட்டை, கொக்கு
பகுதி எல்லையில் வீரமாபிடாரி அம்பாள் ஆலயம் அமைந்துள்
பொதுவாகக் கிராமத்தின் எல்லைத் தெய்வமாக விளங்கும்
பிகைக்குப் பிடாரி என்றும் ஒரு பெயருண்டு. இந்தப் பெயர் கே
தற்கு ஒரு மாதிரியாக இருந்தாலும் உண்மையில் இயற் பெயர் பீ
ஹாரி என்பதாகும் அதாவது

பீடை- தீவினை அல்லது துன்பங்கள்
ஹாரி- விரட்டுபவள்

அதாவது பீடைகளை- துன்பங்கள், தீவினைகளை நெருங்கா
விரட்டுபவள் என்ற பெயரே பீடைஹாரி என்று மருவிவிட்டது
பதுதான் உண்மை.

இந்த ஆலயமூர்த்தி வழிபாடு மிகவும் தொன்மைவாய்ந்தத
காணப்படுகின்றது. கி.பி.1475இல் சிங்கை பரராசசேகரன் நல்
ரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்தபோது பல ஆல
களைப் புனரமைத்தான் என்று அறியமுடிகின்றது. ஆட்சி மாற்
தினால் அந்நியர்களான பறங்கியர் தம் மக்களின் மனதை புண்ப
செய்யும் வகையில் யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமாக 500 ஆ
யங்களை இடிப் பித்தார்கள் என்றும் அதில் ஓர் ஆலய அம்மன்
கிரகத்தைக் சிவன் கோயில் குளத்திலேயே இட்டுச் சென்றனர்
றும் அறியமுடிகின்றது. இங்கிருந்து வழிபடும் அடியவர் ஒருவ
கனவில் அம்மன் தோன்றி, தான் இருக்கும் இடத்தை உணர்த்தி அ
அடியவரும் அம்பிகை உணர்த்திய இடத்தைச் சென்று பார்க்கை
அம்பிகையின் உருவம் கிடைக்க அவர் அகமிகமகிழ்ந்து
மாட்டுவண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து தற்போதுள்ள இடத்
வைத்து வழிபட்டார் என்றும் கூறுவர். இதைவிட சங்கிலி அர
போர் புரிய முன்னர் இந்த அம்பிகையை வழிபட்டே போருக்குச்
வது வழக்கம் என்றும் கர்ண பரம்பரைக் கதைகளால் அறிய
கின்றது.காலப் போக்கில் இந்த ஆலயத்தில் பலியிடும் வழக்கம்
பட்டது.

1975ஆம் ஆண்டில் இந்த ஊர்ப் பெரியவர்களின் முயற்சிய
பலியிடும் வழக்கம் நிறுத்தப்பட்டு கொட்டிலுடன் கூடிய ஆலய
இருந்த ஆலயம் ஆகம விதிக்கமைய கருவறையுடன் கூடிய ஆ
மாக மாற்றப்பட்டது. காலப்போக்கில் அன்பர்கள், அடியவர்
அனைவரின் ஒத்துழைப்பு விடாமுயற்சி என்பவற்றின் காரண
உன்னத வளர்ச்சி அடைந்து பெரிய ஆலயமாகத் தேரோடும் ஆ
மாக மாறி.தற்போது அழகிய பஞ்சதள இராஜகோபுரத்துடன் க
சியளிக்கின்றது என்று உணருகையில், இந்த வளர்ச்சிக்கு வித்தி
வர்களை மனம் நிறைந்து பாராட்டாமல் இருக்க இயலாது. இ
ஆலயத்துக்கு இந்தக் கிராமத் தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, அ
கிராமங்களில் இருந்தும் ஏன் பல்வேறு இடங்களில் இருந்தும் அ
னையைத் தேடி, நாடி, ஓடி வருபவர்கள் ஏராளம் ஏராளம்.

இந்த ஆலயத்தில் நிறைவுக்கு- அன்னதான மண்டபமொன்
அமைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டும். அதுவும் அ
கையின் அருட்கடாட்சத்தினால் விரைவிலேயே நிறைவு பெறும் எ
நம்பிக்கையுடன் அகில உலகுக்கும் நாயகியான அவளின் பா
பணிந்து நிறைவுசெய்கின்றோம்.

## தேர் பவனி வரும் பிடாரி அம்பிகையே

உலகெங்கும் வாழும் அனைத்து அடியவர்களுக்கும் ஆடித் தேரேறி
பிடாரி அம்பிகையின் அருள் காட்சி கிடைக்க வேண்டுகிறோம். தீய வினை
யாவும் நீங்கி, அல்லல்பட்டு துன்பப்பட்டு வாடும் மக்களின் குறைகளை
இன்ப வாழ்வு கிடைக்கப்பெற்று அம்பாளின் திருவருள் யாவருக்கும் கிடை
வேண்டும் என்று பிடாரி தாயவளை வேண்டுகிறோம்.

தேர்திருவிழா உபயக

## இந்து இளைஞர் மன்றத்தினரின் ஆசிசெய்

வேண்டுவோர் வேண்டும் வரங்களை கொடுக்கும் பிடாரித் தாயே ''ஆ
தேர் ஏறி'' அடியார்களின் குறைகளை நீக்கி, உலகெல்லாம் வாழும் அடியவர்
இன்புற்று ஆனந்த பெரு வாழ்வு வாழ வேண்டுகிறோம்.

இந்து இளைஞர் மன்றம், பிடாரி அம்பாள் ஆல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டாரி அம்பாள் ஆலய

## ...பு மலர் - 01.08.2011



நாடு. இந்த
ஆலயங்கள்
கையாகாது.
ந்த புரதான
கொக்குவில்
மந்துள்ளது.
ாங்கும் அம்
யர் கேட்ப
யர் பீடை

ந...ங்காமல்
...ட்டது என்

ய்ந்ததாகக்
ரன் நல்லூ
ல ஆலயங்
சி மாற்றத்
புண்படச்
க 500 ஆல
ம்மன் விக்
ன்றனர் என்
ஒருவரின்
ர்த்தி அந்த
ர்க்கையில்
...
இடத்தில்
லி அரசன்
க்குச் செல்
அறியமுடி
ழக்கம் ஏற்

யற்சியால்
ஆலயமாக
டிய ஆலய
டியவர்கள்
காரணமாக
டும் ஆலய
டன் கர்ட்
வித்திட்ட
ாது. இந்த
ல்ல, அயல்
ந்தும் அன்
ம்.
பமொன்று
வும் அம்பி
றும் என்ற
ின் பாதம்

**...கயே**
தேரேறிவரும்
ய வினைகள்
றகளை நீக்கி
தம் கிடைக்க

உபயகாரர்.

**...செய்தி**
யே "ஆடித்
அடியவர்கள்

ள் ஆலயம்.

## தேரேறி நீ வந்து எம்மினத்தின் துயர் தீர்க்கப் பிரார்த்திப்போம்


**THISANY Travels for Hire**
தாவடி தெற்கு, கொக்குவில்
T.P. 0771559834 - 0778663697.

**தயாளினி வீடியோ அன் பான்ஸி ஹவுஸ்**
பிடாரி கோயிலடி
கொக்குவில் மேற்கு

**மணி ஸ்ரோர்ஸ்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு

**A.B.S. Jeevan**
வெல்டிங் வேக்ஸ்சொப்
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**குகன் களஞ்சியம்**
வராகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு

**அம்பாள் சைவ உணவகம்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு

**சக்தி பியூட்டி பார்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில்
மேற்கு.

**பரணி கிறீம் ஹவுஸ்**
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**துவாரகேஸ்வரன் பூமாலை**
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

**ஷண்கபே**
969, கே.கே.எஸ்.வீதி,
அரசடிப் பிள்ளையார்
கோயிலடி, யாழ்ப்பாணம்.

**ரூபன் களஞ்சியம்**
கேணியடி,
கொக்குவில்.

**ஜெயலக்ஷன் பான்ஸி ஹவுஸ்**
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**திஷானன் வாகனசேவை**
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்
தொபே: 0776611764,
0214591218

**அம்பிகை களஞ்சியம்**
பிடாரி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு

**சந்திரா ஸ்ரோர்ஸ்**
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை

**வெஸ்ற்வண் கொமினிக்கேசன்**
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

**வெஸ்ரா நெல்லிக்கிறஸ்**
ஆனைக்கோட்டை.

**பிடாரி களஞ்சியம்**
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

**யாழ்ரா ஹோட்டல்**
830, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்

**கொழும்பு எசன்ஸ் ஹவுஸ்**
பெரியகடை,
யாழ்ப்பாணம்

**பரஞ்சோதி ஸ்ரோர்ஸ்**
(தீபன் கடை)
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்

**ஏசியன் அக்கடமி**
கேணியடி,
கொக்குவில் மேற்கு

**கனேசா களஞ்சியம்**
(சந்துரு தேயிலை)
59, முருகமூர்த்தி வீதி,
யாழ்ப்பாணம்

**கீத்தா றேடர்ஸ்**
கட்டடப் பொருள்,
பெயின்ட் வகைகள்
விற்பனையாளர்
மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம்

**யாழ்க் கல்லூரி**
தரம் 01 முதல் O/L வரை
பயிற்றப்பட்ட கல்லூரி
ஆசிரியர்,சிறப்பான பட்டதாரி
ஆசிரியர்கள்
பொன்னையாலேன்,
ஆனைக்கோட்டை.

**ஆரணி நகைத்தொழிலகம்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு

**எரிக் கணேஷ் மூக்குக் கண்ணாடி அகம்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
கிளை.கே.கே.எஸ் வீதி, கொக்குவில்,
கே.கே.எஸ் வீதி சுன்னாகம்

**இலங்கை ராசா ஸ்ரோர்ஸ் V.N.T.**
67, மேற்கு மார்க்கட்,
பெரியகடை,
யாழ்ப்பாணம்

**சிறி அம்பாள் வெல்டிங் வேக்ஸ்**
கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி

**செல்வி நகையகம்**
1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு

**பிடாரி அம்பாள் சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும்**

**பூரணி நகை மாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

**நந்தினி வெதுப்பகம்**
தரமானதும் சுவையானதுமான
பேக்கரித் தயாரிப்புக்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற நாடவேண்டிய இடம்.
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

**மகாநதி ஜூவலறி**
72A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

**தெய்வம் ஸ்ரோர்ஸ்**
கைவினைப் பொருள்களின்
மொத்த/ சில்லறை விற்பனையாளர்
இல.84, மேற்கு
மார்க்கட், யாழ்ப்பாணம்.

**தேவி சவுண்ஸ் அன் தேவி பில்டிங் கொன்ராக்ரர்**
அராலி வடக்கு, படத்தடி, அராலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி பூவலிங்கம் யோகராணி



உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், 56, Rue Myrha, Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூவலிங்கம் யோகராணி 25.07.2011 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசையா-காலஞ்சென்ற நாகரெத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் -பாக்கிய லெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் பூவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கஜனன், கஜனி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற இராமநாதன், வரதராசன், புஸ்பராணி, செல்வராணி மற்றும் சோதிமலர், விஜியகலா, சசிக்குமார் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிவபாதலிங்கம், புஸ்பராசா, சந்திரபாலன்மற்றும்கேதீஸ்வரி, பஸ்மராணி, புஸ்பராணி, சரோஜினி, யோகராணி, சூரியபிரபா, சிவகுமார், இராசகுமார், வற்சலா ஆகியோரின் மைத்துனியும், மஞ்சுளா, இந்திராணி, புஸ்பராணி, காலஞ்சென்ற இராசகுமார் மற்றும் இராசரத்தினம், மோகன், சிங்கராசா, அருள்லிங்கம் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.08.2011) திங்கட்கிழமை GAMBETTA மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.சிவகுமார்
(மைத்துனர்-ஆசிரியர்,
உடுவில் மகளிர் கல்லூரி).

*யாமாச் சந்தி,
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.*

(636ெ) (21,25)

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்
## பயிற்சி கிளை முகாமையாளர்

**மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**1. தகைமை:-**
கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (சாதாரணம்)/ இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ தூயகணிதம்/வர்த்தக கணிதம், தமிழ் பாஷை ஆகிய பாடங்கள் உள்ளடங்கியதாக க.பொ.த.(சாதாரணம்) தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி.

**2.வயது:**- 18-45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**3.வேதனம்:**- நாள் ஒன்றுக்கு ரூ.300/=

தங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை *பொது முகாமையாளர், சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்* என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ 10.08.2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

29.07.2011 **பொது முகாமையாளர்.**

(அ/574794) (39)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1314 சிகப்பு

விருச்சிகம்

09 14 35 38 29-07-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 7,146,150/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 264,832 | 20/- | 5,296,640/- |
| 2 இலக்கங்கள் | 24,331 | 40/- | 973,240/- |
| 1 இல. + லக்கினம் | 24,113 | 60/- | 1,446,780/- |
| 2 இல. + லக்கினம் | 2,214 | 200/- | 442,800/- |
| 3 இலக்கங்கள் | 651 | 1000/- | 651,000/- |
| 3 இல. + லக்கினம் | 61 | 10,000/- | 610,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,146,150/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 10,220,460/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 713 | | 655,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 316,919 | | 10,875,460/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 7,737,800/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கும்பம்

31 39 45 53

ஜக்பொட் பரிசு ரூபா. 400,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 710 | 500/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 400,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 713 | | 655,000/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 500,000/-

## தென்கிழக்குப் பல்கலை. பேரவை உறுப்பினராக பேராசிரியர் சண்முகதாஸ்

யாழ்ப்பாணம், ஓக.1

யாழ். பல்கலைக்கழகத்தின் தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகப் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-313)

## விளையாட்டு விழா

பரந்தன், ஓக.1

பரந்தன் முரசுமோட்டை அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை சி.ஏ.சி.எம். முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன் பள்ளி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வன்னி திட்ட இணைப்பாளர் த.பூதராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி டனிஸ் அகதிகள் பேரவையின் பதில் அதிகாரி சு.ஜெயசுதா கலந்துகொள்வார். (ம- 313)

## கல்விக் கருத்தரங்கு

கொழும்பு அருள் கல்வி வட்டத்தால் சாதாரணதர மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் தினங்களில் காலை 8 மணி முதல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

கணிதம், தமிழ், விஞ்ஞானம், சரித்திரம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த பிரபல ஆசிரியர்கள் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

வினாவிடைப் பாடப் புத்தகங்களும் இதில் வழங்கப்படவுள்ளன.

முற்றிலும் இலவசமாக நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் மாணவர்களைப் பங்குபற்றிப் பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

## திருமுறை முற்றோதல்

இந்து சமய பேரவையின் அனுசரணையுடன் பன்னிரு திருமுறைகள், திருப்புகழ் முற்றோதல் பெருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் தொடர்ந்து இல. 144, பலாலி வீதி, கந்தர்மடத்தில் உள்ள இந்துப் பேரவையில் நடைபெறவுள்ளது. (ம-313)

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் நாகராஜா

(இளைப்பாறிய ஆசிரியை -
அமிர்தாம்பிகை வித்தியாசாலை,நுணாவில் கிழக்கு)



உசனைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டி I/1/G தொடர்மாடியில் வசித்தவருமான திருமதி பூரணம் நாகராஜா 30.07.2011 சனிக் கிழமை மாலை கொழும்பில் காலமானார். அன்னார் நாகராஜா (C.E.B) இன் பாசமிகு துணைவியாரும், காலஞ்சென்றவர்களான(உசன்) மாணிக்கம்-பாறுப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், ரவீந்திரன், குமுதினி, சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும், மனோகரன், வக்சலா ஆகியோரின் அன்பு மாமியும், பூஷிதா, லோஷிதா, தேஷிதன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், அனோஜனின் அன்பு அப்பம்மாவும் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் பரமநாதன், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பரிமளம் பவளநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான செல்வராசா, அன்னலக்ஷ்மி மற்றும் நவரத்தினராஜா, ராஜலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (31.07.2011) ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் இன்று (01.08.2011) திங்கட்கிழமை வரை அவரது பம்பலப்பிட்டி தொடர்மாடி I/1/G இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2011) திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெற்று பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு பிற்பகல் 4.30 மணியளவில் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டுத் தகனக் கிரியைகள் 5 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
R. *நாகராஜா*
S.P. *மனோகரன்* (பாபு)

## மகளிருக்கான விடுமுறைக்கால 15 நாள் வகுப்புகள்

- வீட்டிலிருந்துவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
- வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
- இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

**கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (HAIR DRESSING & STYLING)**

50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 வித முடி வெட்டுதல். **தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான** பயிற்சி, Perming தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

✿ Facials, கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் Waxing, எவ்வித சிரமமுமின்றி **தமக்குத்தாமே** Facial செய்வதற்கான பயிற்சி.

இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✿ தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 10-08-2011 புதன் காலை 10.00 மணி**

## கலாலயா

*பயிற்சியகம்*

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

*☞ மேலும் விபரங்களை பிப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*

## மனமார்ந்த நன்றிகள்



வலிகாமம் மேற்குப்
பிரதேச சபைத் தேர்தலில்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச்
சார்பாகப் போட்டியிட்ட
என்னை (இல.6 இற்கு
வாக்களித்து) வெற்றி
பெறச் செய்து என் இனிய
வாக்காளப்
பெருமக்களுக்கும்
வழிநடத்திய
என் அன்புக்குரிய
பேராசியர் சி.க.சிற்றம்பலம்
அவர்களுக்கும்
எனது மனமார்ந்த
நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்ளுகின்றேன்.

**க.ஜயலிங்கம்,**
**அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org